B.COM
Year – I
Semester – II
Paper - I

# Tamil - II


## Course Coordinator
## Ms. R. Subashini
## Assistant Professor


## Centre for Distance and Online Education

श्रीचन्द्रशेखरेन्द्रसरस्वतीविश्वमहाविद्यालयः

**Sri Chandrasekharendra Saraswathi Viswa Mahavidyalaya**

Deemed to be University u/s 3 of UGC Act 1956 - Accredited with 'A' grade by NAAC

**Enathur, Kanchipuram 631561.**

Sponsored and run by Sri Kanchi Kamakoti Peetam Charitable Trust

# அடித்தளப் படிப்பு

# தமிழ்

## இளநிலைப் பட்டப்படிப்புகள்

## முதலாமாண்டு


தொலைதூரக் கல்வி நிறுவனம்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ மஹாவித்யாலயா

நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,

ஏனாத்தூர் , காஞ்சிபுரம் 631 502

தமிழ்நாடு, இந்தியா.

இளநிலைப் பட்டப்படிப்புகள்

அடித்தளப் படிப்பு

முதலாமாண்டு பருவம் II தமிழ்

ஆக்கியோர்

தமிழ்த்துறை

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஸ்வ

மஹா வித்யாலயா

நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,

ஏனாத்தூர், காஞ்சிபுரம் 631 502

தமிழ்நாடு, இந்தியா.

இளநிலைப் பட்டப்படிப்புகளுக்குரிய

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

தமிழ் - தாள் - I

**பாடத்திட்டம் ( 2024- 2025 )**

அலகு-1

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. சிற்றிலக்கிய வரலாறு
3. கிருத்துவ இலக்கிய வரலாறு

அலகு - 2

1. நந்திக்கலம்பகம்
2. முத்தொள்ளாயிரம்
3. தமிழ்விடு தூது

அலகு - 3

1. திருக்குற்றாலக்குறவஞ்சி (குறத்தி மலைவளம் கூறுதல்)
2. முக்கூடற் பள்ளு (நாட்டு வளம்)
3. இயேசு பிரான் பிள்ளைத் தமிழ் (அறிமுகம் மட்டும்)

அலகு-4:

1. சீறாப்புராணம் (மானுக்குப் பிள்ளை நின்ற படலம்)

அலகு - 5: மொழிப்பயிற்சி

1. இலக்கணக்குறிப்புகள்:
   பண்புத்தொகை,வினைத்தொகை,உம்மைத்தொகை,அன்மொழித் தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை (பாடப்பகுதி சொற்கள் மட்டும் )

2. ஒருபொருள் குறித்த பல சொற்கள்
3. பல பொருள் குறித்த ஒரு சொல்

## இளநிலை பட்டப்படிப்புகளுக்குரிய

## முதலாம் ஆண்டு - இரண்டாம் பருவம்

## தமிழ் -தாள் I

## பாடப்பகுப்பு


| அலகு | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| அலகு1 | 1.1 தமிழ் இலக்கிய வரலாறு | 5-8 |
| | 1.2 சிற்றிலக்கிய வரலாறு | 9- 23 |
| | 1.3கிருத்துவ இலக்கிய வரலாறு | 24-33 |
| அலகு2 | 2.1 நந்திக்கலம்பகம் | 34-38 |
| | 2.2 முத்தொள்ளாயிரம் | 39- 43 |
| | 2.3 தமிழ் விடு தூது | 44-48 |
| அலகு3 | 3.1திருக்குற்றாலக்குறவஞ்சி (குறத்தி மலைவளம் கூறுதல்) | 49 -53 |
| | 3.2முக்கூடற் பள்ளு (நாட்டு வளம்) | 54 - 62 |
| | 3.3 இயேசு பிரான் பிள்ளைத் தமிழ் (அறிமுகம் மட்டும்) | 63 |
| அலகு4 | 4.1.சீறாப்புராணம்<br>(மானுக்குப் பிள்ளை நின்ற படலம்) | 64 -73 |
| அலகு5 | மொழிப்பயிற்சி<br>1. இலக்கணக்குறிப்புகள்: பண்புத்தொகை,வினைத்தொகை, உம்மைத்தொகை,அன்மொழித்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை (பாடப்பகுதி சொற்கள் மட்டும் ) | 74-76 |
| | 2. ஒருபொருள் குறித்த பல சொற்கள் | 77 |
| | 5.3 பல பொருள் குறித்த ஒரு சொல் | 78-79 |
| | பயிற்சி | 80-82 |
| | மாதிரி வினாத்தாள் | |

# அலகு- 1

## 1.1 இலக்கிய வரலாறு

இலக்கியம் என்பது இலக்கை (குறிக்கோளை) இயம்புவதாகும். சமுதாய வாழ்வின் பிரதிபலிப்பாக அமைகிறது . ஓர் இலக்கியம், தான்தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, அரசியல், சமய நிலை முதலானவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ உணர்த்தி நிற்கும். மக்களின் உணர்வுக்கு உவகையளிப்பது கலை. நுண்ணிதின் உணர்ந்து மகிழுமாறு திகழ்வது நுண்கலையாகும். அத்தகைய நுண்கலைகளுள் இலக்கியமும் ஒன்று.

காலந்தோறும் இலக்கியங்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. சங்ககாலத்தில் தோன்றிய இலக்கியம் நாகரிகம், பண்பாடு, அரசியல், சமய நிலை மாற்றங்களை அறிந்து கொள்ள உதவும் வரலாற்றுப் பெட்டகங்களாக இலக்கியங்கள் உள்ளன. இத்தகைய சமுதாய வரலாற்றை இலக்கிய வரலாற்றுப் பார்வையில் பார்க்க முதன்முதலில் வழி வகுத்தவர் கா.சு. பிள்ளை. வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல் இக்காலத்தில் தோன்றிய இலக்கியம் வரை இலக்கியங்கள் பல வகைகளாக உள்ளன.ஒரு சமுதாயத்தில் காலந்தோறும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு

இருக்கின்றன. அதற்கு ஏற்ப இலக்கியங்களும் தன் வடிவத்தை மாற்றிக் கொள்கின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கியங்களை ஏதும் தற்போது கிடைப்பதில்லை. அதற்காக அக்காலத்தில் இலக்கியமே தோன்றவில்லை என்று எடுத்துக் கொள்வது தவறாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் வாழ்வில் நாள்தோறும் நடந்த நிகழ்வுகளையும், கண்களால் கண்ட புதிய காட்சிகளையும் குகைகளில் ஓவியங்களாகத் தீட்டியுள்ளனர்.

1.1.1 **சங்க கால இலக்கியம்** :

பாண்டியர்கள் சங்கம் அமைத்துத் தமிழ்மொழியினை வளத்தனர் என்ற செய்தியினை இறையனார் களவியல் உரை கூறுகிறது. இச்சங்கத்தில் ஆயிரக்கணக்கான புலவர்கள் அமர்ந்து பல்வேறு இலக்கியங்களைப் படைத்து தமிழுக்கு வளம் சேர்த்துள்ளனர். இவ்விலக்கியங்கள் அனைத்தும் சங்க இலக்கியம் என்னும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றன. இவை தமிழ் சமுதாயத்தின் வரலாற்றை அறிய உதவும் வரலாற்றுப் பெட்டகங்களாக அமைகின்றன. இவற்றில் மிக முக்கியமான நூல்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். சங்க இலக்கியமானது திணை இலக்கியம் என்றும் வழங்கப்படும்.

எட்டுத்தொகை

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று

இத்திறத்த எட்டுத் தொகை

பத்துப்பாட்டு நூல்கள்

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து.’

1.1.2 **சங்கம் மருவிய கால இலக்கியம்**

சங்க காலத்திற்குப் பின் தோன்றிய இலக்கியங்கள் சங்கம் மருவிய கால இலக்கியங்கள் ஆகும். இவை பெரும்பாலும் வெண்பா யாப்பிலே அமைந்துள்ளன. சமுதாயத்திற்குத் தேவையான அக அறத்தையும் புற அறத்தையும் இவ்விலக்கியங்கள் கூறுகின்றன எனவே சங்கம் மருவிய கால இலக்கியங்கள் நீதி இலக்கியங்கள் என்றும் அற இலக்கியங்கள் என்றும் வழங்கப்படுகின்றன.

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்

பால் கடுகங் கோவை பழமொழி - மாமூலம்

இன்னிலைய வாங் காஞ்சியுடன் ஏலாதி என்பவே

கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு

**1.1.3 பக்தி இலக்கியம்**

பல்லவர் காலத்தில் தோன்றிய இலக்கியங்களைப் பக்தியை இலக்கியங்கள் என்று அழைக்கிறோம்.சங்கக் காலத்திற்குப் பின் புறச் சமயங்கைான சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. மன்னர்கள் சிலர் சமண மதத்தை ஆதரித்தனர். எனவே சைவமும் வைணவமும் மக்களிடையே தன் செல்வாக்கை இழக்க நேரிட்டது. இந்நிலையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி சைவ சமயத்தையும் வைணவத்தையும் மீண்டும் மிளிர செய்து. தமிழின் செல்வாக்கை உயர்த்தினர். எனவேதான் தமிழ் பக்தியின் மொழி எனத் தனிநாயகம் அடிகள் கூறுகிறார்.

நாயன்மார்களின் பன்னிரு திருமுறை சைவ சமயம் சார்ந்ததாகும், தேவாரம் மூவர் என்று வழங்கப்படும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் நாயன்மார்களின் சிறப்பு வாய்ந்தவர்கள்.ஆழ்வார்களின் நாலாயிர திவ்ய பிரபந்தம் வைணவ சமயத்தைச் சார்ந்ததாகும். பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்ய பிரபந்தமானது தமிழ் வேதம் என்று அழைக்கப்படுகிறது.

1.1.4 **காப்பிய இலக்கியம்**

சோழர் காலம் காப்பிய காலம் என்று வழங்கப்படுகிறது. காப்பியம் என்பது தன்னிகரில்லாத தலைவனைக் கொண்டு இருக்க வேண்டும் எனத் தண்டியலங்காரம் கூறுகிறது. காப்பியங்கள் சிறு காப்பியம்,பெரும் காப்பியம் என இரு பிரிவுகள் உள்ளன. பெரும் காப்பியம் என்பவை பாட்டுடைத் தலைவனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள முழு நிகழ்வினையும் கூறுவதாகவும், அறம்,பொருள், இன்பம்,வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களையும் கொண்டுள்ளதாகவும் அமையும். சிறுங் காப்பியங்கள் என்பவை அறம், பொருள், இன்பம்,வீடு எனும் நான்கு உறுதி பொருளில் ஒன்று குறைந்து வரும். பாட்டுடைய தலைவனின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வினை மையமாகக் கொண்டு காப்பியம் அமையும்.

ஐம்பெரும் காப்பியங்கள் : சிலப்பதிகாரம்,மணிமேகலை,சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி

ஐஞ்சிறு காப்பியங்கள் : நீலகேசி, சூடாமணி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம்

இவையே அன்றித் தமிழ் மொழியில் சமயக் காப்பியங்கள், புராண காப்பியங்கள் எனப் பல்வேறு காப்பியம் தோன்றியுள்ளன.

இவ்வாறு தமிழ் இலக்கியமானது சங்க கால இலக்கிய, நீதி இலக்கியக் காலம், பக்தி இலக்கியக் காலம், காப்பிய காலம், சிற்றிலக்கியக் காலம், உரைநூற் காலம் எனக் காலந்தோறும் வளர்ச்சி பெற்றன.

# 1.2 சிற்றிலக்கியம்

தமிழில் நெடும்பாடல்களாய் அமைந்த பிரபந்த வகைகளைச் சிற்றிலக்கியம்' என்றும் குறிப்பிடுகிறோம் இடைக் காலப் பிற்பகுதி முழுவதும் சிற்றிலக்கியச் செல்வாக்கு மிகுதி இதன் தோற்றத்திற்கான வித்தும் வளர்ச்சியும் சங்க காலத்திலேயே காணப்படுகின்றன ஆற்றுப்படை

ஒருதுறையாகவும் தனிப்பெரும் பாடல்களாகவும் அன்றே வளர்ந்தமைந்தன அகப் புறத் துறைகள் தனித்தனிச்சிற்றிலக்கியங்களாகக் கிளைத்தன.

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தம் வழக்காறுண்டெனினும் பன்னூறு வகைமைகள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியம் சார்ந்து வளர்ந்த சிற்றிலக்கிய வகைப் பலவாகும்

'பாட்டியல்' நூல்கள் என்பன சிற்றிலக்கிய வகைமை பற்றியனவாகும் இங்ஙனம் எண்ணிக்கை காணப்படினும் குறிப்பிட்ட சிலவே பெரும் செல்வாக்கும் படைப்புப் பெருக்கமும் கண்டன கோவை, உலா, தூது, பிள்ளைத்தமிழ் என இவ்வாறு பத்துப் பன்னிரண்டில் இவை அடங்கிவிடும்.

சிற்றிலக்கியங்களை மிகுதியாகப் படைத்துப் புகழ் பெற்றவர் பலராவர் குமரகுருபரர், சிவப்பிரகாசர், பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் போல்வார் பலராவர் பாரதியார் ஒருபா ஒருபஃது, நான்மணிமாலை போன்ற சிற்றிலக்கியங்கட்குப் புத்துயிர் தர முயன்றார்.

**1.2.1 பிரபந்தம் என்ற சொல்**

பிரபந்தம் என்ற வட சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது. நன்கு ஆக்கப்பட்டது என்று பொருள் தமிழில் 'யாப்பு' என்பதனோடு ஒக்கும்.அது இலக்கிய நூல்கள் அனைத்தையும் பொதுவாகச் கட்டத்தக்கது அதனால்தான் சிலர் சிறுபிரபந்தம் என்றும் சில்லரைப் பிரபந்தம் என்றும் இவற்றைக் கூறினர் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்னும் போது தமிழிலுள்ள காப்பியம் புராணம் சிறு நூல்கள் அனைத்தையும் உட்கொண்டே அவ்வாறு கூறப்பட்டு வந்தது என்பதைப் பாட்டியல் நூல்களைப் பார்த்துத் தெளியலாம் ஆயினும் பிரபந்தம் என்ற சொல் தமிழ் வழக்கில் சிறிய இலக்கிய நூல்களைச் சிறப்பாகச் சுட்டத் தொடங்கியது. அதற்கு நிகராகச் சிற்றிலக்கியம் என்ற சொல்லும் வழக்காற்றில் வரத் தொடங்கியது இச்சிற்றிலக்கிய நூல்கள் நெடும் பாட்டுப் போல்வன முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலன பல துறை சார்ந்த பெருநூல்கள் போலல்லாது ஒரு சில துறைகளைப் பற்றிய செய்திகளையே உள்ளடக்கின

சுருங்கிய அளவில் அமைவன அதனால் குறைந்த காலத்தில் படித்து முடிக்கக் கூடியன இவை வட்டாரச் சார்பு மிக்கன. சங்ககாலப் பத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை மன்னனை, வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காக, சிறப்பாக எடுத்துரைப்பதற்காக எழுதப்பட்டன.

**1.2.2 காலம்**

ஏனைய இலக்கிய வகைகளைப் போலவே சிற்றிலக்கிய வகையும் தமிழில் காலந்தோறும் கிளைத்து வந்திருக்கிறது ஐந்தருவி போல இடையறாது சிற்றிலக்கியமாகிய அருவி தமிழில் கொட்டிய வண்ணம் இருந்ததென்றுதான் கூறவேண்டும் சங்க இலக்கியத்திலேயே இவ்வகைமைகள் பல கிளைவிட்டன அவற்றுள் தலைமையானது ஆற்றுப்படை. பிற வகைமைகளுக்கான வித்துக்களையும் அங்கே காண்கிறோம் நீதியிலக்கியங்கள் சில சிற்றிலக்கிய வகைமைகளாகவே செழித்தன பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியங்களும் பல்கின அடுத்துத் தலைமை வாய்ந்த பிள்ளைத்தமிழ், தூது, உலாப் போன்ற பல சிற்றிலக்கியங்களும் தழைத்தோங்கின அதன்பிறகு இன்றுவரை முன்னைய மரபுகளின் வழிப்பட்ட சிற்றிலக்கியங்கள் சாத்திர சமயத் தோத்திரப் பாட்டுத்துறைகளனைத்தினும் தோன்றி வந்துள்ளன எனினும் சிற்றிலக்கிய வகை மேலோங்கிய காலம் என்று ஒன்றுண்டல்லவா? பதினைந்து, பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளை நாம் சிற்றிலக்கியக் காலமென்றே அழைக்கலாம் எவ்வாறு பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காலமென்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பிய காலமென்றும் அதன் மேலோங்கிய தன்மையாற் கூறுகிறோமோ அதுபோல் நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம்

முனைவர் நவீ செயராமன் தம் சிற்றிலக்கியச்செல்வம் என்ற நூலில் “தொல்காப்பியர் காலத்தில் இடம் பெற்ற சிற்றிலக்கிய வித்துச்சங்க காலத்தில் ஆற்றுப் படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் கலம்பகமாகக் கிளைத்து, பதினோராம் நூற்றாண்டில் சதகமாகவும் பரணியாகவும் அரும்பிப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்துப் பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” என்று கூறுவது ஓரளவு இதன் வளர்ச்சிப் படிகளைக் காட்டும்.

**1.2.3 வகைத்தொகை**

பாட்டியல் நூல்கள் என்பன இவ்விலக்கிய வகைமைகளின் இலக்கணம் கூற வந்த நூல்களாகும். அவை பல்வேறு எண்ணிக்கைகளைத் தருகின்றன பன்னிரு பாட்டியல் 63 இலக்கிய வகைகள் பற்றியும், வெண்பாப் பாட்டியல் 55 வகைபற்றியும் நவநீதப்பாட்டியல் 53 வகைப்பற்றியும். சிதம்பரப் பாட்டியல் 63 வகைபற்றியும் இலக்கண விளக்கப் பாட்டியல் 90 வகை ப்பற்றியும் கூறுகின்றன.பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை. சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலியவற்றில் 96 இலக்கிய வகைகள் பற்றிக் கூறப்படுகின்றன. எனினும் வரையறை இந்த எல்லைக்குள் அடங்காது என்பதை அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்: பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய நாற்பத்திரண்டு வகைகள் பற்றியும் பாட்டியல் நூல்களில் கூறப்படாத எண்பத்தைந்து சிற்றிலக்கியவகைகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். இவை அகம் பற்றியவை, புறம் பற்றியவை வாய்மொழி இலக்கியம் பற்றியவை, யாப்புப் பற்றியவை பக்தி பற்றியவை என ஐந்து பெரும்பிரிவுகளாக நோக்கத்தக்கவை மேலும் அந்தாதி என முடிவன கோவை என முடிவன, மாலை என முடிவன விருத்தம். மஞ்சரி, பத்து என முடிவன என்றிவ்வாறும் நோக்கத்தக்கன எண்ணிக்கை மிகுதியாயினும் பெயரளவில் நிற்பன. ஒன்றிரண்டு நூல்கள் அளவில் நிற்பன, சிறப்பின்றிக்கிடப்பன பலவாகும். இவற்றுள் தலைமை வாய்ந்தவையாய்க் காணப்படுவன பதினான்கு வகைகளே எனலாம் அவை ஆற்றுப் படை, அந்தாதி, மாலை, பத்து (பதிகம்), கோவை, உலா, பரணி, கலம்பகம். பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இவற்றுள் பள்ளும் குறவஞ்சியும் இசைநாடக இலக்கியத்தின் பாற்படும்..

சிற்றிலக்கியத் தோற்றம் அகப்பாட்டு, புறப்பாட்டு பத்திமைப்பாட்டு, நாட்டுப்புறப்பாட்டு என்ற நான்கின் வழிப்பட்டதாகும். அகத்திணை, துறைகள் ஆகியவற்றைச் சார்ந்தெழுந்தவை பல, கோவை. மடல், கைக்கிளை, தூது என்றாற் போல்வன புறத்திணை, துறை சார்ந்தனவும் பல காஞ்சி, மாலை, கையறுநிலை, ஆற்றுப்படை, திருப்பள்ளியெழுச்சி என்றாற் போல்வன பத்திமையடிப்படையில் அந்தாதிகளாகவும் தமிழ் மாலைகளாகவும் கிளைத்த பாசுரங்கள் மிகப்பலவாகும். கும்மி, பள்ளு, சிந்து என்றாற் போல்வன நாட்டுப்புறப் பாடலடிப்படையில் கிளைத்தன.

தலைமை வாய்ந்தவை தவிரப் பிறவெல்லாம் பொருள். யாப்பு எண்ணிக்கை சார்ந்தே மாறிமாறி வெவ்வேறாய்ப் பெயரிட்டு வழங்கப்படுவனவாயின தொண்ணூற்றாறு சிறு பிரபந்தங்கள் என்ற தொடர் சிறுநூல்களின் எண்ணிக்கைப் பெருக்கத்தை நினைவூட்டும் பொதுவான தொடராகும் பக்திச் சிற்றிலக்கியங்கள் மட்டுமே நூற்றுக் கணக்கில் உள நாட்டுப்புறச் சிற்றிலக்கியங்களோ இன்னும் கணக்கிடப்பட்டில.சிந்து

என்றால் நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து வழி நடைச்சிந்து குள்ளத்தாரா சிந்து என்று நூற்றுக் கணக்காக வேறுபட்ட வையுள

பத்தாகப் புனையும் மரபிலிருந்து இருபது வகைகளாவது தமிழில் கிளைத்திருக்கும் பத்து, பதிகம், ஒருபா ஒருப∴து. இருபா இருப∴து தசாங்கம், பயோதரப்பத்து, இரட்டை மணிமாலை மும்மணிமாலை, நான்மணிமாலை என்றிவ்வாறே எண்ணிப் பார்க்கலாம் அந்தாதிகளும் யமகம் திரிபு சிலேடைகளும் உத்தியடிப்படையின சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் ஒருபடித்தாக எண்ணுவதும் தவறு அவற்றுட்பல உதிரிப்பாடல் நிலையிலிருந்து சிறிது வளர்ச்சி பெற்றன உலா, தூது கலம்பகம், பரணி. மடல் போன்றனவோ சிறு காப்பிய நிலையை எட்டிப் பிடிப்பன

ஒன்றற்கே பல பெயருடையன பெயர் வேறுபாட்டால் யாப்பும் பொருளும் வேறுபடுவன எண்ணிக்கையால் வேறுபட்ட பெயர்களைப் பெறுவன என்றிவ்வாறே நினைத்துப் பார்ப்பின் இலக்கிய உருவாக்கம் பற்றிய அடிப்படையுண்மைகளைத் தெளியலாம் இணைமணி மாலை, இரட்டை மணிமாலை. இரட்டைமணிக்கோவை என்பவற்றையும் மும்மணிமாலை, மும்மணிக்கோவை அல்லது நான்மணிக்கோவை என்பவற்றையும் இவ்வகை மாற்றங்கட்குச் சான்றாகக் காட்டலாம்.

தலைமகனின் ஊரையும் பேரையும் பாராட்டுதற்கே பல சிறு நூல்கள் தோன்றியுள்ளன ஊர் எண் செய்யுள், பெயர் எண்செய்யுள். ஊரின்னிசை, ஊர் நேரிசை, ஊர் வெண்பா பெயர் இன்னிசை. பெயர் நேரிசை பெயர் மாலை என்று பல சிறு நூல்கள் தோன்றின

அந்தாதி என எடுத்துக்கொண்டால் அந்தாதி நூற்றந்தாதி வெண்பா அந்தாதி கலித்துறை அந்தாதி பதிற்றந்தாதி ஒலியந்தாதி. கலியந்தாதி எனப் பல நூல்கள் கிளைத்தன எனினும் பதிற்றுப் பத்தந்தாதி என்ற வகையே பெரும் சிறப்புப் பெற்றுப் பல நூல்களைத் தோற்றுவித்தது சிற்றிலக்கியப் பட்டியல் கீழே தரப்படுகிறது இதில் காணாத பல நூல்களை நம் பாட்டியல் நூல்கள் தருமிடங்களும் உள: இதிலிருந்து விடுபடுவனவும் உள

1. அங்கமாலை
2. அட்டமங்கலம்
3. அரசன் விருத்தம்
4. அனுராகமாலை

5. அலங்காரப் பஞ்சகம்
6. ஆற்றுப்படை
7. இணைமணிமாலை
8. கண்படைநிலை
9. கலம்பகம்
10. காஞ்சிமாலை

11. காப்புமாலை
12. காப்பியம்
13. குழமகன்
14. குறத்திப்பாட்டு (குறவஞ்சி)
15. கைக்கிளைமாலை
16. இயன்மொழி வாழ்த்து , இரட்டைமணிமாலை
17. கேசாதிபாதம்
18. இருபா இருப஼து
19. உலா
20. உலாமடல்
21. உழத்திப்பாட்டு
22. உழிஞை மாலை
23. உற்பவமாலை
24. ஊசல்
25. ஊர் இன்னிசை
26. . ஊர் நேரிசை
27. ஊர்வெண்பா
28. எண் மாலை
29. கடைநிலை
30. கையறுநிலை
31. கோவை
32. சதகம்
33. சாதகம்
34. சின்னப்பூ
35. தாண்டகம்

இன்று 300க்கு மேற்பட்டவை, இனங்காணப்பட்டுள்ளன இவற்றுட் தலைமை வாய்ந்த பன்னிரண்டைப் பற்றிய வரலாற்றை அறிந்து கொள்வது நலம்.

ஆற்றுப்படை

பரிசில் பெற்றான் ஓர் இரவலன் தன் எதிரே வரும் வறுமைப்பட்ட இரவலனை விளித்து, தான் பரிசில் பெற்று வந்த வள்ளலின் சிறப்பையும் வீரத்தையும் கொடைப் பண்பையும் விளக்கி, நீயும் சென்று பரிசில் பெறலாம் எனக்கூறி அங்குச் செல்வதற்குரிய வழிவகைகளைக் கூறி ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படையாகும் இதற்கான இலக்கணம் தொல்காப்பியத்தில் குறிக்கப்படுகிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்** **(தொல், 1037)**

கூத்தர், பாணர்,பொருநர். விறலி ஆகியோரில் பரிசில் பெற்றவர் வழியின்கண் பெறாதவரைக் காண்பது ஒரு பகுதியாகும் செல்வம் பெற்றவன் ஒருபுறமும் வறியவன் மறுபுறமுமாக இவர்கள் உறழத் தோன்றுவர் பெற்றவன் தான்பெற்ற பெருவளம் பற்றியும் பெற்ற முறை தந்தவன் சிறப்பு முதலியன பற்றியும் வழிபற்றியும் கூறிப் பெறாதானும், பரிசில் பெற்றுச் சிறக்குமாறு விவரிப்பான் சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் சிறுசிறு ஆற்றுப்படைத் துறை அமைந்த பாடல்கள் உள

பத்துப்பாட்டில் செம்பாதி ஆற்றுப்படைகள் என்பது முன்னர்க் கூறப்பட்டது அவை திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை கூத்தராற்றுப்படை என்பன அவற்றுள் பொருநராற்றுப்படை காலத்தால் முற்பட்டதாதல் கூடும் என்ற கருத்தும் உண்டு இடைக்காலத்தில் ஆற்றுப்படைகள் வளரவில்லை. பிற்காலத்தில் கச்சியப்ப முனிவர் திருமேனி இரத்தினக் கவிராயர், தொழுவூர் வேலாயுத முதலியார் குலாம் காதிறு நாவலர், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

ஆகியோர் முறையே தணிகை யாற்றுப்படை, புலவராற்றுப் படை, நெஞ்சாற்றுப்படை, புலவராற்றுப் படை, இறையனாற்றுப்படை ஆகியவற்றை எழுதி இவ்வகைமையைப் போற்றினர் இஃது அகவல் யாப்பினையே மேற்கொண்டு பாடப்பெற்று வந்துள்ளது

அந்தாதி

ஒரு பாடலின் இறுதியில் உள்ள எழுத்து, அசை சொல் சீர், அடி யாதானும் ஒன்று அடுத்தப் பாடலின் முதலில் வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும் இறுதிப்பாடலின் முடிவு முதற்பாடலின் தொடக்கமாக இணையும்படி பாடுவதை மண்டலித்து முடிவதென்பர். இது யாப்பு அடிப்படையிலான திறன்களில் ஒன்று தொடை வகைகளுள் ஒன்றென யாப்பு நூலுடையார் விளக்குவர் தமிழில் அந்தாதி இலக்கிய வகையே மிகுதி என்பர் இன்ன பொருள்தான் பாடவேண்டும் என்ற வரையறை இல்லை பெரும்பாலும் விருத்தமே இதன் யாப்பு வடிவமாகும்

பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் ஐங்குறு நூற்றில் பதினெட்டாம் பத்தும் அந்தாதித் தொடையின. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியே முதல் அந்தாதி என்பர்.கி.பி ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளில் இவ்வாறு இவ்விலக்கிய வகை முகிழ்த்து மலர்ந்து மணம் பரப்பியது முதலாழ்வார் மூவரும் பாடிய நூற்றந்தாதிகள் மூன்றும் இக்காலத்து எழுந்தவையே பக்தி இலக்கியத்தில் அந்தாதிகள் மிகுதி சேரமான் பெருமாள் நாயனாரின் பொன் வண்ணத்தந்தாதி குறிப்பிடத்தக்கது பதினாறாம் நூற்றாண்டில் வரதுங்கராம பாண்டியன் பாடிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி குட்டித் திருவாசகம் என்று சிறப்பாக அழைக்கப்படும். இவ்வகை 250 வரை கிடைத்துளது இதுவே சிற்றிலக்கிய வகையில் மிகுதி அடுத்தது பிள்ளைத் தமிழ்.

மாலை

மாலை கோவை என்ற பெயரிலும் தொன்று தொட்டுச் சிறு பிரபந்தங்கள் தோன்றி வளர்ந்து வந்துள்ளன இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை. மும்மணி மாலை. நான்மணிமாலை இணைமணிமாலை என்பன இத்தகையன காரைக்காலம்மையார் பாடிய திருவிரட்டை மணிமாலை காலத்தால் முந்தியது

\

சேரமான் பெருமான் நாயனார் பாடிய திருவாரூர் மும்மணிக் கோவையும் குறிப்பிடத்தக்கது. பட்டினத்துப் பிள்ளையார் பாடிய கோயில் நான்மணி மாலையும் சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணி மாலையும் பக்தி இலக்கிய வரிசையில் போற்றப்படுவன வெண்பாவும் விருத்தமும் அல்லது

வெண்பாவும் கலித்துறையும் என இவ்வாறு இருவகைப்பாக்கள் மாறிமாறி வருவது இரட்டை மணிமாலை பெரும்பாலும் இருபது பாடல்கள் இடம்பெறும்.ஆசிரியம்,வெண்பா, கலித்துறை முப்பது பாடல்கள் மாறி மாறி வரின் மும்மணிக் கோவையாகும். வெண்பா, கலித்துறை ஆசிரியம் மூன்றும் முப்பது பாடல்களாக மாறிமாறி வரின் மும்மணி மாலையாம் வெண்பா,கலித்துறை,ஆசிரியம். விருத்தம் நான்கும் நாற்பது பாடல்களில் மாறி மாறி வரின் நான்மணிமாலையாகும் இவ்வகையின பக்தி இலக்கியத்துப் பெருவளர்ச்சி கண்டன

பத்து

பத்துப் பதிகம் என்பன இவ்வகையின ஒருவகைப் பாவினால் பத்துப் பாடல்கள் பாடுவதால் இப்பெயர் ஏற்பட்டது. சங்க இலக்கியத்துள் பதிற்றுப்பத்தும் ஐங்குறு நூறும் பத்துக்களைத் தோற்றுவித்தன ஐங்குறுநூற்றிலும் திருவாசகத்திலும் தெய்யோப்பத்து. அச்சோப்பத்து என்றிங்கனம் அழைக்கப்பட்டன. காரைக்காலம்மையின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இரண்டும் காலத்தால் மூத்த பதிகங்களாகும். ஒவ்வொன்றும் பதினொரு பாடல்கள் கொண்டவை பத்து எண்ணிக்கையில் சிறிது கூட்டியோ குறைத்தோ வந்தாலும் பதிகம் எனப்பட்டன பத்துக்களே வகைமைப் பெயர்களாக மாறும்போது பதிகம் எனப்பட்டன ஒருபா ஒருப:்து,இருபா இருப:்து என்பனவும் இதன் மறுபெயர் போல்வனவே வெண்பாவோ ஆசிரியமோ, தனித்தனிப் பத்துப் பாடல்கள் ஒரு பொருள் மேல் பாடினால் அவை ஒருபா ஒருப:்து எனப்படும். வெண்பாவும் அகவலும் அல்லது அசுவலும் வெண்பாவும் மாறி மாறி இருபது பாடல்கள் பாடப் பெறின். அவை இருபா இருப:்து எனப்படும் இரட்டை மணிமாலை மும்மணிக் கோவை போல்வனவும் இவற்றைப் போன்றனவே அல்லது அவை இவற்றின் வளர்ச்சியே தசாங்கம் என்பதும் இது போல அரசனுடைய கொடி, குடை முதலிய பத்து அங்கங்களையோ இறைவனது பத்து அங்கங்களையோ புகழ்வதாம்

தேசிய கவிஞர் பாரதியார் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பாரத தேவியின் திருத்தசாங்கம் ஆகியவற்றைப் புதுமைப் படுத்திப் புனைந்து தத்துள்ளார்.

கோவை

அகத்துறைப் பாடல்கள் களவு, கற்பு என்னும் பிரிவுடன் பலகூற்றுகளாகப் பிரிந்து திகழும். கைகோள்,துறை, கூற்று எனப் பிரிக்கலாம் கைகோள் என்பது களவு, கற்பு என்ற ஒழுக்கம் அவற்றுள் ஒவ்வொன்றும் பல துறைகள உடையது களவில் மதியுடம்படுத்தல், அறத்தொடு நிலை

எனை பல துறைகள் உள ஒவ்வொன்றையும் சார்ந்து கூற்றுக்கள் பல வரும். இவை நிரல்பட வரிசையாக அமைவதில்லை பிற்காலத்தில் இவ்வகத்துறை, கூற்றுக்களை எல்லாம் வரிசைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாகச் சங்கிலித் தொடர்பு போல ஒரு கோவையாகப் பாடினர் ஒரு பாட்டிற்கும் அடுத்தப் பாட்டிற்கும் நிகழ்ச்சி வரிசை அமைந்து கதை போலக் காணப்பட்டதால், இவ் வகைப்பாடல்கள் தொடர்புடையன போன்ற ஒரு மனத்தோற்றத்தை ஏற்படுத்தின

பாண்டிக்கோவை கிபி ஏழாம் நூற்றாண்டளவில் நின்ற சீர் நெடுமாறன் மீது பாடப்பட்டது.ஆசிரியர் பெயர் தெரியவில்லை முந்நூற்றைம்பது பாடல்கள் மட்டுமே இலக்கண உரை மேற்கோள்களாகக் கிடைத்துள்ளன மாணிக்கவாசகரின் திருக்கோவையார் புகழ் பெற்றது. இராசாக் கோவை என்றும் இது பாராட்டி அழைக்கப்படும்

கி பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய பொய்யாமொழிப் புலவரால் பாடப்பட்ட தஞ்சைவாணன் கோவை அடுத்துப் புகழ்பெற்ற நூலாகும் நம்பியகப் பொருளுக்கு எடுத்துக்காட்டாகத் தஞ்சைவாணன் கோவைப்பாடல்கள் அமைந்துள்ளன. பாண்டியனின் படைத்தலைவனாகிய தஞ்சை வாணனைப்பற்றி எழுந்த நூல் இது.கோவை நூல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை யாப்பினால் ஆனவை இவை இங்கனம் அகத்திணை இலக்கண நூல்களுக்கு எடுத்துக்காட்டாகப் பாடப் பட்டுப் பிறகு தனியாக வளர்ச்சி கண்டன. அகப்பாடல்கள் கோவை ஆனாற்போலப் புறப்பாடல்கள் மாலை ஆயின புறத்திணைச் செய்திகளையும் இவ்வாறு கோவைப்படுத்தி, வரிசையாகக் கூறி, இலக்கணமும் எடுத்துக்காட்டும் பாடிய நூலே புறப்பொருள் வெண்பா மாலை எனப்பட்டது.

அகத்திணைக் கோவைகளில் கிளவித் தலைவனைத் தவிர்த்துப் பாட்டுடைத் தலைவன் ஒருவனைப்பற்றித் தொடர்ந்து ஒவ்வொரு பாடலிலும் அவன் பெயர், நாடு,கொடையன்பு,வீரம் முதலியவற்றை அடைமொழியாகவோ உவமையாகவோ. சார்த்திப்பாடுவது ஒரு மரபாயிற்று பல்வேறு துறைகளைப் பாடாமல், ஒரே துறையைப் பற்றி நானூறு பாடல் பாடித் திறமையை வெளிப்படுத்தும் முறையொன்றும் இதிலிருந்து வளர்ந்தது அமிர்தகவிராயரின் ஒருதுறைக் கோவை நாணிக்கண்புதைத்தல் என்ற ஒரே துறையைப்பற்றியது வருக்க எழுத்துக்களின்படி முதல் எழுத்தில் தொடங்கி ஒவ்வோரெழுத்திற்கும் ஒரு பாடல் எனப்பாடும் ‘வருக்கக் கோவை ‘ என்பதொரு கிளையும் இதிற் பிரிந்து வளர்ந்தது இவையெல்லாம் வெறும் புலமை வெளிப்பாட்டுப் போட்டியாகவும், ஒரே மாதிரியாகவும் அமைந்தமையால் காலப்போக்கில் சுவைகுன்றித் தளர்ச்சி

உற்றன.இதுகாறும் எழுபது கோவைகள் வரை கிடைத்துள யாப்பிலக்கணத்துள் பா, பாவினம் அனைத்திற்கும் மேற்கோள் பாடல்களாகவே பாடிய நூல் வகை ஒன்றும் தோன்றியது ‘சிதம்பரச் செய்யுட்கோவை’ குறிப்பிடத்தக்கது

**உலா**

திருவீதி உலாவரும் தெய்வத்தைக் கண்டு தேவரடியார்கள் மயங்குவதாகப் பாடுவது ஒரு நாட்டுப்பாடல் மரபு அதுபோல அரசர்கள் உலாவரும்போது ஏழு பருவமங்கையரும் சுண்டு காதல் கொண்டு மயங்குவதாகப் புனையலாயினர் சிலர் ‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப(1031) என்ற தொல்காப்பிய நூற்பா உலா இலக்கியத்தைப் பற்றியே குறிப்பதாக உரை கண்டனர்.காப்பியங்களில் பாட்டுடைத் தலைவன் உலா வரும் செய்தி உண்டு ஐந்து முதல் நாற்பது வயது வரை உள்ள பெண்கள் உலா வரும் தலைமகனைக் கண்டு காதல் கொள்வதாகப் பாடுவர் பேதை (5 -7 வயது), பெதும்பை (8-11), மங்கை(12-13), மடந்தை (14 19), அரிவை (20-25), தெரிவை (26-31). பேரிளம்பெண் (32-40) ஆகிய மகளிரின் இயல்பும் ஆடல் பாடலும் நன்கு புனையப்படும். அவர்கள் தலைமகனைக் கண்டு காதல் கொள்ளுகிற விதமும் அவர்களுடைய வயதிற்குத்தக அமையும்.

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ‘திருக்கயிலாய ஞானவுலா’ என்பது காலத்தால் முற்பட்டது. இது தெய்வ உலா என்றும் ஆதிஉலா என்றும் சிறப்பித்து அழைக்கப்படும் உலாவரும் இறைவனின் மாட்சியும் காட்சியும் இந்நூலில் விரித்துப் பேசப்படுகின்றன சிவலோகத்தில் தேவர்கள் எல்லாம் வேண்டிக் கொள்ளச் சிவபெருமாள் உலாவந்து அவர்களை மகிழ்விப்பதாகப் பாடப்பட்டுள்ளது. சேரமான் பெருமாள் சுந்தரர் காலத்தவர் ஞான உலா தவிர இவர் திருவாரூர் மும்மணிக் கோவை, பொன்வண்ணத்தந்தாதி திருவந்தாதி முதலிய நூல்களையும் பாடியுள்ளார்.

பரணி

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற

மானவனுக்கு வகுப்பது பரணி.”

என இலக்கண விளக்கப் பாட்டியல் இதற்கு இலக்கணம் கூறும் போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணி யாகும் அப்போர்கள் எங்கு நடை பெற்றனவோ அவ்விடத்தின் பெயரால் அவை அழைக்கப்படும் புறத்திணையில் இடம்பெறும் களவேள்வி களவாழ்த்து, முன்தேர்க்குரவை

பின்தேர்க்குரவை போல்வன பரணியிலக்கியம் தோன்ற அடிப்படையாகும். பழங்காலத்தில் ஏர்க்களம் பாடும் பொருநரேயன்றிப் போர்க்களம் பாடும் பொருநர்களும் இருந்தார்கள் அவர்களின் வாய்மொழிப் பாடலின் வழி வந்ததே பரணியிலக்கியம்.

போர்க்களத்தின் தெய்வம் காளி கொற்றவை அவ்வெற்றி தெய்வத்தை வழிபடும் விழாவே பரணியாகும். அத்தெய்வத்திற்குரிய நாளாகிய பரணி நட்சத்திரத்திற் கொண்டாடப்பட்டது கூளிகள் என்பன பேய்கள் போர் நடைபெறாமையால் வாடிய கூளிகள் காளியிடம் முறையிட அவள் விரைவில் போர் வர இருக்கிறது. வயிறார உண்ணலாம் என்று கூறுகிறாள் இவ்வாறு தொடங்கிப் போர் நிகழ்ச்சிகளை வருணிப்பனவே இந்நூற்பகுதிகளாகும்.

சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியே காலத்தால் முற்பட்டதாகும். இன்று தலைமைவாய்ந்த புகழ் பெற்ற நூலாக அவ்வகைமையை விளக்கி நிற்பதும் அதுவே. முதலாம் குலோத்துங்கன் அனந்தவர்ம சோடகங்கள் என்ற மன்னனது கலிங்க நாட்டின் மீது படையெடுத்தான் கருணாகரன் என்ற

படைத்தளபதி படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பினான் எனவே குலோத்துங்களையும் கருணாகரனையும் சிறப்பிக்க எழுந்ததே இந்நூல், தீபங்குடியில் வாழ்ந்த சயங்கொண்டார் சைவசமயத்தைச் சார்ந்தவர், சமயப் பொறுமை உடையவர் இவரது காலம் பி பதினோராம் நூற்றாண்டு என்பது தெளிவு. இவருக்கும் கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப் பெயருண்டு.

கலம்பகம்

கதம்பம் என்ற சொல்லுடன் தொடர்பான பொருளுடையது இச்சொல் என்பர். பல்வேறு உறுப்புக்களைக் கொண்டு அகமும் புறமுமாய்க் கலந்து பல்வேறு பாவினங்களால் பாடப்படுவதால் இப்பெயர் பெற்றதென்பர். கலம்+பகம் எனப்பிரித்துக் கலம் என்பது பன்னிரண்டு என்றும் பகம் என்றால் அதிற்பாதி என்றும் கொண்டு. பதினெட்டு உறுப்புகளை உடையது கலம்பகம் என்றும் ஒரு சாரார் விளக்கம் கூறுவர். இதன் உறுப்புகள் நூல்தோறும் மிக்கும் குறைந்தும் வருகின்றன புயவகுப்பு, தவம், வண்டு, அம்மானை, பாண் மதங்கு கைக்கிளை சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர் மறம் காலம், தழை, இரங்கல் சம்பிரதம், கார், தூது. குறம், பிச்சியார். கொற்றியார் முதலியன உறுப்பு வகைகள் ஆசிரியப்பா, கலிப்பா,வஞ்சிப்பா. மருட்பாக்களும் தாழிசை

துறை விருத்தங்களும் மடக்கும் இதில் விரவிவரும் பலவகை யாப்புகளாகும். இஃது அந்தாதித் தொடையால் நூறு பாடல்கள் வரை பாடப்பெறும்

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டது. இது தோன்றிய காலம் கி பி ஒன்பதாம் நூற்றாண்டாகும் இந் நந்திவர்மன் தாலம் கி. பி. 825 -850 என்பர் நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன் ஒருவன் புலமை மிக்கவன் என்றும் அவன் நந்தியைக் கொல்வதற்கு 'அறம்' வைத்துப் பாடியதே இந்நூல் என்றும் கூறுவர் அது தெரிந்தும் இந்நூலை அரங்கேறச் செய்து தமிழச்சுவை பருகி மகிழ்வுற்று. இறுதிப் பாடலைப் படிக்கும் போது பந்தல் தீப்பிடித்து, நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும் '**கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தி** என்றும் தமிழ் நூல்கள் நத்தியைப் போற்றும்.

நம்பியாண்டார் நம்பி பாடிய 'ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்' பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் குறிப்பிடத்தக்கது இரட்டையர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லை கலம்பகம் இரண்டையும் பாடியுள்ளனர் '**கண்பாயக் கலம்பகத்திற்கு இரட்டையர்கள்**' என அவர்கள் புகழ் பெற்றனர் இதுகாறும் 63 கலம்பகங்கள் பற்றிக் குறிக்கப்படுகிறது புலருக்கு - அம்பு புடியொம்

பிள்ளைத் தமிழ்

தலைவனையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்துக் கொண்டு பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் எனப்பட்டது; ஒரு பருவத்திற்குப் பத்து விருத்தங்களாக நூறு பாடல்கள் பாடப்படும் பெரும் பாலும் கழிநெடில் ஆசிரிய விருத்தங்களே இடம் பெறும் இதனை ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டாகக் கூறுவர் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி. முத்தம் வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பாலுக்குரியன பெண்பாலுக்கு இறுதி மூன்றையும் நீக்கிவிட்டுக் கழங்கு, நீராடல், ஊசல் போல்வன பாடப்படும்.

ஓட்டக்கூத்தர் பாடிய இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே காலத்தால் முற்பட்டது என்பர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருப்பெற்ற இதனைச் சிறப்புறுத்தியவர் குமரகுருபரர் அவர் பாடிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழும்" நிகரற்றவை பகழிக்கூத்தரின் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழும் பத்துப் பிள்ளைத் தமிழ்

பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத் தமிழும் குறிப்பிடத் தக்கவை. **பிள்ளைத் தமிழே பெரிய தமிழ்**' என்று போற்றுமளவு தமிழிலக்கியத்தில் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

தூது

தன் கருத்தைப் பிறிதொருவருக்குத் தெரிவிக்குமாறு ஒருவரைத் தன்சார்பாளராக அனுப்புவதே தூது இலக்கியம் எனப்படும் புறம் சார்ந்த தூதுகள் பல, ஒளவையார் அதியன் தூதனுப்பத் தொண்டைமானுழைத் தூது சென்றது புறநானூற்றில் காணப்படும் செய்தியாகும்.

அகப்பாடல்களிலும் தலைவி காமம் மிக்கக் கழிபடர் கிளவியால் அஃறிணைகளைக் கூடத் தூதனுப்புவதுண்டு.

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் கி பி 14ஆம் நூற்றாண்டில் பாடிய, சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றாய நெஞ்சுவிடுதூது இவ்வகையில் முதல் நூல் எனப் போற்றப்படுகிறது. காலப்போக்கில் தூதுவிடும் பொருள்கள் புதிது புதிதாய் அமைந்துள்ளன.

"**இயம்புகின்ற காலத்து எகினமயில் கிள்ளை**

**பயம் பெறு மேகம் பூவை பாங்கி - நயந்த குயில்**

**பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே**

**தூதுரைத்து வாங்கும் தொடை**" (**இரத்தினச் சுருக்கம்**)

அன்னம், மயில் கிளி மேகம் பூவை தோழி, குயில், நெஞ்சு தென்றல், வண்டு என்ற பத்துமே முன்பு தூதுவிடும் தகுதியுடையவனவாகக் கருதப்பட்டன. பின்பு பணம் தமிழ், புகையிலை, காக்கை என இவ்வாறு அவை பல்கின செருப்புக் கூடத் தூதுவிடும் பொருளாயிற்று'

**சதகம்**

நூறு பாடல் கொண்ட நூலுக்குச் சதகம் என்று பெயர் ஐங்குறு நூறும் பதிற்றுப்பத்தும் தோன்றிய தமிழில் நூறு பாடல் கொண்ட நூல் தோன்றுவது புதுமையன்று. மாணிக்கவாசகரின் திருச்சதகமே முதற்சதகமாகும். இஃது உள்ளமுருக்கும் பக்திப்பாட்டாகும். ஆயினும் சதகம் என்ற வடமொழிப் பெயர் அதற்கமைந்தது வடமொழியில் அவை நீதி போதனையும் தத்துவமும் உணர்த்தும் நூல்களாக விளங்கின இங்கு மண்டல அடிப்படையில் நாட்டு வரலாறு, நூல்களின் சிறப்பு உணர்த்துவன ஒருவகையாகவும் தெய்வ வழிபாட்டடிப்படையின ஒருவகையாகவும் கிளைத்தன கி பி பதினொன்றாம் நூற்றாண்டில், அவிநாசி ஆறைகிழாரின்

கார் மண்டல சதகமாகிய முதற் சதக நூல் தோன்றியதென முனைவர் ந வீ செயராமன் தம் சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலில் குறிப்பிடுகிறார் சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், ஈழமண்டல சதகம் கொங்கு மண்டல சதகம் தொண்டை மண்டல சதகம், நந்தமண்டல சதகம் என்பன மண்டல சதகங்கள் என அழைக்கத்தக்கன. இவை நாட்டு வளம், புகழ், மன்னர்,கவிஞர், வள்ளல்கள் வரலாறுகளைக் கூறுவன.

படிக்காசுப் புலவர் தொண்டை மண்டல சதகத்தை மட்டுமன்றி, தண்டலையார் சதகத்தையும் பாடினார் இது செய்யுள்தோறும்

பழமொழிகளையும் அவற்றிற்கிணையான நீதிகளையும் கூறி இறைவன் துதியுடன் முடிவதாகும் இறைவன் துதிபாடும் சதகங்களும் பலவாகும் இசுலாமிய கிறிஸ்தவச் சமயத்தவரும் பல சதகங்களைப் பாடினர் இவை பள்ளிகளில் ஒரு காலத்து மனப்பாடம் செய்வதற்குரிய நூலாக வைக்கப்பட்டிருந்தனவென்றும் கலைக்களஞ்சியம் போலப் பல குறியீடுகளையும் தொகைகளையும் (பதினாறு பேறு, எண் வகை மணம் ) விளக்குவன வாய்க் கல்வி நல்கும் திறப்பாட்டுடன் இவை திகழ்ந்தனவென்றும் முனைவர் மு வ குறிப்பிடுகிறார்.

**மடல்**

மடல் என்பது அகத்திணையில் ஒரு துறையாகும். அவ்வடிப்படையில் பாடிய புலவரில் ஒருவர் 'மடல் பாடிய மாதங்கீரனார் எனச் சங்க நூல்களில் சிறப்பித்து அழைக்கப்பட்டார். திருமங்கையாழ்வார் பெரிய திருமடல் சிறிய திருமடல்' என்று நீண்ட பாசுரங்களை எழுதினார். தமிழில் ஆடவரே மடலேறுவதாக அச்சுறுத்துவதும். மடலேறுவதும் உண்டு மகளிர்க்கு அது மரபன்று ஆயினும் தம்மைத் தலைவியாகப் பாவித்துப் பாடும் திருமங்கையாழ்வார் மடற்கூற்று மகளிரிடமும் அமையலாம் என, இறைவன் மீது கொண்ட காதல் புலப்படப் பாடுகின்றார் இது தவிர வளமடல் அல்லது இன்பமடல் எனச் சிருங்காரச்சுவை மிக எழுதியவையும் உள வருண குலாதித்தன் மடல் போன்றவை அவை அந்நாளைய சிற்றரசர்களை மகிழ்விப்பதையே நோக்கமாகக் கொண்டு இவ்வின்பமடல்கள் எழுதப்பட்டன

குறம், குறவஞ்சி, பள்ளு ஆகியன இசை தழுவிய நாடக வடிவுள்ள, மக்கள் இலக்கியமாகிய நாட்டுப்புற இலக்கிய அடிப்படையுள்ள வகைகளாகும்.

## 1.3 கிறிஸ்துவ இலக்கிய வரலாறு

'**கலம் தரு திரு**'வின் பொருட்டுக் கி.பி 15 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் டேனிஷ்காரர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியர்கள் இந்தியாவிற்குள் நுழைத்தனர் வளமை நிலையில்,

"முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்

வழங்கத் தவாஅ வளத்த தாகி" (சிலம்பு 2: 3-4)

தமிழகம் விளங்கியது ஆகையால் மேலை நாட்டினர் தமிழகத்தில் சிலம்புக் காலம் முதலே ஊடுருவி இருந்தனர். சமயப் பரப்புதலையும் நோக்கமாகக் கொண்டிருந்த அவர்கள் தமிழைக் கற்பதில் முனைப்பு காட்டினர். அயல்மொழியினரான அவர்கள் தமிழ்மொழியைக் கற்கும் பொழுது தமிழ் எழுத்து வடிவங்களால் பல இடர்ப்பாடுகள் உற்றனர். ஆயினும் தமிழ்மொழிச் சுவையில் அவர்கள் மாம்பழத்து வண்டாயினர்.

அச்சு இயந்திரம், தாள், மை முதலான அறிவியல் வளர்ச்சிகளால் தமிழ் மொழி அச்சில் ஏற அடிப்படையாக இருந்தனர். இதன் மூலம் செய்யுளுக்குள் சிறைப்பட்டு இருந்த தமிழ, உரைநடைச் சுதந்திரம் பெற்றது. கதைகள், கட்டுரைகள், இதழ்கள், அகராதிகள், திறனாய்வுப் போக்குகள் முதலான தமிழ் வளர்ச்சிப் பாதைக்கு மேலை நாட்டார் வருகை, தீபமாகச் சுடர்விட்டது. கிறிஸ்தவர் தமிழ்ப் பணியை,

1. மேலைநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
2. ஈழநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
3. தமிழ்நாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி
4. கிறித்தவர் அல்லாதவரின் கிறித்தவத் தமிழ்ப்பணி
5. கிறித்தவத் தமிழ்ப்பணியில் விளைந்த தமிழ்மறுமலர்ச்சி என்னும் பகுப்புகளில் காணலாம்.

### 1.3.2மேலைநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி

**இராபர்ட்-டி-நொபிலி** : (1577-1656)

இத்தாலி நாட்டினர் தத்துவப் போதகர் எனச் சிறப்பிக்கப்படுபவர் வடமொழி,தென்மொழி சுற்றுத் தேர்ந்தார். கிறித்தவச் சபை நிறுவனர் தமிழக அந்தணர் போன்று உடை உடுத்துப் பூணூல் அணிந்து சைவ உணவுப் பழக்கத்தை மேற்கொண்டார்.

இலக்கியப்பணி : மந்திரமாலை, ஆத்தும நிர்ணயம், ஞானோபதேச காண்டம், ஏசுநாதர் சரிததிரம, சுகுண விவரணம், ஞானத் தீபிகை, புனர்ஜென்ம ஆடசேபம், நித்திய ஜீவன் சல்லாபம், தத்துவக் கண்ணாடி தீபிகை முதலான பல நூல்களை இயற்றினார்

அகராதிப்பணி : தமிழ் போர்த்துகீசு அகராதி, வடமொழி கலந்த தமிழ் அகராதிகளை எழுதியுள்ளார்.

**வீரமாமுனிவர்** : (1680-1741)

இயற்பெயர் கான்ஸ்டான்டியஸ் ஜோசப் பெஸ்கி. இத்தாலி நாட்டைச் சார்ந்தவர்.இவருக்குத் தைரியநாதர் என்றும் பெயர். பன்மொழி விததகர் இவர் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகள் பல.வீரமாமுனிவர் இலக்கியப் பணியைக் காப்பியப்பணி, சிற்றிலக்கியப்பணி, உரைநடைப்பணி எனப் பலவகையாகப் பிரிக்கலாம்.

**காப்பியப்பணி** : 'தமிழ் மாலைகளில் ஒரு வாடாத கற்பகமாலை காணப்படுகிறது. அதுவே தேம்பாவணி என்னும் பெருங் காப்பிய மாலை' என்று சுத்தானந்த பாரதியார் வீரமாமுனிவர் செய்த தேம்பாவணியைப் புகழ்கின்றார். ஏசுவின் வளர்ப்புத் தந்தை தூயவளனார். இவரே காப்பியத் தலைவர். சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய இலக்கியங்களின் தாக்கத்தை நூலுள் காணலாம்.

'சிந்தாமணிக்கு இணையான காப்பியம் என்று பூரணலிங்கம்பிள்ளை தேம்பாவணியைப் புகழ்கின்றார். தேம்பாவணியின் சுவை அறிந்த மதுரைத் தமிழ்ச் சங்கம் அவருக்குச் சிறப்புச் செய்யக் கருதி வீரமாமுனிவர் என்னும் பட்டம் கொடுத்தது.

**சிற்றிலக்கியப்பணி** : திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அடைக்கல நாயகி வெண்கலிப்பா, அன்னை அழுங்கல்

அந்தாதி, கருணாகரப் பதிகம் முதலான சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார்.

**உரைநடைப்பணி** : பேதகம் மறுத்தல், ஞானக்கண்ணாடி போன்ற உரைநடை நூல்களை இயற்றியுள்ளார் மேலும் வேதியர் ஒழுக்கம் என்னும் சிறந்த உரைநடை நூல் ஒன்றை எழுதியுள்ளார். உரைநடை இலக்கிய முன்னோடி எனப் போற்றப்படுகிறார்.

**இலக்கணப்பணி** : இவரது இலக்கண நூல்கள் தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணம் பற்றியது. இதன் இலக்கணச் சீர்மையால் நூலுக்குக் குட்டித் தொல்காப்பியம் என்றும் வீரமாமுனிவருக்குத் செந்தமிழ்த் தேசிகன் என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர்.

**ஒப்பிலக்கணப்பணி** : பேச்சுத் தமிழ வழக்காற்றைப் பற்றிச் செய்யப்பட்டது கொடுந்தமிழ் இலக்கணம் என்னும் நூல இதனை வீரமாமுனிவா இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மொழியாக்கம் செயதார் இந்த நூலே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய கால்டுவெல்லுக்குத் தமிழ் மொழியின் மேன்மைகளை உணரும் வாயிலாக உதவியது இதன் மூலம் வீரமாமுனிவர் ஒப்பிலக்கணவாயில் ஆகிறார் எனத் தெளியலாம்.

**மொழிபெயர்ப்புப்பணி** : திருக்கும் அறத்துப்பால், பொருட்பால்களை

இலத்தீனில் மொழியாக்கம செய்தார் நகைச்சுவை மிக்கப் பரமார்த்த குருகதையை வீரமாமுனிவரே ஆங்கிலத்திலும், இலத்தீனிலும் மொழியாக்கம் செய்தார் இவ்வகையில் வீரமாமுனிவர், மொழியாக்க வழிகாட்டி எனச் சிறப்பிக்கப்படுகின்றார்

**அகராதிப்பணி** : வீரமா முனிவர் சதுரகராதி எழுதினார்.

சதுர் = நான்கு பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு நிலைகளைக் கொண்டுள்ளதால் சதுரகராதி இப்பெயர் பெற்றது. தமிழின் முதல் அகராதி இதுவே பின் வந்த அகராதிகளுக்குச் சதுரகராதி முன்னோடியாக அமைவதால் வீரமாமுனிவர் அகராதிகளின் முன்னோடி எனப் போற்றப்படுகிறார்

எழுத்துச் சீரமைப்புப் பணி :

I. எ, ஒ எழுத்து மற்றும் எகர ஒகர வர்க்க எழுத்துகளுக்கும் புள்ளிக்கும் தொடர்பு இல்லை எனச் செய்தல்.
II. எ, ஒ மற்று அதன் வர்க்க எழுத்துக்களைப் புள்ளி இடாமல் எழுதினால் குறில்.
III. 'எ' என்னும் எழுத்தை நீட்டி 'ஏ' என எழுதினால் நெடில்
IV. 'ஒ' என்னும் எழுத்தைச் சுழித்து ஓ என எழுதினால் நெடில்
V. எகர ஒலி வரிசையில் வரும் குறில் வர்க்க எழுத்துக்களுக்கு ஒற்றைக் கொம்பிட்டுச் சுழித்துக் கெ, பெ, மெ என எழுதுதல்
VI. ஒகர ஒலி வரிசையில் வரும் குறில்வர்க்க எழுத்துகளுக்கு ஒற்றைக் கொம்பிட்டுச் சுழித்துக் கொ, பொ, மொ என எழுதுதல்
VII. ஏகார ஒலி வரிசையில் வரும் வர்க்க எழுத்துக்களுக்கு இரட்டைக் கொம்பிட்டுக் கே, பே, மே என எழுதுதல்
VIII. ஓகார ஒலி வரிசையில் வரும் வர்க்க எழுத்துக்களுக்கு இரட்டைக் கொம்பிட்டுக் கோ, போ, மோ என எழுதுதல் என்னும் எழுத்துச் சீரமைப்புகளை வீரமாமுனிவர் செய்தார். இந்த எழுத்துச் சீரமைப்பினால் தொன்று தொட்டு இருந்து வந்த எழுத்துக் குழப்பம் நீங்கிய நிலையை மக்கள் விரும்பி ஏற்றனர்.

**ஜி.யு.போப்: (1820 – 1907)**

இங்கிலாந்து நாட்டினர் 19 வது வயதில் தமிழகம் வந்தார். மகாவித்துவான இராமானுஜ கவிராயரிடம் தமிழ் பயின்றார்

(அ) இலக்கியப்பணி: **Poets of the Tamil land. The lives of Tamil Saints** என்னும் நூல்களை இயற்றினார்.

(ஆ) மொழிபெயர்ப்புப்பணி : (1) **Elementary Tamil Grammar** என்னும்

தலைப்பில் மூன்று பாகங்களாகத் தமிழ் இலக்கணத்தை மொழி பெயர்த்து எழுதினார் இதுவே அனைத்துத் தமிழ் மாணாக்கா கையிலும் புழங்கியது. யான முதன் முதலில் பயின்ற இலக்கணம் டாக்டருடையதே என்று திரு.வி.க கூறுவது நினைவுகூரத்தக்கது

(II) திருக்குறள், நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு ஆகிய நூல்களை மொழியாக்கம் செய்தார். ஒவ்வோர் ஆண்டும் ஆங்கிலப புத்தாண்டு அன்று புறநானூற்றுப் பாடல் ஒன்றினை மொழி பெயர்க்கும் நற்பழக்கத்தினை மேற்கொண்டிருந்தார்.

(III) மணிமேகலையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்

(iv) சிவஞானபோதத்தையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார்.

**தமிழ்ப்பற்று** : ஜி.யூ. போப் அவர்கள் எனது கல்லறைக்கென்று ஆகும் செலவில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களுடையதாக இருக்க வேண்டும். எனது கல்லறையின் மேல் இவன் ஒரு தமிழ் மாணாக்கன் எனப் பொறித்து வைக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

**1.3.3 ஈழநாட்டுக் கிறித்தவரின் தமிழ்ப்பணி**

**மாயூரம் வேதநாயகம் பிள்ளை** : (1826-1889)

மாயூரத்தின் நீதிபதியாக இருந்து நீதி செலுத்தியதால் இவருக்கு இப்பெயர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரமபிள்ளையின் நெருங்கிய நண்பர்.

புதின இலக்கியத்தின் தந்தை:

தமிழில் முதன் முதலில் 1879 ஆம் ஆண்டுப் பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் புதினத்தை உருவமைத்து வெற்றி கண்டார் நகைச்சுவையும், நீதிச்சுவையும் மிக்கது பெண் முன்னேற்றம் போற்றுவது இப்படைப்பால் இவர் “புதின் இலக்கியத்தின் தந்தை’ எனப் போற்றப்படுகின்றார். இவர் சுகுண சுந்தரி (1887) என்னும் புதினத்தையும் எழுதியுள்ளார்.

**இலக்கியப்பணி** : திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி (1873), பெரியநாயகி பதிகம், தேவதோத்திர மாலை, சத்திய வேதக் கீர்த்தனைகள் என்னும் நூல்களைப் பாடியுள்ளார்.

**பெண்விடுதலைப்பணி** : பெண் கல்வியைப் பற்றி நினைக்கவே இயலாத சூழலில் முதன் முதலில் பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர் மாயூரம் வேதநாயகரே இவருக்குப் பிறகுதான் பிற பெண் முன்னேற்றப் போராளிகள் அனைவரும் வருகின்றனர் இதனைக் காலவரிசையில் காண்பது தெளிவினைத் தரும். ஈவெரா பெரியார் (1879), பாரதியார் (1882), திரு.வி.க (1883), பாரதிதாசன் (1889) ஆகிய காலவரிசை நிலையில் தோன்றிய பெண் விடுதலைக்குப் போராடினர்

1826 இல தோன்றிய மாயூரம வேதநாயகர்,1869 இல் மாயூரத்தில் பெண்களுக்காக முதன் முதலில் தமிழ்ப்பள்ளி நிறுவினார் இதே ஆண்டில் பெண்மதிமாலை என்னும் நூலை எழுதினார் 1870 இல பெண்கல்வி பெண்மானம் (உரைநடை) ஆகிய நூல்களை இயற்றினார்.

## எச்.எ கிருஷ்ணப்பிள்ளை : (1827-1900)

ஹென்றி ஆல்ஃபிரெட் கிருஷ்ணப்பிள்ளை என்பது இவரது முழுப்பெயர் ஜான் பனியன் எழுதிய The Pilgrim's Progress என்னும் நூலைத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் என்னும் பெயரில் மொழிபெயர்ப்புச் சமய இலக்கியத்தை உருவாக்கினார். 5 பருவங்கள் 4000 பாடல்கள் நூல் எங்கும் இராமாயணத் தாக்கம் காணப்படுவதால் இவரைக கிறித்தவக் கம்பர் என்பர்.

**தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்**

**பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்துஉளந்தாய்**

**இன்னதென அறிகிலார் தாம்செய்வது இவர்பிழையை**

**மன்னியும் என்றருட் கனிவாய்மலர்ந்தார் நம் அருள்வள்ளல்**

என்னும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் இயேசுவின் சிலுவைப் பாடுகளையும் சுருணைவீரத்தையும் வெளிப்படுத்தும்.இவரது நூல்கள் அனைத்தும் தமிழிலக்கியத்தாக்கம் மிக்கவை இதன் அடிப்படையில்,

1. இரட்சணிய யாத்திரிகம் →கம்பராமாயணம்
2. இரட்சணிய சமய நிர்ணயம் → சிவஞானச் சித்தியார்

3. இரட்சணிய மனோகரம்→ தாயுமானார் பாடல்கள்
4. இரட்சண்யக் குறள்→ திருக்ககுறள்

என வகைப்படுத்தலாம். இவற்றுள், இரட்சணிய மனோகரம் கிறித்தவர் தேவாரம் எனப் புகழ் பெறும்

## 1.3.4 கிறித்துவர் அல்லாதாரின் கிறித்துவத் தமிழ்ப்பணி

சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து கிறித்துவரை போற்றியுள்ள தமிழறிஞர்கள் பலர் அவருள திருவி.க தலைமை சான்று விளங்குகின்றார் பாரதியார் பாரதிதாசன் கண்ணதாசன் ஆகியோரும் இயேசுநாதரைப் போற்றிப் பாடல்கள் புனைந்துள்ளனர்.

**திரு.வி.க.வின் கிறித்துவத் தமிழ்ப்பணி** :

தமிழ்த் தென்றல் திருவிக கிறித்து மொழிக் குறன், கிறித்துவின் அருள் வேட்டல் ஆகிய நூல்களைத் தனது ஒப்பரிய தமிழ் நடையில் எழுதியுள்ளார்.கிறித்துவின் அருள் வேட்டலில்,

“ஆணி அறைந்தவர்க்கும். அன்பான தெய்வமே

தோணி எனக்காவாய் தொடர்ந்து”

எனக் கிறித்துவிட்ட வேண்டுகிறார்

**பாரதியாரின் கிறித்துவப் பணி** :

பாரதியார் யேசு கிறித்து என்னும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார். இயேசுநாதர் இறந்து, மூன்றாம் நாள் உயிர்த்தபின் முதன்முதலில் மரிய மக்தலேன என்பவளுக்குக் காட்சி கொடுத்தார் அதன் நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்’ எனக் கூறி.

“தேசத் தீர்இதன் உட்பொருள் கேளீர்

தேவர் வந்து நமக்குட் புகுந்தே

நாசம் இன்றிநமை நித்தம் காப்பார்

நம் அகந்தையை நாம்கொன்று விட்டால்”

அதன் உடபொருளை உலகிறகு எடுத்துக் காட்டுகின்றார்

**பாரதிதாசனின் கிறித்துவத் தமிழ்ப்பணி** :

எளிய இதயங்களைத் தேடி வந்து குடியிருப்பவர் ஏசுநாதர் வெளி வேடங்களை வெறுப்பவர். இதனை உணராத பலர் தலை, காது, மூக்கு, கழுத்து, கை, மார்பு விரல், தாள் என்னும் எட்டு உறுப்புகள் நிறைய நகை அணிந்து வெளிக்காட்டவே ஆலயம் செல்கின்றனர்.

“நகைபோட்ட பக்தர்கள்

எல்லோரும் வந்து சேர்ந்தார்,

ஏசுநாதர் மட்டும் அங்கு வர வில்லையே”

என்று உண்மையை உறைப்பாக உரைக்கின்றார்.

**கண்ணதாசனின் கிறித்துவத் தமிழ்ப்பணி** :

திரையிசைப் பாடல்களின் மூலம் அனைவர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டவர் கவிஞர் கண்ணதாசன் தன் வாழ்நாளின் நிறைவாக இயேசு காவியம் படைத்து இறவாப் புகழ் பெற்றார் இந்நூல் இனிமையும், எளிமையும் மிக்கது இயேசு நாதரின் வாழ்க்கை மற்றும் போதனைகளையும், சாதனைகளையும் இன்றமிழில் எடுத்தியம்புகிறது.

1.3.5 **கிறித்துவத் தமிழ்ப்பணியால் ஏற்பட்ட மறுமலர்ச்சி**

கிறித்துவர்களின் தமிழ்ப்பணியால் தமிழுலகிற்குப் பல நன்மைகள் நிகழ்ந்துள்ளன அவற்றுள் சில

1. அச்சு இயந்திரம, தாள், மை, எழுத்துக்களைச் செய்து தருவித்துத் தமிழைப் பரப்பினர்.
2. தமிழில் உரைநடை இலக்கியத்தை வளர்த்தனர்

3. செய்யுளில் எழுதப்பட்டுப் பண்டிதர்களுக்கு மட்டும் உரியதாக இருந்த தமிழைப் பாமரர்களுக்கும் உரித்தாக்கினா

4. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டனர்
5. புள்ளி, நிறுத்தற்குறி, இடம்விட்டு எழுதுதல் ஆகிய தெளிவுகளை உருவாக்கினர்
6. அகராதித்துறைக்குக் கால்கோள் இட்டனர்.
7. பிற மொழிகளில் தமிழை மொழிபெயர்த்துத் தமிழின் பெருமையை உலகறியச் செய்தனர்
8. பழமொழி இலக்கியங்கள் பல்கிப் பெருகச் செய்தனர்
9. சிறுகதை, புதினம், நாடகம், அறிவியல், மொழியியல் என்னும் புதிய பல துறைகளைத் தமிழில தோற்றுவித்து வளரச் செய்தனர்.

10)இதழ்களின் வழி தமிழை வளர்த்தனர்.

(11)திறனாய்வுக் கண்ணோட்டத்தை நல்கினர்.

(12)தமிழின் பெருமையைத் தமிழருக்கு உணர்த்தினர்

## அலகு - 2

## 2.1 நந்திக் கலம்பகம்

### 2.1.1 கலம்பகம் :

கலம் +பகம் =கலம்பகம்.கலம் = 12, பகம்= 6, கலம்பகம் 18 உறுப்புகளைக் கொண்ட இலக்கிய வகை.

18 உறுப்புகள் :

| | |
|---|---|
| 1. திரவம் | (10)வண்டு |
| 2. அம்மானை | (II) கொண்டல் |
| 3. ஊசல் | (12) மருள் |
| 4. யமகம் | 13) சம்பிரதம் |
| 5. மொட்டு | (14) தவம் |
| 6. மறம் | (15) பாண் |
| 7. சித்து | (16) ஊர் (குடி) |
| 8. காலம் | (17) தழை |
| (9)மதங்கி | (18) இரங்கல் |

நம்பியாண்டார் நம்பி பாடிய 'ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் பத்தாம் நூற்றாண்டில் தோன்றியது. பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகம் குறிப்பிட த்தக்கது. இரட்டையர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லை கலம்பகம் இரண்டையும் பாடியுள்ளனர் **கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்'** என அவர்கள் புகழ் பெற்றனர் இதுகாறும் 63 குறிக்கப்படுகிறது.

### 2.1.2 நந்திக் கலம்பகம் :

நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் நந்திவர்மன் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்டவன் இம்மன்னன் குருக்கோட்டை, தெள்ளாறு, வெறியலூர் முதலிய ஊர்களில் போர் செய்து பகைவரை வென்றவன். சிறந்த சிவபக்தன், சுல்வி கேள்விகளில் சிறந்தவன்.

பாட்டுடைத் தலைவன் நந்திவர்மன் வீரச் சிறப்புகள் நிரம்பப் பெற்றவன். திருமகளுடைய செல்வத்தையும், பூமித் தாயையும் தனக்கே உரிமையாக்கிக் கொண்டவன் தோளாற்றலால் வெள்ளாங்கரை வரை வென்ற வீரனான பல்லவ மன்னன் உன் கண் சிவந்தால் பகைவருடைய மண் சிவக்கும் உன்

புருவம் துடிக்க ஆரம்பித்தால் எதிரிகளுக்கு இடக்கண் துடிக்கும். நின்னை எதிர்க்கும் மன்னனுடைய மனைவியர் பெரிதும் துன்புறுவர். உன் யானைப் படையைத் தயார் செய்தாலே எதிரியினுடைய நாடு இரத்தக்காடாக மாறும்

சிவனை முழுதும் மறவாத சிந்தையுடைய நந்திவர்மன் நாட்டில் மலர்ந்துள்ள குவளை மலர்களில் தேன் உண்ணுகின்ற தும்பியே! மழை பொழியும் கார்காலம் வந்தது. கவலை பெரிதாக உள்ளது. கணவர் உறவு கதையாக நடந்தது என்று நந்திவர்மன் மேல் கொண்ட காதலால் வருந்தும் தலைவியை நினைவூட்டுவது.

தோழியே! என் நிலையறியாது நற்றாயும், செவிலியும், பிற தோழியர்களும் துன்பம் செய்கின்றனர். தலைவன் வருவதாய்க் கூறிச் சென்ற கார்காலமும் வந்தது நந்தியின் தோள்களைத் தழுவுங் காலம் வந்தது நிலவும் என்னைச் சுட்டெரிக்கின்றது.

பாட்டுடைத்தலைவன் இறந்த நிலையில் அவனுடைய சிறப்புகளைக் கையறு நிலைப் பாடலாகப் பாடுகிறார் நந்திவர்மனின் முகம் நிலவையும், கீர்த்திக் கடலையும், புலியிடம் வீரமும், கற்பக மரத்திடம் கரங்களும், திருமகளிடம் செல்வமும் சென்றடைந்த நிலையில் நானும் என் வறுமையும் எங்கே சென்றடைவது என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

**2.1.3 பாட்டுடைத்தலைவன் வீரச்சிறப்பு** :

திருவின் செம்மையும் நிலமகள் உரிமையும்
பொது இன்றி ஆண்ட பொலம்பூண் பல்லவ!
தோள் துணையாக மாவெள்ளாற்று
மேவலர்க் கடந்த அண்ணால்! நந்தி நின்
திருவரு நெடுங்கண் சிவக்கும் ஆகில்
செருநர் சேரும் பதி சிவக்குமே
நிறம் கிளர் புருவம் துடிக்கின் நின் கழல்
இறைஞ்சா மன்னர்க்கு இடம் துடிக்கும்மே
மையில் வாள் உறை கழிக்கும் ஆகின்
அடங்கார் பெண்டிர்
பூண்முலை முத்த பூண் கழிக்கும்மே

கடுவாய் போல் வளை அதிர நின்னொடு

மருவா மன்னர் மனந்துடிக்கும்மே

மாமதயானை பண்ணின்

உதிரம் மன்னு நின் எதிர் மலைந்தோர்க்கே.

வீரக்கழலையுடைய பல்லவ மன்னனே; நீ திருமகளின் செல்வத்தையும், நிலமகளாகிய பூமி முழுமையையும் உரிமையாக்கிக் கொண்டாய், நின் தோளாற்றலால் வெள்ளாற்றங்கரை வரையில் வெற்றிபெற்ற சிறப்புடையவன். உன்னுடைய சிறப்புப் பொருந்திய கண்கள் சிவந்தால் நின் பகைவர்களுடைய நாடு சிவக்கும். (சிவந்து எரியும்), சிறப்பும் ஆண்மையும் மிக்க நின் புருவம் துடிக்கத் தொடங்கினால் நின் கழல்களைப் பணியாத மன்னர்களுக்கு இடம் துடிக்கும். (ஆணுக்கு இடக்கண் துடித்தல் ஆபத்து). மையுண்ட கண்களை உடைய நின் எதிரியின் மனைவி மனம் துடிக்கும் (எதிரி வீழ்த்தப்படுவான்). நின் மதங் கொண்ட யானையைப் போருக்குத் தயார் செய்யும் போதே எதிரிகளின் குருதியானது பெருக்கெடுத்தோடும்.

**2.1.4 தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்துதல்** :

சிவனை முழுவதும் மறவாத சிந்தையான்

செயமுன் உறவு தவிராத நந்தியூர்க்

குவனை மாரின் மது ஆரும் வண்டுகாள்

குமிழி கழியில் விளையாடு தும்பியே

அவனி மழை பெய் குளிர் காலம் வந்ததே

அவரும் அவதி சொன்ன நாளும் வந்ததே

கவலை பெரிது பழிகாரர் வந்திலார்

கணவர் உறவு கதையாய் முடிந்ததே

சிவனை முழுதும் மறவாத சிந்தையாளனின் உறவு நீங்காத நந்தியின் ஊரில் குவளை மலரில் உள்ள தேனை அருந்தும் வண்டுகளே, உலகம் முழுவதும் மழை பொழியும் கார்காலம் வந்தது. கார்காலத் தொடக்கத்தில் வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லை. கவலையே பெரிதாக உள்ளது.கணவன் என்ற உறவும் பழிப்புக்கு இடமாகக் கதையாய் முடிந்தது.

**2.1.5 காலம்** :

அன்னையரும் தோழியரும் அடர்ந்துபொரும்காலம்

ஆனிபோய் ஆடிவரை ஆவணியின் காலம்

புன்னைகளும் பிச்சிகளும் தங்களின் மகிழ்ந்து

பொற்பவள வாய்திறந்து பூச்சொரியும் காலம்

செந்நெல்வயற் குருகினந்ஞ்சூழ் கச்சிவள நாடன்

தியாகியெனும் நந்திதடந் தோள்சேராக் காலம்

என்னையவர் அறமறந்து போனாரே தோழி

இளந்தலைவன் டே நிலவு பிளந்தெரியும் காலம்

தோழியே! கேட்போமாகத் தலைவனைப் பிரிந்து நான் பிரிவுத் துன்பத்தால் உழல்கையில் அதைப் பொருட்படுத்தாது நற்றாய், செவிலித்தாய்,தோழியர்கள் எனக்குத் துன்பத்தையே மிகுவிக்கின்றனர். ஆனி, ஆடி ஆகிய முதுவேனிற்காலம் முடிந்து ஆவணி மாதமும் பிறந்தது. கார்காலமும் மலர்ந்தது. புன்னை மலர்களும், பிச்சிப் பூக்களும் மலர்ந்து மணம் வீசுகின்றன.நந்திவர்மனின் தோளைத் தழுவ வேண்டிய காலமும் வந்தது கச்சிவளநாடன் நந்தியும் அன்னையும் அறமறந்து போயினர். நிலவும் கூட இரக்கமின்றி என்னைச் சுட்டெரிக்கின்றது.

**2.1.6 மேகவிடுதூது** :

ஓடுகின்ற மேகங்காள் ஓடாததேரில் வெறும்

கூடுவருகுது என்று கூறுங்கள் நாடியே

நந்திச் சீர் ராமனுடை நல்நகரில் நன் னுதலைச்

சந்திச் சீர் ஆமாகில் தான்.

ஓடும் மேகங்களே! நீங்கள் செல்லுகின்ற ஊரில் எம் தலைவியைக் காணும் போது கூறுங்கள் என் உள்ளம் தலைவியிடமே உள்ளது. தேரில் வெறும் கூடு மட்டுமே வருகிறது என்று. (தேரை விட மேகம் விரைந்து செல்வதால் மேகத்தைத் தலைவன் தூது விடுகின்றான்.

**2.1.7 கையறு நிலை** :

வானுற மதியை அடைந்ததுன் தட்பம்

மறிகடல் புகுந்ததுன் பெருமை

கான்று புலியை அடைந்ததுன் சீற்றம்

கற்பகம் அடைந்ததுன் கொடைகள்

தேனறு மலராள் அரியிடம் புகுந்தான்

செந்தழல் அடைந்ததுன் மேனி

யானும் என் கலியும் எவ்விடம் புகுவேம்

நந்தியே எந்தை பிரானே!

நந்திவர்மனைக் காணவருகின்ற புலவன், பரிசில் பெற்று தன் வறுமை யாவும் விலகும். என்றெண்ணிய புலவனுக்கு அம்மன்னன் இறந்தான் எனக் கேள்வியுற்று வருந்துதலே இப்பாடலின் சிறப்பு. எனினும் இப்பாடல் வழியே நந்திவர்மனின் கொடைத்திறம் போற்றப்படுகிறது.

உன் முகமோ, வானில் உள்ள நிலவைச் சென்றடைந்தது. உன் மிகுதியான புகழ் கடலுக்குள் ஒளிந்து கொண்டது. உன் வீரம் காட்டில் உள்ள புலியைச் சென்றடைந்தது.உன் வள்ளல் தன்மையுடைய கரங்கள் கற்பக மரத்தைச் சென்றடைந்தது. உன் செல்வம் திருமகளைச் சென்றடைந்தது. உன் உடலோ தீக்கிரையானது. இந்நிலையில் யானும் என் வறுமையும் எங்கே சென்றடைவது நந்தியே நம் தயாபரனே.

**சொற்பொருள்** :

மேவலர் - பகைவர், செருநர் - பகைவர் பிச்சி - சாதிப்பூ மறிகடல் - அலை மோதுகின்ற கடல் தயாபான் - அருளாளன் நும்பி - கருவண்டு, கடுவாய் - வெற்றி முரசு.

**இலக்கணக் குறிப்பு** ;

இன்றி - குறிப்புப் பெயரெச்சம்

அண்ணால் - அண்மை விளி

இறைஞ்சா, மருவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

விளையாடு தும்பி - வினைத்தொகை

கதையாய் - வினையெச்சம்

செந்நெல் - பண்புத்தொகை

மேகங்கள் - விளி

ஆமாகில் - வினையெச்சம்

உறுமதி - உரிச்சொற்றொடர்

மறிகடல் - வினைத்தொகை

அடைந்தது - ஒன்றன் பால் வினை முற்று.

## 2.2 முத்தொள்ளாயிரம்

சேரர்,சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தரின் புகழ், திறை, நாடு, கொடை, கைக்கிளை, யானை, மறம் எனப்பல தலைப்புக்களில் பாடல்கள் காணப்படுகின்றன.சேரர்,சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தரையும் முந்நூறு முந்நூறு பாடல்களால் பாடப்பட்டதால் முத்தொள்ளாயிரம் எனப் பெயர் பெற்றது. சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களுள் முத்தொள்ளாயிரமும் ஒன்றாகும். சங்ககால அகமரபுகளை யொட்டி எழுதப்பட்ட நூல். 3 x 900 = 2700 பாடல்கள் மூவேந்தர்கள் பற்றியிருந்தது. என்பர். ஒரு சாரர். ஆசிரியர் பெயர் தெரியாத ஒருவரால் திரட்டப்பட்ட நூலில் 109 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

கிடைத்துள்ள 130 பாடல்களில் சேரர்களைப் பற்றி 23 பாடல்களும், சோழர்களைப் பற்றி 46 பாடல்களும், பாண்டியர்களைப் பற்றி 61 பாடல்களும் இடம் பெற்றுள்ளன. பாடல்கள் அனைத்தும் வேந்தர்களின் பொதுப் பெயர்களாலேயே சுட்டப்படுகின்றன. இவற்றின் அகம் பற்றிய பாடல்கள் 75, புறம் பற்றிய பாடல்கள் 55.

### 2.2.1 பாடக் குறிப்பு :

- ஆசிரியர் : பெயர் தெரியவில்லை
- காலம் : கி..பி 5-8 இடைப்பட்ட காலம்
- பாடல்கள் : 300X1-300 பாடல்கள் தற்பொழுது 109 பாடங்கள் மட்டுமே கிடைக்கின்றன.
- பாவகை : வெண்பா

### 2.2.2 முத்தொள்ளாயிரத்தின் மரபுக் குறிப்பு :

- முத்தொள்ளாயிரம விருந்து என்னும் வனப்பு வகையைச் சேர்ந்தது.
- முத்தொள்ளாயிரத்தில் 101 பாடல்களும் புறத்திரட்டு என்னும் நூலில் இருந்து திரட்டப்பட்டன.
- மூவேந்தர்களின் பெயரைக் குறிப்பிடாமல் மூவேந்தரின் பொதுப்பெயர்களால் (கோதை -சேரன், செம்பியன் சோழன்,

மாறன் -பாண்டியன் ) குறிப்பிடும் பொதுமைச் சிறப்பு முத்தொள்ளாயிரத்தில் காணப்படுகிறது.

**2.2.3 பாண்டியன்:**

**புகழ்**

பார்படும் புகழ் செம்பொன் பதிபடும் முத்தமிழ் நூல்
நீர் படுப் வெண் சங்கும் நித்திலமும் - சாரல்
மலைபடும் யானை வபமாறன் கூர்வேல்
தலைபடு தார்வேந்தர் மார்பு.

பாண்டிய நாடு பொன்னுடையது, ஊர்கள் தோறும் முத்தமிழ் பாடப் பெறும். நீர் நிலைகளில் வெண் சங்கும், நித்திலமும் காணப்படும்; மலைகளில் யானைகள் நிறைந்திருக்கும். பாண்டியனைத் தொழுது வணங்காதவன் மார்பில் கூர்வேல் பாயும்.

**திறை**

நேமிநிமிர் தோள் நிலவுதார் தென்னவன்
காமர் நெடுங்குடைக் காவலன் ஆணையால்
ஏமமணிப் பூண் இமையார் திருந்தடி
பூமி மிதியாப் பொருள்.

பரந்த தோள்களையுடையவன். நிலவு போன்ற முகப்பொலிவினை உடையவன்.தென்னவன் சிறந்த காவலன். தேவர்களும் அவன் ஆணைக்கு வணங்கி வாழ்ந்தனர்.

**கைக்கிளை**

கார்நறு நீலம் கடியகத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவம் கொலோ - கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியால்

கொண்டிருக்கப் பெற்ற குணம்.

கரிய நல்ல நீலமலர் மணக்கும் குளத்தில் நாள்தோறும் பூத்து.நின்று தவம் செய்தது. அந்தத் தவத்தின் பயனால் போலும் வழுதி கழுத்தில் மாலை ஆகும் பேறு பெற்றுள்ளது. கூர்மையான நுனியை உடைய வேல் போன்ற வாயைக் கொண்டிருக்கும் வண்டு சிரிப்பொலி கேட்க மொய்க்கும் பூமாலை, வழுதி மாலை. இவ்வாறு தென்னவனைக் கண்ட எல்லோரும் அவனையே விரும்பினர். அவனோ மக்கள் எல்லோர்க்கும் நன்மை செய்பவளாகவே விளங்கினான்.

### 2.2.4 **சோழன்**

**யானை மறம்**

கொடிமதில் பாய்ந்து இறற் கோடும் அரசர்
முடி இடறித் தேய்ந்த நகமும் பிடிமுன்பு
பொல்லாமை நாணிப்புறங் கடை நின்றதே
கல்லார் தோள் கிள்ளி களிறு.

பகையரசர்களுடைய மதில்களைத் தாக்கியதால் ஒடிந்த தந்தத்தோடும், அரசர் முடிகளை இடறியதால் தேய்ந்த நகமும் உடைய ஆண் யானை தனது பெண் யானையின் முன் செல்ல நாணிய புறங்கடைப் பக்கமாக நின்றது. இவ்வாறு சோழர்களின் யானைகளின் வீரம் சொல்லப்பட்டுள்ளது

**களம்**

முடித்தலை வெள்ளோட்டு மூளை நெய்யாகத்
தடித்த குடல் திரியா மாட்டி - எடுத்து எடுத்துப்
பேஎய் விளக்கு அயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்.

சோழன் போர் செய்த களம், பேய்கள் விளக்கேந்தி இருப்பதாகப் புலவர் கூறுகின்றார். பகையரசர்களுடைய மண்டை ஓடு விளக்காகவும், முளை நெய்யாகவும், குடல் திரியாகவும் வைத்துப் பேய் மகளிர் விளக்கு ஏற்றியதாகக் கூறப்பட்டுள்ளது.

**கொடை**

அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்
மந்தரம் போல் மாண்ட களிறு ஊர்ந்தார் - எந்தை
இலங்கு இலைவேல் கிள்ளி இரேவதி நான் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு.

சோழனுடைய பிறந்த நாள் ரேவதி நட்சத்திரம் கூடிய நன்னான் அந்நாளில் அந்தணர்கள் பசுக்களோடு பொன்னும், பொருளும் பெற்றனர். புலவர்கள் பொருள்களோடு களிறும் பெற்றனர். சிலந்திகளோ தன் கூடுகளை இழந்தன.

### 2.2.5 சேரன்

**புகழ்**

வானிற்கு வையகம் வென்றது வானத்து
மீனிற்கு அனையார் மறமன்னர் - வானத்து
மீன்சேர் மதியனையான் விண் உயர் கொல்லியர்
கோன் சேரன் கோதை என்பான்.

சேரனுடைய புகழ் வானம் பரவியிருந்தது. வானத்து தோன்றும் விண் மீன் போலப் பல அரசர்களும், அவனுக்குத் திறை செலுத்தி வாழ்ந்தனர்.

**நாடு**

அள்ளல் பழனத்து அரக்கு ஆம்பல் வாய் அவிழ
வெள்ளம் தீப்பட்டது எனவெரீஇப் - புள்ளினம்தம்
கைச் சிறகால் பார்ப்பு ஒடுக்கும் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோ கோதை நாடு.

சேரனுடைய நாடு எப்போதும் ஆரவாரம் நிறைந்ததாகவே காணப்பட்டது. குளத்தில் உள்ள ஆம்பல் பூக்கள் வெடித்திருப்பதைக் கண்ட பறவையினங்கள் வெள்ளம் தீப்பட்டது எனப் பயந்து தம் இனங்களைச் சிறகால் கோர்த்துக் கொண்டன. இத்தகைய இயற்கை அமைப்பைக் கொண்டது சேர நாடு.

**கைக்கிளை**

ஏற்று ஊர்தியானும் இகல் வெம்போர் வானவனும்

ஆற்றலும் ஆள்வினையும் ஒத்து ஒன்றின் ஒய்வாரே

கூற்றக் கணிச்சியோன் கண் மூன்று இரண்டேயாம்

ஆற்றல் சால் வானவன் கண்.

சிவபெருமானும், சேரனும் ஆற்றலாலும், ஆள்வினையாலும் ஒத்துக் காணப்பட்டனர். சிவபெருமானுக்கு மூன்று கண் சோனுக்கு இரண்டு கண் எனச் சேரனைக் கண்ட பெண் அவன் மீது காதல் கொண்டு கூறியதாகப் பாடல் அமைகின்றது.

**சொற்பொருள்** :

ஏமம் - பொன், நேமி - பூமி, இமையார் - தேவர்கள், வாமான் - தாவுகின்ற குதிரை, தடித்த - திரண்ட செம்பியன் - சோழன், அள்ளல் - சேறு, பழனம் - நீர்ப்பொய்கை, ஏற்றூர்தியான் - காளையை ஊர்தியாக உடைய சிவன், வானவன் - சேரன், கூற்றக் கணிச்சியோன்.காலனைப் போலக் (யமன்) கொலை செய்யும் மழுப்புடைய சிவபெருமான்.

**இலக்கணக் குறிப்பு**:

படுப - பலவின் பால் வினைமுற்று; முத்தமிழ் - பண்புத் தொகை, வெண்சங்கும் நித்திலமும் எண்ணும்மை, வயமாறன் - உரிச்சொல் தொடர், நிமிர்தோள் - வினைத்தொகை.

## 2.3 தமிழ்விடு தூது

1.சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்

தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்

2.டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு

விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே

3.செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு

கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்

4.கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்

பாடலறி வித்த படைவேளும் - வீடகலா

5.மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்

அன்னைமுலைப் பாலி னறிந்தோறும் - முன்னரே

6.மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்

ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோருந் - தோன்றயன்மால்

7.தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்

பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

8.மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்

பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

9.ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்

தொல்காப் பியமொழிந்த தொன்மொழியும் - மல்காச்சொற்

10.பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசு வைப்பன்னிரண்டு

சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்

11.தீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்

ஆதி முனிவ ரனைவோருஞ் - சாதியுறும்

12.தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு

மந்திரத்தி னாலொழித்த வல்லோரும் - செந்தமிழிற்

13.பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்

மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

14.காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்

பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாவருங்

15.கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்

16.என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென்

17.பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக் கேறா வியற்கலையே - விஞ்சுநிறந்

18.தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்
தீயாது சொல்விளையுஞ் செய்யுளே - வீயா

19.தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

20.புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்

21.தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்
உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி

22.ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் - மேற்படவே

23.எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணியோற்

24.பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு

25.மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - மஞ்சரையே

26.பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ - முன்னே
27.நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்
உனையும் படிப்பிப்பா ருண்டோ - புனைதருநற்

28.செய்யுட்சொன் னான்குமுயர் செந்தமிழ்ச்சொல் லோர்நான்கும்
மெய்யுட் பொருளேழ் விதத்திணையும் - மையிலெழுத்

29.தாதியாப் பெட்டு மலங்கார மேழைந்தும்
பேதியாப் பேலெழின்மாப் பிள்ளையாய்ச் - சாதியிலே

30.ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் டுள்ளற்பண்
தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா - ஓங்குமனத்

**2.3.1 கூடலில் குடி கொண்ட சிவபெருமான் (1-7) :**

சிறப்புப் பொருந்திய கூடலென்ற சிவராசதானியைக் காத்து அழகு பொருந்திய சங்கத்திற் புலவராயிருந்தவரும், பல திசைகளிலுஞ்சென்று போர்புரிந்து வாய்ந்த தமிழரசி யென்று பலரும் வாழ்த்தித் துதிப்பத் திசைதோறும் தன் வெற்றியைத் தோற்றுவித்த பெண்ணரசியும், விருப்பமுறும்படி திருத்தமான சிவஞானத் தொகுதியுடைய ஏட்டுச் சுவடிகளில் ஓர் ஏட்டினைக் கையிலெடுத் தெறிந்த கணபதியும், உண்மையருளால் மதுரையை அரசு புரிந்து ஒரு காலத்தில் மதுரைச் சங்கப் புலவரெதிரமர்ந்து பாடலின் சிறப்பையுணர்த்திய வேற்படையுடைய முருகக்கடவுளும், மனையை விட்டு நீங்காத இளமை வாய்ந்த மூன்றாண்டுப் பருவத்தின் வடமொழி நூல்களும் தென்மொழி நூல்களும் தாயாகிய உமையம்மையா ரூட்டிய ஞானத்தோடு கலந்த முலைப்பாலானறிந்தவரும், மூன்றாண்டுக்கு முன்னர் முதலையுண்ட பிள்ளையை மூன்று விழியார்முன் கவிபாடிப் பின்பெற்றுத் தரும்படி தமிழாலுரைத்தவரும், பிரமனும் திருமாலுந் தோன்றும்படி தேடியும் அறியமுடியாத சிவபெருமான் திருவடியைத் திரு நல்லூரிற் செய்யுள்பாடித் தம் முடியாகப் பெற்றுக் கொண்டவரும், ஆய்ந்து தம் முடியில் மணமுள்ள

தாழம்பூவைச் சூடாதவராகிய சிவபெருமான் ஓலையை வாரிச் சேர்த்துத் தம் பட்டோலையில் எழுதிக் கொள்ளுமாறு செய்யுள் பகர்ந்தவரும்.

**2.3.2 ( 8-15 )முட்டாதே....................யிருந்தமையால்**

தடைபடாமல் குறையாத பெருமைத் தமிழ் மூன்றினையும் ஓதிய பெரிய முனிவனும், தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைக் கூறிய பழைய முனிவனும், குறையாத சொல்லமைந்த பாவின் நிலைமையைக் கொண்டு முதல்வன்பாற் செல்லும் உயிர்களை (அவற்றின் இயலை) பன்னிரண்டு நூற்பாவைக் கொண்டு முடித்த தூய்மையுடையவரும், இருவிழிகளாகிய குற்றமில்லாத கவிதை பாடும் திருமாளிகைத் தேவர் முதலிய முனிவர் யாவரும், குலத்தாலும் உற்ற சூழ்ச்சியாலும் நீங்காத உயிர்களைச் சாரும் வினைகளையெல்லாம் தாம் சாற்றிய மந்திரம் என்ற நூலினால் நீக்கிய வல்லவரும், செந்தமிழிற் பொய்யடிமையில்லாத புலவரென்று புலவர்களாற் புகழ்ந்து கூறப்பட்ட உண்மைத் தொண்டராகிய சங்கப் புலவர்களும், ஐயடிகள் காடவர்கோன் என்பவரும், செம்மையான (திருத்தமான) சொற்களையுடைய கழறிற்றறிவார் என்பவரும், பாடுவதற்கு அருமையான தெய்வமொழிப் பாவலரும், ஆராய்தற்கு அருமையான கல்லாத மூடர்கட்குச் சிங்கம் போன்ற கல்வி கேள்வியிற் சிறந்த எல்லாரும் நீயாயிருந்தமையால்.

2.3.3 (**15-16)சொல்லாரும்....................போற்றினேன்**

புகழ் நிறைந்த எனக்கு வாய்த்த தெய்வமே உன்னைக் கண்டு துதித்தால் என் குறைகள் எல்லாம் நீங்கும் என்று கருதி நின் பொன்

போன்ற திருவடிகளையே புகலாகக் கொண்டு போற்றுகின்றேன்.

**2.3.4 (16-19): பன்னியமென்.................வந்தாய்**

நெருங்கிய மெல்லிய பஞ்சியால் நூற்கப்படாத நூலே!

பலரால் நெருடப்படாத பாவே! கிழிந்து குறைந்து அழுக்குப்படாத இயல்புள்ள

கலையே! மிஞ்சிய நிறம் தோயாத செந்தமிழே! சொல்லினை ஏராகக்

கொண்டுழும் புலவர் மனம் கருகாது சொல்லை விளைக்கும் செய்யுளே! ஒரு

குலத்தினும் பிறவாமல் இறவாமல் உயிர்க்குயிராக நின்றாய். வந்த குலங்கள் ஐந்தாகவும் தோன்றிவளர்ந்தாய்.

**2.3.5 (19 – 22)இருநிலத்து.................பிறந்தாய்**

பெருமை தங்கிய புவியிற் புண்ணியம் வாய்ந்த உந்தியிடத்தில் காற்றுத் தங்கிப் பின் வாக்கு ஆகிய சூற் கொண்டிருந்து தலையும் கழுத்தும் மூக்கும்

மார்பும் ஆய நான்கிடத்தினும் சார்ந்து உதடும் நாக்கும் பல்லும் கெடாத மேல் வாயும் ஆய கருவிகளால் வடிவமாகித் தலையினின்று மீண்டு ஏற்குமாறு முதலெழுத்து முப்பதாகவும் சார்பெழுத்து இருநூற்று நாற்பதாகவும் நன்றாகப் பிறந்தாய்.

**2.3.6 (22 – 27)மேற்படவே.......................படிப்பிப்பாருண்டோ**

இவ்வாறு நீ பிறந்ததற்கு மேற்பட்டு எண் முதலாகச் சொல்லும் பன்னிரண்டு பகுதிகளாகச் செய்து மண்ணுலகிற் பிறந்த முதன்மையுடையோர் வளர்க்குங் காலத்தில் ஆசிரியர்கட்குக் கண்மணிபோல் விளங்கிப் பள்ளிக்கூடத்தில் அசையாம் பலப்பல தொட்டில்களிற் படுப்பித்துச் சிறுவர் கூடித் தள்ளித் தாலாட்டி உள்ளிடம் விளங்கும்படி மஞ்சளாற்றேய்த்துக் கழுவி மையிட்டு மூன்று பாலும் மிகுதியாகப் புகட்ட உயர்ந்து வளர்ந்தாய். மைந்தர்களையே பத்துப் பருவமாக்கி நீ வளர்க்கின்றாய்; அத்தகைய இயல்பு வாய்ந்த நின்னையொருவரால் வளர்த்து விடக் கூடுமோ? கூடாதன்றோ? முதலில் நினைக்கும் கல்வியெல்லாம் நின்பாலே யுள்ளனவெனவுணர்ந்து நின்னைப் படிக்கும் இயல்புடையவரே மனிதர் எல்லாரும். உனக்குக் கற்பிப்பவர் ஒருவருண்டோ? இல்லை.

**2.3.6 (27 – 34) புனைதருநற்..................மகிழ்ந்தாயே**

அணிசெய்கின்ற செய்யுட்குரிய சொற்கள் நான்கும், உயர்ந்த செந்தமிழ்ச் சொற்கள் நான்கும், மெய்யாகிய உட்பொருளில் எழுவகைத் திணைகளும், குற்றமில்லாத எழுத்து முதலாகிய யாப்பின் உறுப்புக்கள் எட்டும், அலங்காரம் முப்பத்தைந்தும் இயைந்து வேறுபட்டுப் பேரழகு வாய்ந்த மாப்பிள்ளையாகிக் குலமாகிய அப்பாவின்கண் அமைந்த செப்பலோசையும், அகவலோசையும், துள்ளலோசையும், தூங்கலோசையும் ஆகிய பண்கள் பட்டத்துத் தேவியராகவும், உயர்ந்த மனத்தாலாய்ந்த ஐந்து கருவிகளைப் பெற்ற நூற்று மூன்றாகிய பண்களும் பின்னர் வரைந்த மனப்பாவையராகவும் கொண்டு மதிக்கப்படும் நல்ல ஆதரவால் ஒன்பது சுவையாகிய மக்களைப் பெற்றெடுத்தாய், பெருமையாகிய வாழ்வினைப் பெற்றாய்; பொருந்தி நின்னைவிட்டு நீங்காத பண்கள் முதலாகிய பெண்டிர்களொடும் பிள்ளைகளொடும் நாடகமாகிய பெண்கள் கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாய். உலகத்தோர் புகழும்படி தாழ்வில்லாத பதினெட்டு வகைச் சிறப்புக்களாகிய வாழ்வெல்லாம் நோக்கி மகிழ்ந்தாய்.

# அலகு-3

### 3.1 திருக்குற்றால குறவஞ்சி ( மலைவளம் )

**3.1.1குறவஞ்சி**:

96 சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. குறம் +வஞ்சி, வஞ்சிக்கொடி போன்ற பெண். குறவர் குலத்தில் பிறந்த வஞ்சிக்கொடி போன்ற பெண் என்ற பொருளில் அமையும். இவ்விலக்கிய வகையில் குறத்தி குறி கூறுதல், குறத்தி குறவனும் உரையாடுதல், குறத்தியின் செயல்கள், குறி வகைகள் போன்றவை முதன்மையிடம் பெறும். முனைவர் ந. வீ. செயராமன் தம் சிற்றிலக்கியச் செல்வம் என்ற நூலின் குறவஞ்சி இலக்கியத்தின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டு எனக் குறிப்பிடுகிறார்.

**3.1.2 திருக்குற்றால குறவஞ்சி**:

தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றி, தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும். குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர். திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர். திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜயரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது. பரிசு விவரங்கள் செப்பு பட்டயங்களில ஆவணப் படுத்தப்பட்டுள்ளது.

**3.1.3 கதை அமைப்பு**

குறவஞ்சி நாடகத்திற்கென வரையறை செய்யப்பட்ட கதை அமைப்போடே இந்நூலும் விளங்குகிறது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே கட்டியங்காரன் கூறுகிறான். திருவுலா தொடங்குகிறது மூவர் தமிழும் நான்மறைகள் முழங்க குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார். குற்றாலநாதாரின் திருவுலாவைக் காண பெண்கள் எழுந்து வருகின்றனர். அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (கதைத்தலைவி) என்பவளும் திருவுலாக்காண வருகிறாள். தோழியின் வாயிலாக இறைவனைப் பற்றி அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள். இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள். தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலைவளமும் தொழில்வளமும் சிறப்பாக எடுத்துக்கூறுகிறாள். பின் வசந்தவல்லி கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் மீது காதல் கொண்டுள்ள செய்தியையும், (தலைவனின்) குற்றாலநாதரின் புகழ்பற்றியும் எடுத்துச்சொல்லி வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்று குறி சொல்லி பரிசு பெறுகிறாள் குறத்தி சிங்கி. அவள் கணவன் சிங்கன் அவளைக் காணத் தேடிவருகிறான். குறத்தியைக் கண்ட சிங்கனிடம் குறத்தி நடந்ததைச் சொல்ல இருவரும் குற்றாலநாதரைப் பாடி இன்பம் அடைகின்றனர். இவ்வாறு கதை முடிகிறது.

### 3.1.4 நூலின் சிறப்புகள்

குறவஞ்சி நூல்களுள் பாராட்டுக்குரியதாக விளங்கி வருவதும், இன்றும் நாட்டிய நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு வருவதும், இக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமகஅந்தாதி முதலிய நூல்களை இயற்றியிருந்தாலும் இன்று பலரும் விரும்பிப் படிப்பது அவருடைய குறவஞ்சி ஒன்றே. குற்றாலக்குறவஞ்சியானது இறைவன்மீது பாடப் பெற்றதால் திருக்குற்றலாக்குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் சந்த (ஓசை) நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்றுள்ளது. சான்றாக வசந்தவல்லி பந்தாடும் பாங்கைப்பற்றி எடுத்துரைக்கும்,

**மலை வளம்**

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

**கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்**

**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**

**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**

**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

**கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்**

**குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே;**

ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு தழுவும்; அக் குரங்குகளால் சிதறியெறியப்படுகின்ற பழங்களை வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து இரந்துவேண்டிக் கேட்பார்கள், வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப்)பார்த்து உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள்; வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள்; தேன் கலந்த மலையருவியினது அலைகள் மேலெழுந்து வானத்தினின்றும் வழிந்து ஓடும்; அதனால் செந்நிற ஞாயிற்றின் தேரிற்பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழும்; வளைந்துள்ள இளம் பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச் சிறப்புவாய்ந்த திரிகூடமலையே எங்களுக்குரிமையாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும்;

**முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**

**முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்**

**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**

**கிம்புரியின் கொம்பொடித்து வேம்புதினை இடிப்போம்**

**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**

**தேன்அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்**

**வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்**

**வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே;**

ஒலிக்கின்ற அலைகளையுடைய நீர் வீழ்ச்சி, செல்லும் வேகத்தில் கழங்காடுகின்ற தென்னும்படி முத்துக்களை ஒதுக்கிச் செல்லும்; அவ்வருவி, மக்கள் வாழ்கின்ற வீட்டின் முற்றங்களிலெல்லாம் பரவிச் சென்று சிறுமிகளின் மணல்வீடுகளை அழித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கும்; நாங்கள் மலைக்கிழங்குகளைத் தோண்டியும், தேன் இறால்களைப் பிய்த்து எடுத்தும், மலையின் செழிப்பைப் பாடிக்கொண்டே கூத்தாடுவோம்; பூண்கட்டிய யானைக்கொம்புகளை ஒடித்து உலக்கையாகக் கொண்டு வறுத்த தினைத் தானியத்தை இடிப்போம். இளமை பொருந்திய குரங்குகள் இனிமையுள்ள மாம் பழங்களையே பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும்; தேன் பெருகி ஓடுகின்ற செண்பகப் பூவின் மணம், தேவருலகினிடத்தே போய்ப் பரவும்; அருட்கொடை வழங்குகின்ற தேவாதி தேவராகிய குறும் பலா மரத்தினடியில் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றால நாதருக்குரியதான எல்லா வளப்பமும் பெருகியிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழுகின்ற மலையாகும்; (இன்னுங் கேள்)

**ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்**

**அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்**

**வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்**

**விந்தைஅகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**

**காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்**

**காகமணு காமலையில் மேகநிரை சாயும்**

**நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்**

**நிலைதங்கும் திரிகூடமலை எங்கள் மலையே;**

ஆடுகின்ற நாகப் பாம்புகள் கக்கிய எண்ணிறந்த மணிகள் எங்கும் ஒளிகொடுக்கும்; யானைகளானவை திங்களைத் தாம் உண்ணும் கவள உருண்டையென எண்ணி அது செல்கின்ற வான்வழியில் போகவொட்டாமல் தடைசெய்யும், மலைக் குறவர்கள் தினைப்பயிரை விதைப்பதற்காக அழிக்கப் படுகின்ற காடுகளிலெல்லாம் உள்ள பலவகை மரங்களும் அகில் குங்குமம் சந்தனமரங்களும் கண்டோர் வியக்கும்படி தம் மணங்களைப் பரப்பும்; காடுகளில் எங்கும் ஓடிச்சென்று வரையாடுகள் துள்ளிக் கீழே பாயும்; காகமும் பறவாத உயர்ந்த மலையில் மேகக் கூட்டங்கள் உச்சியில் சாய்ந்தோடும்; நீண்ட குறும்பலாவடியில் எழுந்தருளியிருக்கின்றவரும் கைலை மலையில் வாழ்பவருமாகிய திருக்குற்றாலநாதரின் நிலைபெற்றிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும்; (இன்னுங் கேள்)

**கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**

**கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே**

**சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே**

**சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே**

**வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே**

**வான்இரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே**

**துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்**

**துங்கர்திரி கூடமலை எங்கள்மலை அம்மே;**

திருக்கைலைமலை யென்று கூறப்படுகின்ற வடக்குப் பக்க மலைக்குத் தென்பக்கத்தில் இருக்கின்ற மலையாகும்; இது பெரிய பொன்மலை என்னும் மேருமலை போன்ற தென்னும்படி உயர்ந்த மலை அம்மே! சிவசைலம் என்னும் தெற்கு பக்கமுள்ள மலைக்கு வடக்குப் பக்கமாக இருக்கின்ற மலை இஃது அம்மே! இம்மலை மற்ற எல்லா மலைகளின் சிறப்பெல்லாம் தனக்குள் நிறையக்கொண்டிருக்கும் வளமுடையது அம்மே! அது வைரமணியுடன் பலவகை மணிகளையும் விளைத்துத் தருவது அம்மே! வான்வழியாகச் செல்லும் ஞாயிறு குகைகளையே வழியாகக்கொண்டு நுழைந்து செல்வதற்கு இடனாகஇருப்பதும் அந்த மலைதான் அம்மே! அறிதுயில் புரிகின்ற திருமாலான வருங்கூடத் துயில் விட்டெழுந்து எல்லா உலகங்களிலும் போய்த் தேடுகின்ற மேன்மையாளராகிய திரிகூடநாதப் பெருமானுக்குரிய திரிகூட மலைதான் எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும் அம்மே! (இன்னுங் கேள்)

**கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே**

**கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே**

**எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே**

**இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே**

**சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே**

**தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே**

**செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்**

**திரிகூடமலை யெங்கள் செல்வமலை அம்மே;**

கொல்லி மலையானது எனக்குப் பின் பிறந்த செல்லி என்னும் பெயருடையாளுக்குரிய மலையாகும்; அவளின் கணவனுக்குக் குடிக்காணியாட்சியாக இருப்பது பழனிமலை ஆகும் அம்மே! சூரியன் மேலே செல்கின்ற விந்தை என்னும் மலையே என் தந்தைக்குரிய மலையாகும் அம்மே! இமயமலை என்னுடைய அண்ணனுக்குரிய மலையாகும் அம்மே! சொல்லுதற்கரிய சுவாமி மலை என்னும் மலையே என் மாமியாளுக்குரிய மலையாகும் அம்மே! என் தோழிக்குரிய மலையோ நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி யென்னும் மலையாகும் அம்மே! மேகங்கள் குமுறலாகிய பறையை முழக்க, அதற்கேற்ப மயிலினங்கள் நடனஞ்செய்கின்ற திரிகூட மென்னும் திருக்குற்றாலமலையே எங்களுக்குச் செல்வப்பொருளாக இருக்கின்ற நாங்கள் வாழும் மலையம்மே! (இன்னுங் கேள்)

**ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற் கொள்வோம்**

**உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குலம் நாங்கள்**

**வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி**

**வேங்கையாய் வெயில்மறைந்த பாங்குதனைக்குறித்தே**

**அருள்இலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்**

**ஆதினந்து மலைகளெல்லாம் சீதனமாக் கொடுத்தோம்**

**பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்**

**பரமர்திரி கூடமலை பழையமலை அம்மே.**

எங்கள் குலந்தவிர வேறொரு சாதியில் நாங்கள் பெண்கள் கொடுக்கமாட்டோம்; வேறொரு குலத்தில் பெண்களை மணஞ்செய்யவும் மாட்டோம்; குறவர் சாதியினராகிய நாங்கள் ஒருவரை நட்பு கொண்டால் இடையில் அந்நட்பை விட்டுவிடமாட்டோம்; நாங்கள் அச்சங்கொள்ளும்படி தினைப் புனத்தினிடத்தே வருகின்ற யானை முதலிய விலங்குகளைத் துரத்தி வேங்கை மரமாக நின்று எங்களுக்கு நிழல் தந்த நன்மைக்காக எண்ணிப் பார்த்து அருளாளராகிய இலஞ்சியில் எழுந்தருளியிருக்கின்ற வேலினை யுடைய முருகப் பெருமானுக்கு வள்ளி யென்னும் ஒரு பெண்ணை முன்பு கொடுக்கலானோம்; அதற்காக எங்களுக்குரிமையான வேறு மலைகள் எல்லாவற்றையும் மகட்கொடைப்பொருளாக வழங்கலானோம்; ஞாயிறு திங்கள் சுற்றிவருகின்ற மேருமலையைத் துருவன் என்பவனுக்குக் கொடுத்துதவினோம்; சிறந்தவராகிய திருக்குற்றால

நாதருக்குரிய இத்தகைய திரிகூட மலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும் அம்மே!

## 3.2 முக்கூடற்பள்ளு

### 3.2.1பள்ளு இலக்கிய வரலாறு :

பண்டைக் காலத்துத் தமிழகத்தில் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலாகிய நானிலங்களும் தத்தம் வளங்குன்றாது பயன்களைத் தந்துதவி.அதனால் முற்கால மக்கள், பசியும் பிணியும் பகையுமின்றி இன்பமிக்காராய் வாழ்ந்திருந்தனர்; அவர் வாழுமிடங்களான காடு நாடு யாண்டும் ஆடலும் பாடலும் அமைந்திருந்தன; கழனிகளில் நீர்வாழ் பறவைகளின் பரந்த ஒலிகளும், நீரின் ஓதையும், வண்டின் முரற்சியும், தவளைகளின் தழங்குறு பாடலும் வயல்வாணராகிய மள்ளர்க்குச் செவியின்பந் திளைக்கச் செய்தன; களமர்கள் எருத்தினத்தை ஏரிற் பூட்டி உழுங்கால் மருதப் பண்ணால் அவைகளை வயக்குறுத்துக் கழனிகளை உழுது தொளியாக்கி அதில் நாற்று நடச்செய்வர்; மள்ளர் மகளிர் ‘வயல் வாழ்க; விளைவு மல்க’ என வாழ்த்திச் சேறு செய்த வயலில் நாறு நடுவர். அக்காலத்துத் தம் நாவசைத்துக் குரவையொலி செய்து மகிழ்வர். மருதநிலத்தைப் பலவகைப் பாடல்களால் வாழ்த்திப் பாடுவர்; வள்ளைப் பாடலால் மள்ளர் மனத்தை மகிழ்விப்பர். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த மள்ளர்மகளிர் பாடலே ‘உழைத்தியர் பாட்டு’ என, உயர்த்திக் கூறப்பெறும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இப்பாட்டே பிற்காலத்தில் ‘பள்ளு’ பாடலாக மலர்ந்தது. பள்ளு என்பது, வேந்து அமைச்சு என்பன போலப் பள்ளர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் புனைந்துரையாகச் சுட்டியொருவர் பெயர்கொளப் பெறாவாய்ப் பாடப் பெறுவது; கோவைகள் போல ஒரு தலைவன் நாட்டகத்தே நிகழ்வதாக உரைத்துச் செல்லும் பெற்றிமை வாய்ந்தது. இவற்றின் பாடல்கள், கொச்சகக் கலிப்பா, விருத்தம், சிந்து போன்ற சிற்றடி பேரடிகளால் இயன்று கற்பார்க்குச் சுவையின்பந் தந்து மகிழ்விப்பன; இப் பாடல்கள் இசைப் பாடலாகப் பாடற்கும், நாடகமாக நடித்தற்கும் ஏற்றவாறு அமைந்துள்ளனவாகும். இத்தகைய பள்ளு நூல் பல, நந்தமிழகத்தின்கண் மலர்ந்து வளர்ந்து மக்கள்பாடலோர்த்தும் நாடகம் நயந்தும் பயன்பெற விளங்கின.

### 3.2.2முக்கூடற்பள்ளு :

பள்ளு இலக்கியங்களுள் ஒன்றே 'முக்கூடற் பள்ளு'.. இது பாண்டி நாட்டின்கண் விளங்கும் முக்கூடல் நகர்க்கண் எழுந்தருளியிருக்கின்ற அழகர் ஆகிய இறைவன்மேற் பாடப் பெற்றதாகும். இது சொன்னலமும் பொருள்நயமும் ஓசையின்பமும் ஒருங்கே வாய்ந்த சீரிய நூல்; இந் நூலாசிரியர் பெயரும் விரும்பாப் பெற்றியர் போலும்!இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. '**என்னயினாப் புலவர்**' எனச் சிலர் கூறுவர். இந்நூலில் ஆங்காங்கே திருநெல்வேலி மாவட்டப் பேச்சு வழக்கைக் காணலாம்.

**முக்கூடல்** : **தாமிரபரணி, சித்திராநதி, கோதண்டராமநதி** ஆகிய மூன்று நதியும் கூடும் இடம்.தண்பொருநையின் (தாமிரபரணி) வடபால் அமைந்த முக்கூடல் ஆசூர் வடகரை நாடு, தென்பால் உள்ள நாடு சீவலமங்கை தென்கரை நாடு. தென்கரைநாட்டில் மருதீசர் வீற்றிருக்கும் மருதூர் உண்டு.'சீவல்லபன்' என்ற பாண்டியனால் வெட்டப்பெற்ற ஏரி 'சீவல்லபன் பேரேரி'. முக்கூடல் இப்போது சீவலப்பேரி என்ற பெயரால் விளங்குகிறது.

3.2.3 **முக்கூடற்பள்ளு நூல் கூறும் செய்திகள்** :

முக்கூடற்பள்ளு நூலானது ஆசூர் வடகரையைச் சார்ந்த மூத்த பள்ளியும், மருதூர் சார்ந்த இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் ஏசிகொள்கிறார்கள். இவர்கள் சண்டையிடும் போது மூத்த பள்ளி ஆசூர் வடகரையின் இயற்கை வளங்களையும் மக்களின் உள்ள தெளிவினையும் கூறுகிறாள். இளைய பள்ளி மருதூரின் இயற்கை வளங்களையும் மக்களின் உள்ள தெளிவினையும் கூறுகிறாள். மேலும் இருவரும் கடவுளை ஏசி கொள்கின்றனர்.மூத்த பள்ளி மருதீசரையும், இளைய பள்ளி முக்கூடற் அழகரையும் ஏசி கொள்கிறார்கள்.இருவரையும் மணந்த பள்ளனின் வாழ்க்கை வளம், திண்டாட்டம் ஆகியவை பற்றிக் கூறுவது. மேலும் இந்நூலில் சிறப்பாகக் கூறப்படும் செய்திகள் மாடுகளின் வகைகள், நில வகைகள், நெல் வகைகள், அக்காலப் பண்ணையார்கள் பற்றிய செய்திகள் ஆகியவை இடம் பெறுகின்றன. இறுதியாக மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் இணைந்து பள்ளனோடு வாழ்வதாக

**3.2.4 முக்கூடற் பள்ளியின் அழகு**

நெற்றியி லிடும் மஞ்சணைப் பொட்டும்

மற்றொரு திருநாமப் பொட்டும்

நெகிழ்ந்த கருங் கொண்டையும் ரெண்டாய்

வகிர்ந்த வகுப்பும்

பற்றிய கரும்பொற் காப்பும் கையில்

வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய

பாக்கும்ஒரு சுருளுக் கொருக்கால்

நீக்கும் இதழும்

வெற்றிவிழிக் கெதிர் கொண் டிருகோ

டுற்ற கருப் பின்னு மெதிர்ந்தால்

விரிந் திடுமென் றெண்ணிச் சற்றே

சரிந்த தனமும்

சிற்றிடையும் செம்பொ னிடைக்கிடை

பெற்றிடும் பட்டாங்கு மிலங்கத்

திரு முக்கூடல் வாய்த்த பள்ளி

நெற்றியில் இடும் அஞ்சணப் பொட்டும் மற்றொரு திருநாமப் பொட்டும் நெகிழ்ந்த கருங் கொண்டையும் இரண்டாய் வாக்கெடுத்துச் சீவிய தலையும் கையில் இரும்புக் காப்பும் கையில் வெற்றிலையும் வாயில் ஒதுக்கிய பாக்கும் ஒரு சுருளுக்கு ஒருக்கால் நீக்கும் இதழும் வெற்றி விழிக்கு எதிர்கொண்டு மை தீட்டிய இரு கோடும் எதிர் நின்றால் விரிந்திடும் என்று சற்றே சரிந்திருக்கும் தனமும் (முலையும்) சிறுத்த இடையும் இடைக்கு இடையில் பட்டாங்கும் (உலகியல் நடையும்) தோன்றும்படி திருமுக்கூடல் பள்ளி தோன்றினாளே. குற்றால நாட்டின் வடபகுதியில் பாயும் சித்திர நதியானது பொருநை நதியுடன் கலக்கும் காலம் முதல் வாழையடி வாழையாக வாழ்ந்துவரும் குடியில் பிறந்தவள் நான் பத்தோடு பதினொன்று என்று குடும்பனுக்குப் பெண்ணாக நான் வரவில்லை முதன்முதலில் தாலிச் சரடு கட்டிக்கொண்டு குடும்பனுக்கு மனைவியாக வந்தவள் முத்தமிழ் நாட்டு அழகருக்குக் கொத்தடிமை பூண்ட குடும்பனின் மனைவியருள் மூத்த பள்ளி நான்.

**மருதூர்ப் பள்ளி**

செஞ்சரணப் படமிடுங் கொச்சியின்

மஞ்சளும்பூம் பச்சையும் மணக்கச்

சிறியநுதற் பிறை வெண்ணீற்றுக்

குறி யொளி வீசப்

பஞ்சலைமீன் கெண்டைகள் எனவே

அஞ்சனந்தோய் கண்கள் இரண்டும்

பக்கக் கொண்டையினும் குழையினுந்

தைக்கக் குதிக்க

நெஞ்சுகவர் கனதன மாமதக்

குஞ்சரவிணைக் கோடுகள் அசைய

நீலவடக் கல்லுடன் கோவைத்

தாலியும் இலங்க

வஞ்சிமருங்கி லணிதரும் பட்டும்

பஞ்சவணத் தழகுந் துலங்க

மருதூர்க்கு வாய்த்த பள்ளி தோன்றி னாளே.

நாண வணக்கத்தில் அம்பு போன்ற மிடுக்கான பார்வை கன்னத்தில் மஞ்சள் பூச்சு. பூ போட்ட பச்சை நிறத்தில் மேலாடை மணக்கும் பிறை போன்ற நெற்றியில் வெண்ணீறு பூசிய குறி.பஞ்சலை மீன் போலவும் கெண்டை மீன் போலவும் பிறளும் மை தீட்டிய கண்கள். அந்தக் கண்களின் பார்வை அவளது கொண்டையிலும் குழையிலும் தைத்துக் குதித்தன.நெஞ்சைக் கவரும் அவளது கொங்கைகள் யானையின் கொம்புகள் போல் அசைந்தன.நீலக்கல் பதித்த வடம், கோவை, தாலி ஒளி வீசும்படி வந்தாள். இடையில் பட்டாடையும் பஞ்ச வண்ண ஆடையும் அணிந்திருந்தாள். இப்படி மருதூர்ப் பள்ளி தோன்றினாள்.

### பள்ளன் தோற்றம்

கறுக்குங் கடாய் மருப்பின்

முறுக்கு மீசையும்–சித்ரக்

கத்தரிகை யிட்ட வண்ணக்

கன்னப் பரிசும்

குறுக்கில் வழுதடி சேர்த்

திருக்குங் கச்சையும்–செம்பொற்

கோலப் புள்ளி யுருமாலும்

நீலக் கொண்டையும்

சறுக்குந் தொறுங் குதிப்பும்

சுறுக்குந் தலை–யசைப்பும்

தடிசுற்றி ஏப்ப மிட்டே

அடிவைப் பதும்

மறுக்கும் மதுவெறிகொண்

டுறுக்குஞ் சிரிப்புந் தோன்ற

வடிவழகக் குடும்பன்வந்து தோன்றினானே.

பள்ளன், ஆட்டுக்கடா கொம்பு போல் முறுக்கு மீசை அழகாகக் கத்தரித்து விடப்பட்ட கன்னத்து மயிர். முறுக்குடன் வழுவி நுனியும் அடியும் சேர்ந்திருக்கும் இடுப்புக் கச்சை தங்கக் கறை போட்ட உருமாலை நீல நிறக் கொண்டை ஆகியவற்றுடன் வந்தான்.காலடி சறுக்கும் போதெல்லாம் ஒரு குதி போடுவான். அப்போது தலையைச் சுருக்கி அசைத்துக் கொள்வான்.தன் கைத்தடியை சுழற்றி ஏப்பம் விட்டுக்கொண்டே காலடியை எடுத்து வைப்பான் வேண்டாம் என்னும் அளவுக்கு மது அருந்திவிட்டு அதன் வெறியால் சிரித்துக்கொண்டே வந்தான்.அவன் வடிவழகக் குடும்பன்.

**மூத்த பள்ளி நாட்டு வளம் கூறுதல்**

மேடை ஏறித்தன் காலைப் பவுசு

விரித்த பீலி மயிலெட்டிப் பார்க்கப்

பேடை மாங்குயில் வாய்கொண்டு சேவல்

பிளந்த வாய்தனைப் பேசாமல் மூடக்

கோடை போய்விட்ட சோபனங் கொண்டு

குளிர்ந்த கொன்றை முறுந்தளி ரோட

வாடை யோடி வரக்கோழி கூவும்

வளமையாசூர் வடகரை நாடே.

மேடையில் ஏறி மயில் தன் அழகை விரித்து ஆடும்

குயில் ஒலியைக் கேட்டுச் சேவல் தன் வாயை மூடிக்கொள்ளும்

கோடைக்காலம் போய்விட்டதே என்று பூத்திருந்த கொன்றை தளிர் விடும்

வாடைக் காற்று வரும்போது காட்டுக்கோழி கூவும். இப்படிப்பட்டது ஆதூர் வடகரை நாடு.

**இளைய பள்ளி நாட்டுவளம் கூறல்**

வென்றல் லோவிடு வேனென வேளிருள்

வேழங் கூடி மதிக்குடை தாவக்

குன்றெ லாந்தர மில்லையென் றாடவர்.

கொம்ப னார்முலைக் குன்றிற் பதுங்க

மன்றல் சேரிள வேனிற் புறாக்கள்

மாங்கு யிலுக்கு மாராயஞ் சொல்லித்

தென்ற லோடி வரக்கோழி கூவுஞ்

சீவல மங்கைத் தென்கரை நாடே.

மன்னர் குடை என்று எண்ணி யானை வானத்திலுள்ள நிலாவை வெல்லத் தாவும். குன்றில் வளம் இல்லை என்று ஆடவர் மகளிர் முலைகளில் பதுங்குவர். குயிலோடு மாராயம் சொல்லிப் புறாக்கள் பேசும். தென்றல் ஓடிவரக் கோழி கூவும். இப்படிப்பட்டது சீவலமங்கைத் தென்கரை நாடு.

**மூத்த பள்ளி : நகர் வளம்**

கொண்டல் கோபுரம் அண்டையிற் கூடும்

கொடிகள் வானம் படிதர மூடும்

கண்ட பேரண்டந் தண்டலை நாடும்

கனக முன்றில் அனம்விளை யாடும்

விண்ட பூமது வண்டலிட் டோடும்

வெயில்வெய் யோன்பொன் னெயில்வழிதேடும்

அண்டர் நாயகர் செண்டலங் காரர்

அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே

கொண்டல் மேகங்கள் வானளாவிய கோபுரங்களில் கூடும். அரனின் கொடிகள் வானத்தை மூடும். சோலைகள் அண்டத்தை வளைக்கும்.தங்க அணிகலன்கள் கிடக்கும் முற்றத்தில் அன்னம் விளையாடும். பூவிலுள்ள

தேன் வழிந்தோடுவதால் நிலத்தில் வண்டல் படியும் கதிரவன் மதிலில் நுழைந்து செல்ல வழியைத் தேடிக்கொண்டிருப்பான். அண்டர் நாயகர் செண்டு அலங்காரர் அழகர் குடிகொண்டுள்ள முக்கூடல் எங்கள் ஊர்.

**இளைய பள்ளி : நகர்வளம் கூறல்**

சங்கம் மேடைகள் எங்கும் உலாவும்

தரங்க மீன்பொன் னரங்கிடை தாவும்

திங்கள் சோலை மரங்களை ராவும்

தெருக்கள் தோறும் மருக்களைத் தூவும்

பொங்க ரூடிளம் பைங்கிளி மேவும்

பூவை மாடப் புறாவினங் கூவும்

வங்க வாரிதி வெங்கடு உண்ட

மருதீசர் மருதூ ரெங்கள் ஊரே.

சங்குகள் மணல் மேடுகளில் கிடக்கும்.பொன்மீன் அணிகள் அரங்கில் கிடக்கும் நிலா சோலையிலுள்ள மரங்களை உரசும். அதனால் அதன் பூக்களிலுள்ள மகரந்தப் பொடிகள் தெருக்களில் தூவப்படும். அதில் கிளிகள் அமர்ந்திருக்கும் மாடங்களில் இருந்து கொண்டு பூவையும் புறாவும் கூவும்.கடலைக் கடையும்போது வெளிவந்த நஞ்சை உண்ட மருதீசர் குடிகொண்டுள்ள மருதூர் எங்கள் ஊர்.

**மூத்த பள்ளி : நாட்டு மக்கள் வளம் கூறல்**

கறைபட் டுள்ளது வெண்கலைத் திங்கள்

கடம்பட் டுள்ளது கம்பத்து வேழம்

சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு

திரிபட் டுள்ளது நெய்படுந் தீபம்

குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி

குழைபட் டுள்ளது வல்லியங் கொம்பு

மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்

வளமை ஆதூர் வடகரை நாடே.

கறை நிலாவில் மட்டுமே உள்ளது. மக்கள் நடத்தையில் இல்லை. கட்டுப்பாட்டில் இருப்பது கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் யானை மட்டுமே.மக்கள் விடுதலையாக வாழ்கின்றனர்.வானத்தில் பறக்கும் பறவைக்கு மட்டுமே சிறை (சிறகு). மக்களுக்குச் சிறை (சிறைச்சாலை) இல்லை. எண்ணெய் ஊற்றி எரியும் விளக்கில் மட்டுமே திரி உள்ளது. மக்களிடம் திரிபு இல்லை அரைத்துத் தேய்வது அம்மி மட்டுமே. மக்களின் விரிந்த மனத்தைத் தேய்க்க முடியாது. கொடிக்கு மட்டுமே வளைந்து கொடுக்கும் குழைவு உள்ளது. வீரரிடம் குழைவு இல்லை. செய்யுளில் மட்டுமே அரிய பொருள்கள் மறைந்து கிடக்கின்றன. மக்களிடம் ஒளிவு மறைவு இல்லை வெளிப்படையாக வாழ்கின்றனர். இது வளமை மிக்க ஆசூர் வடகரை நாட்டு நிலைமை.

**இளைய பள்ளி : நாட்டின் வளத்தைக் கூறல்**

காயக் கண்டது சூரிய காந்தி

கலங்கக் கண்டது வெண்தயிர் கண்டம்

மாயக் கண்டது நாழிகை வாரம்

மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்

சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்

தனிப்பக் கண்டது தாபதர் உள்ளம்

தேயக் கண்டது உரைத்திடுஞ் சந்தனம்

சீவல மங்கைத் தென்கரை நாடே.

வெயிலில் காய்வது சூரியகாந்தி மலர் மட்டுமே.மக்களிடம் காய்ச்சல் (காழ்ப்பு உணர்வு) இல்லை.தயிர் மட்டுமே கடையும்போது கலங்கும். மக்கள் கலக்கம் இல்லாமல் வாழ்கின்றனர். நாழிகை வாரம் போன்ற காலம் மட்டுமே மாயும்.மக்கள் தெம்பு மாய்வதில்லை.வெள்ளம் மட்டுமே சுழிந்து செல்லும் மக்கள் சுழன்று வாழ்வதில்லை.நெல் பயிர் மட்டுமே விளைச்சலில் சாயும். மக்கள் துன்பத்திலும் சாய்வதில்லை.தனித்திருக்க விரும்புவது துறவியர் உள்ளம் மட்டுமே. மக்கள் கூடி வாழவே விரும்புவர். தேயக் கண்டது சந்தனக் கட்டை மட்டுமே.மக்கள் மனம் தேய்வது இல்லை. இது சீவல மங்கை தென்கரை நாட்டு நிலைமை.

**பள்ளியர் ஏசல்**

மந்திரமும் தந்திரமும்

மருதூர்ப்பள்ளி-உன்போல்

வகைவந்தால் பள்ளனுமென்

வசமாகானோ?

சந்தியில்மாங் கொட்டை போடி

முக்கூடற் பள்ளி-நீயும்

சாரங்கெட்ட மருதென்றோ

சாதிக்கவா ராய்.

**மூத்தவள்** :மந்திரமும் தந்திரமும் உன்னைப் போல் எனக்கு இருந்தால் பள்ளன் என் வசம் ஆகானோ

இளையவள் : சாப்பிட்டு விட்டுச் சந்தியில் எறிந்து கிடக்கும் மாங்கொட்டை நீ என்னைச் சாரம் இல்லாத மருது என்றோ கூற வருகிறாய் என மூத்த பள்ளியை இளைய பள்ளி ஏசுகிறாள்.

**பள்ளியர் ஏசல்** ( **இருவரும் தெய்வங்களை ஏசுதல்** )

காமனை மருகனென்று

எண்ணிப்பாராமற்-காய்ந்து

கண்ணிலேறு பட்டானுங்கள்

கர்த்தனல் லோடி

மாமனென்று பாராமல்முன்

கஞ்சனைக்கொன்றே-கண்கள்

மாறாதேபூப் பட்டானுங்கள்

மாயனல் லோடி

மூத்த பள்ளி : காமனை மருமகன் என்று எண்ணிப் பாராமல் காய்ந்து

கண்ணில் ஏறு பட்டான் (காமனை எரிக்க முக்கண் பெற்றான்) உங்கள் கர்த்தன் அல்லோடி

இளைய பள்ளி: மாமன் என்று பாராமல் முன் கஞ்சனைக் கொன்றே

கண்கள் மாறாதே பூப் பட்டான் உங்கள் மாயன் அல்லோடி.

ஏறவொரு வாகனமும்

இல்லாமையினால்-மாட்டில்

ஏறியே திரிந்தானுங்கள்

ஈசனல் லோடி

வீறுசொன்ன தென்னமாடு

தானுமில்லாமல்-பட்சி

மீதிலேறிக் கொண்டானுங்கள்

கீதனல் லோடி.

மூத்த பள்ளி: ஏற ஒரு வாகனமும் இல்லாமையினால் மாட்டில் ஏறியே திரிந்தான் உங்கள் ஈசன் அல்லோடி.இளைய பள்ளி: வீறு சொன்னது என்ன மாடுதானும் இல்லாமல் கருடப் பட்சி மீதில் ஏறிக் கொண்டான் உங்கள் கீதன் (கீதை சொன்னவன்) அல்லோடி.

**பள்ளியர் இருவரும் சமாதானமாதல்**

பெருமாள் அடியானுக்குப்

பெண்டிருந்துமே-எங்கள்

பெருமாளை நீ பழித்துப்

பேசலா மோடி

திருமால் அடிமையென்றாய்

சாலப்பசித்தால்-ஆருந்

தின்னாததுண் டோசினத்தால்

சொல்லாத துண்டோ?

மூத்த பள்ளி : பெருமாள் அடியானுக்கு (குடும்பனுக்கு) பெண்டாட்டியாக நீ இருந்தும் எங்கள் பெருமாளை நீ பழித்துப் பேசலாமோடி. இளையபள்ளி :திருமால் அடிமை என்றாய் சாலப் பசித்தால் ஆரும் தின்னாதது உண்டோ சினத்தால் சொல்லாதது உண்டோ?

தீராண்மைநன் றாகச்சொன்னாய்

மருதூர்ப்பள்ளி-போபோ

சினத்தாலுஞ் சீரழியச்

சொல்லலா மோடி

வாராதோ எனக்குக்கோபம்

முக்கூடற்பள்ளி-முந்த

வைதவரை வாழ்த்தினவர்

வையகத் துண்டோ.

மூத்த பள்ளி : தீராண்மை நன்றாகச் சொன்னாய் மருதூர்ப் பள்ளி போ போ சினத்தாலும் சீரழியச் சொல்லலாமோடி. இளைய பள்ளி : வாராதோ எனக்குக் கோபம் முக்கூடற் பள்ளி முந்த வைதவரை வாழ்த்தினவர் வையகத்து உண்டோ.

## 3.3 **இயேசு பிரான் பிள்ளைத்தமிழ் (அறிமுகம் மட்டும் )**

### 3.3.1பிள்ளைத்தமிழ்:

**குழவி மருங்கினும் கிழவ தாகும்** (தொல்:பொருள்:82)

இறைவனையோ, அரசனையோ, மக்களுள் சிறந்த ஒருவரையோ குழந்தையாகப் பாவித்துப் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் ஆகும். பிள்ளைத்தமிழ் ஆண்பால் பிள்ளைத்தமிழ் என்றும் பெண்பால் பிள்ளைத்தமிழ் என்றும் இரு வகையாக அமையும்.காப்பு, செங்கீரை, தால்,சப்பாணி,முத்தம்,வருகை,அம்புலி ஆகிய ஏழு பருவமும் இருப்பால் பிள்ளைத்தமிழ்க்கும் உரியதாகும். ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குச் சிற்றில், சிறுபறை, சிறுதேர் உரியதாகும். பெண்பாற் பிள்ளை தமிழுக்குக் கழங்கு,அம்மானை, ஊசல் ஆகப் பருவங்களும் உரியதாகும். பிள்ளைத்தமிழ் ஆனது குழந்தையின் மூன்றாம் மாதம் தொடங்கி 21 மாதங்கள் வரை பாடப்படும். பிள்ளைத்தமிழுக்குப் பிள்ளைப் பாட்டு என்றும் பிள்ளைக்கவி என்றும் வேறு பெயர்கள் உண்டு.

### 3.3.2 **இயேசு பிரான் பிள்ளைத்தமிழ்** :

கிறிஸ்துவச் சிற்றிலக்கியங்களில் ஒன்றான இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் ஆனது யூதேயா நாட்டில் பெத்தலகேம் என்னும் இடத்தில் பிறந்த இயேசுபிரானின் குழந்தை பருவ செயல்களைத் தமிழின் துணைக் கொண்டு மிகச்சிறந்த சொல்லாடல்களைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட

நூலாகும். இந் நூலின் ஆசிரியர் அருள் செல்லதுரை ஆவார். இவர் **வேளாங்கண்ணி** பதிற்றுப்பத்து, மனைமாட்சி வண்ணம், விவிலியமும் தமிழக்கமும் போன்ற பல சிற்றிலக்கியங்களைப் படைத்துத் **தமிழ்** கிறிஸ்தவ இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார்.

# அலகு-4

## 4.1சீறாப்புராணம்

சீறாப்புராணம் = சீறா + புராணம். சீறா என்பது **சீறத்** என்னும் அரபுச் சொல்லின் தமிழ் வடிவம். புராணம் என்பது **பழமையான வரலாறு** எனப் பொருள்படும். திருநபி அவர்களின் வரலாற்றைக் கூறும் புராணம் என்பது இதன் பொருள். இந்நூலின் ஆசிரியர்
**உமறுப் புலவர்** (கி.பி.1642-1703) என்பவர் ஆவர். உமறுப் புலவரின் ஆசான் **கடிகை முத்துப் புலவர்** ஆவார். உமறுப்புலவர் மார்க்க

மேதை **செய்கு சதக்கத்துல்லா** அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். இவரை ஆதரித்த வள்ளல்கள் இருவர். ஒருவர் **சீதக்காதி,** இன்னொருவர் பரங்கிப் பேட்டை **அபுல்காசிம் மரைக்காயர்**.இதன் ஆசிரியரான உமறுப்புலவர், இந்நூலை முழுவதும் முடிப்பதற்கு முன்பே இயற்கை எய்திய காரணத்தால், இதன் தொடர்ச்சியாகச் சின்னசீறா என்னும் **நூலினை** பனு **அகமது** படைத்துச் சீறாப்புராணத்தை நிறைவு செய்தார்.

**4.1.1 காப்பிய அமைப்பு**

இக்காப்பியம் மூன்று காண்டங்களையும், 92படலங்களையும், 5027 பாடல்களையும் கொண்டுள்ளது.

1) விலாதத்துக் காண்டம்

2) நுபுவ்வத்துக் காண்டம்

3) ஹிஜ்ரத்துக் காண்டம்

**4.1.2மானுக்குப் பிணைநின்ற படலம்** :

நுபுவ்வதுக காண்டத்தில் உள்ள ஒரு படலமான மானுக்குப் பிணைநின்ற படலமானது இறைதூதனான நபிகள் நாயகம் வேடனிடம் சிக்கிக்கொண்ட மானுக்குப் பிணையாக நின்ற செய்தியை கூறி நபிகள் நாயகத்தின் பெரும் கருணையைக் கூறுவதாக இப்படலம் அமைகிறது.

**4.1.3முகமது நபி மலை வழியே சென்ற காட்சி** :

1.குயினிழல் பரப்பச் செவ்விக் கொழுந்தடை நறவஞ் சிந்தும்
வயிரவொண் வரையின் விம்மி வளர்ந்ததிண் புயத்து வள்ளல்
செயிரறு மறையின் றீஞ்சொற் செழுமழை பொழிந்து தீனின்
பயிர்வளந் தேறச் செய்து பரிவுட னிருக்கு நாளில்.

2.கொன்றையுங் குருந்துங் கார்க்கோற் குறிஞ்சியும் வேயுந் தற்றித்
துன்றிய நிழலு நன்னீர் சொரிதரு மிடமுஞ் செந்தேன்
மன்றலொண் மலரு நீங்கா வனந்திகழ் வரையின் கண் ண
சென்றன நெறிக்குங் காந்தி செவ்விமெய் முகம்ம தன்றே.

மேகம் வானில் குடையாக இருந்து நிழல் தருகின்றது. மலர்கள் தேனைச் சிந்துகின்றன. மலையைப் பார்க்கிலும் திண்ணிய தோள்களை உடைய வள்ளல் முகமது நபி அவர்கள் குற்றமற்ற வேதத்தினைப் பொழிந்து

இஸ்லாம் எனும் மார்க்கத்தை வளர்த்துக் கொண்டிருந்த ஒரு நாளில், மக்கமா நகரத்தின் எல்லையை விட்டு அகன்று தன் சீடர்களுடன் சோலைகள் சூழ்ந்த ஒரு மலை வழியாகச் சென்று கொண்டிருக்கிறார். நபிகள் செல்லும் மலைப்பாதையானது குயில்களின் ஓசையாலும் கொன்றை மலர்களாலும் குருந்தை மலர்களும் குறிஞ்சி மலர்களும் நிறைந்து மணம் வீசுகிறது. அருவியின் ஓசை அமுதாய் காதில் இனிக்கிறது. மரங்கள் நிழலை சொரிந்து நிறைந்துள்ளன அவ்வனத்தில் வேடன் ஒருவன் மான் ஒன்றை வலையில் பிடித்து வைத்திருப்பதைக் கண்டு மானை நோக்கிச் சென்றார்.

**4.1.4 வேடனின் தோற்றம்** :

1.காலினிற் கழலு நீண்ட கரியகா ளத்தின் வீக்கும்
பாலினில் வலையுங் கையிற் பருவரைத் தனுவுங் கூருங்
கோல்வெறி நணியுந் தோளிற் கூன்பிறை வாளு மென்மை
வாலுடைப் பறவை சேர்த்துங் கண்ணியு மருங்கிற் கொண்டோன்.
2.குறுவெயர்ப் புதித்த மெய்யுங் கொழுந்தசை மணத்த வாயும்
பறிதலை விரிப்புங் கூர்ந்த படுகொலை விழியு மாக
வறபினி லறபி வேட னடவியிற் றொடர்ந்தோர் மானைக்
கறுவொடும் வலையிற் சேர்த்திக் கட்டிவைத் திருப்பக் கண்டார்.

வேடன் காட்டடில் திரிகின்ற விலங்குகளைக் கொன்று அதன் மாமிசத்தை அறுத்து, கொம்புகளில் வளைத்து, நெருப்பில் சுட்டு உண்டு, தனது உடலை வளர்ப்பதைத் தவிர வேறு ஒன்றையும் அறியாதவன். காலில் செருப்பையும், தனது இடையில் கந்தைத் துணியையும், தோளில் விலங்குகளைப் பிடிக்கின்ற வலையையும், கையில் பெரிய கோதண்டம் எனும் ஆயுதத்தையும், முதுகில் அச்சத்தைத் தருகின்ற கூரிய அம்பினையும், தோளில் வாளாயுதத்தையும் கொண்டு காட்சி அளித்தான். உடல் முழுவதும் முத்துகள் போன்ற வியர்வையோடும் மாமிசம் உண்ணப்பட்ட வாயோடும் கொலை வெறிக் கொண்ட கண்களோடும் வேடனானவன் தோற்றமளித்தான்.

**4.1.5மானைக் கண்ட நபிகளின் நிலை** :

1.குழைகுழைத் தெரியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை நோக்கார்
பொழிமலை யருவி நோக்கார் புறத்துநன் னிழலை நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல் செறிதரு மீந்தின் செங்காய்
மறையெனச் சொரிவ நோக்கார் மானையே நோக்கிச் சென்றார்.

2.அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முகமுஞ் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை யோடும்
வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப்
பருவர லுழக்கு முள்ளத் தொடும்பிணை பகரு மன்றே

வேடன் ஒரு மானைக் கோபத்துடன் தன் வலையில் சேர்த்துக் கட்டி வைத்திருப்பதைத் தன் கண்களால் கண்டார் நபி பெருமான். செழிப்புற்ற சோலை கொண்ட மலை வழியே சென்ற நபிகள், தேன் சிந்தும் மலர்களைப் பார்க்கவில்லை. மலையில் வீழ்கின்ற அருவிகளைப் பார்க்கவில்லை. நல்ல நிழலைப் பார்க்கவில்லை. ஈச்ச மரங்களின் காய்களையும், அவை மழை போல பொழிவதையும் பார்க்கவில்லை. வேடனால் கட்டுண்டு துன்பப்பட்டுக் கொண்டிருந்த அந்த மானையே பார்த்துக் கொண்டு அதன் அருகே சென்றார்.

**4.1.6நபிகளைக் கண்ட மானின் நிலை** :

அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முகமுஞ் சோதி
சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன்முகிற் கவிகை யோடும்
வருவது தூயோன் றூதர் முகம்மது வென்ன தேறிப்
பருவர லுழக்கு முள்ள தொடும்பிணை பகரு மன்றே.

கருணை மிகுந்த கண்களும், அழகு பொருந்திய முகமும், கஸ்தூரி மணம் கமழும் உடலும் கொண்டு தம்மை நோக்கி வருவது பரிசுத்த தூதராகிய முகமது நபிகள் என்று நிம்மதி அடைந்து, “இறைவனது தூதர் வந்து விட்டார், எனவே இவ்வேடனால் நம் உடலுக்கும் உயிருக்கும் இனி துன்பமில்லை. நம் கன்றையும் மானினத்தோடு சேர்ந்து காணலாம்” என்று தனக்குள் மகிழ்ந்தது.

**4.1.7மானின் துயர் நிலை** :

பொருப்பிடைத் துறுகற் சார்பிற் பொரியாரைத் தருவி னீழன்
மருப்புடைப் படலைத் திண்டோன் மன்னவ ருடனும் புக்கு
நெருப்பிடைத் தசைவா யார்ந்து நின்றவே டனையுஞ் செம்மான்
றிருப்புதற் கருங்கட் டுண்டு கிடப்பதுஞ் சிறப்பக் கண்டார்

தரையில் வெள்ளியை உருக்கிவிட்டது போலத் தனது மடியில் பால் சிந்தியிருக்கவும், கண்களில் நீர் பொழிய உடலில் இருந்து பெருமூச்சு வெளிவர, திரும்புவதற்குக் கூட வழியில்லாமல் காலில் கட்டுண்டு கிடந்த மானின் அருகில் நபிகள் சென்றார்.கொடி போன்ற உடம்பிலும், இலையைப் போன்ற குளம்பிலும் இட்ட சுருக்கினால் வேதனைப்பட்டுக் கிடந்த மானின் உடல் பதைக்கின்ற நிலையையும், அதன் பெருமூச்சையும் கண்ட நபிகள் மானின் அருகே அன்பு சுரக்க நின்றார்.அக்காட்டில் உள்ள மரங்களில் உள்ள மலர்கள் செந்தேனைப் பொழிந்தன. அக்காட்சி மானின் துயரத்திற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மரங்கள் கண்ணீர் சிந்துவது போல இருந்தது. மானைக் கட்டி வைத்திருந்த வேடனைக் கண்ணால் காண்பதும் பாவம் என்பது போல, பறவைகள் தத்தம் இனத்தோடு கூட்டுக்குள் புகுந்தன. பறவைகள் கூட்டுக்குள் புகுந்தபோது பூக்களில் உள்ள தேனை உண்ட வண்டுகள் இசை பாடின. அந்த இசையானது, “முகமது நபி வருவார். மானை மீட்பார். வருந்த வேண்டாம்” என்று கூறுவது போல இருந்தது.

**4.1.8 மான் தன் துயர் நிலையை நபிகளிடம் கூறியது** :

1.தனியனென் னுயிருங் காக்குங் கலையுயிர் தானு மொன்றா
யினிதினொன் றாயத் தென்ன விளங்கன்றொன் றீன்றே னின்ப
நனிகளி கடலி லாழ்ந்து நறுமலை யிடத்திற் சேர்ந்து
துனிபல வகற்றி னேன்முன் சூழ்வினை யறிகே லேனே .
2.பிடிபடு மிதற்கு முன்னே மூன்றுநாட் பிறந்து புல்லின்
கொடிநுனை மேய்ந்து நீருங் குடித்தறி யாது பாவி
மடிமுலை யிறங்கிப் பாலும் வழிந்தது குழவி சோர்ந்து
படிமிசை கிடந்தென் பாடு படுவதோ வறிகி லேனே

காட்டில் வேடனால் கட்டுண்டு கிடந்த மான், தன்னருகில் வந்து நின்ற முகமது நபியை நோக்கி, "இறைவனது உண்மையான தூதரே, என் உயிர் போன்ற சுற்றமும், என் கலைமானும், என் கன்றும் ஒன்றாகத் திரண்டு இந்த மலையின் பக்கத்தில் பயமின்றிப் புல் தரையில் மேய்ந்து வாழ்ந்து வந்தோம். எங்களுக்கு ஓர் இளங்கன்று வேண்டுமென்று விரும்பியும், நான் கருவுறாததால் வருத்தமடைந்தோம். பின் உங்கள் பெயரைப் போற்றி வணங்கியதால் எனக்குக் கரு உருவாகி வளர்ந்தது. எனக்கும் எனது கலைமானுக்கும் ஓர் இளங்கன்று பிறந்தது. நாங்கள் இன்பக்கடலில் மிதந்தோம். இம்மலையின் பக்கம் துன்பமின்றி வாழ்ந்தோம். ஆனால் என் முன்வினையினை நான் அறியவில்லை. நாங்கள் மலைச்சாரலில் ஒரு நாள் தழையுண்டு பசி தீர்த்து அச்சமின்றி உலவி வந்தோம். நாங்கள் நின்றிருந்த திசையின் எதிரிலிருந்த மலை முகட்டில் இருந்து ஒரு வரிப்புலியின் முழக்கம் கேட்டது. அதைக் கேட்ட நாங்கள் அச்சமடைந்து ஒவ்வொரு திசைக்கும் தனித்தனியாகச் சிதறி ஓடினோம். ஓடிய வேகத்தில் நான் என் கலைமானையும், கன்றையும் காணாது வேறு ஒரு காட்டில் புகுந்தேன்.

சென்ற திசை தெரியாது நான் புகுந்த காட்டுக்குள் மறைந்திருந்த இவ்வேடன், வலையைச் சுற்றி எனக்குச் சுருக்கிட்டான். புலியிடமிருந்து தப்பிச் சிங்கத்தின் வாயில் சிக்கியது போன்ற நிலையில், நான் மனமுடைந்து ஒடுங்கி நின்றேன். நான் சிக்கியதைக் கண்ட வேடன், "என் பசிக்கு உணவு கிடைத்தது" என்று கூறி என்னுடைய நான்கு கால்களையும் உடம்பினையும் ஒரு கயிற்றால் கட்டினான். என்னை இவ்வனத்திற்குள் கொண்டு வந்து இறக்கினான். நெஞ்சில் கவலை கொண்டு நான் தளர்வுடன் இருக்கும்போது நீங்கள் வருவதைக் கண்களால் கண்டு தளர்ச்சி நீங்கினேன்" என்று தான் வேடனிடம் சிக்குண்ட சூழலை நபிகள் பெருமானிடம் விளக்கிக் கூறியது.

**4.1.9நபிகளிடம் மான் விடுத்த வேண்டுகோள்**

1.மானுரை வழங்கக் கேட்டு மனத்தினிற் கருணை பொங்கிக்
கானவேட் டுவனை நோக்கிக் கன்றிடை வருத்தந் தீர்த்துத்
தான்வரு மளவு மியானே பிணையெனச் சாற்றி நின்றார்
தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளக்குஞ் செம்மல்

2.பிரியமுற் றிரங்கிக் காட்டின் பிணக்கியான் பிணையென் றோது
முரையினைக் கேட்டு வேட னொண்புயங் குலுங்க நக்கித்
தெரிதரு மறிவி னோடுஞ் சினத்தொடுங் கலந்து தேர்ந்து
கருமுகிற் கவிகை வள்ளல் கவின்முக நோக்கிச் சொல்வான்

வேடனிடம் சிக்குண்ட மான் நபிகள் நாயகத்திடம், "விலங்கு சாதியாயினும் நான் கூறும் சொற்களைக் கேட்பீராக! நான் இவ்வேடனால் இறப்பதற்கு அஞ்சவில்லை. பிறந்த உயிர்கள் ஓருநாள் இறப்பது நிச்சயம். நான் என் கலைமானுடன் பிரிவில்லாமல் சில நாள் வாழ்ந்தேன். அன்புடன் ஒரு கன்றினையும் ஈன்றேன். இனி நான் எது குறித்து வாழ வேண்டும். மூங்கில் இலைப் பனி நீர் போல இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. காட்டில் எங்காவது இறவாமல் உம்முடைய முகம் நோக்கி இறப்பதே மேலானது. வரிப்புலியின் முழக்கம் கேட்டு மானினம் சிதறித் தனித்தனியாக ஓடிப் பிரிந்தது. என்னைக் காணாது ஆண்மான் காட்டில் தேடி அலைந்ததோ? அல்லது வரிப்புலியின் வாயில் அகப்பட்டு இறந்ததோ? என் பிரிவினால் புல்லினை உண்ணாமல் நீரினை அருந்தாமல் கண்ணீர் வழிய நெருப்பில் இட்ட இளந்தளிர் போல உடல் பதைத்து நிற்கும். என் கன்று நான் பிடிபடுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்புதான் பிறந்தது. எனது மடியில் சுரந்த பாலும் வழிகின்றது. என் கன்று தன் தந்தையிடம் சேர்ந்ததோ? புலியின் வாயில் அகப்பட்டு இறந்ததோ? என்னைத் தேடி அலைகின்றதோ? உன்றும் அறியேன். எனக்கு இதுவன்றி வேறு கவலையில்லை.

கலிமா என்னும் மூலமந்திரத்தின் வழியாக, அனைவரையும் சுவர்க்கத்தில் புகச் செய்யும் புண்ணியனே! இவ்வேடனின் பசியைத் தீர்க்க விருப்பமாக உள்ளேன். அதற்கு முன் என் கால்களைப் பிணைத்துள்ள பிணைப்பை நீக்கி, என்னைத் தாங்கள் பிணையாக நின்று விடுவித்தல் வேண்டும். என்னைத் தாங்கள் விடுவித்தால் நான் என் கலைமானைச் சேர்ந்து அதன் கவலையைப் போக்கி என் நிலையை என் இனத்திற்குச் சொல்லி விட்டு என் கன்றுக்குப் பாலூட்டிவிட்டுச் சில மணி நேரத்தில் திரும்பி விடுவேன்" என்று வேண்டி நின்றது.

**4.1.10 நபிகள் பிணையாக இருக்க இசைந்தமை :**

மானின் வேண்டுகோளைக் கேட்ட நபிகள், வேடனை நோக்கி, "இந்த மான் தனது கன்றின் துயர் தீர்த்து வரும்வரை நான் இதற்குப் பிணையாக நிற்கிறேன். எனவே இதனை விடுதலை செய்து விடு" என்று கூறினார்.

**4.1.11வேடனின் மறுமொழி :**

கானிடைப் பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற் றுண்டோ
வூனமிப் பிணைச்சொ லையா வோதுவத் தொழிக வென்றான்

நபிகளின் உரையைக் கேட்ட வேடன் சிரித்து, "முட்கள் நிறைந்த காட்டில் முகத்து வியர்வை உள்ளங்கால் வரை நனைய ஓடி எந்த வேட்டையும் கிடைக்கப் பெறாத நிலையில் அம்மானைப் பிடித்துத் தூக்கி வந்தேன். இம்மான் தசையால் என் பசி நீங்கியது என மகிழ்வோடு இருந்தேன். முகமது அவர்களே! நீங்கள் எனக்கு வருத்தம் தரும் சொற்களைக் கூறினீர்கள். இச்சொற்கள் உமக்கு மட்டுமின்றி எவருக்கும் பொருத்தமற்றவை. காட்டில் பிடித்த மானை விட்டுவிட்டால் அது மீண்டும் மனிதனிடம் வருவது முன் எங்கும் நடந்தது உண்டோ? அறிவுடையவர்கள் இவ்வாறு பேசுவது உண்டோ? எனவே ஊனம் மிக்க இச்சொல்லைக் கைவிடுக" என்றான்.

**4.1.12நபியின் மறுமொழி** :

என்னுறு பிணையாய்ப் போன விரும்பினை கடிகைப் போதி
னுன்னிடத் துறும்வா ராதே லுன்பசி தீர்ப்ப தாகப்
பின்னிரண் டொன்றுக் கன்பாய்த் தருகுவன் பேது றேலென்
றன்னவன் றனக்குச் சொன்னா ராரணத் தமிர்தச் சொல்லார்

வேடனின் சொற்களைக் கேட்ட நபிகள், "குறிப்பிட்டவாறு உன் பசி தீர்க்க இந்த மான் வராவிட்டால் ஒன்றிற்கு இரண்டாக நான் மான்களைத் தருகிறேன்" என்று வேடனிடம் கூறினார். அது கேட்ட வேடன் நபிகளின் மீது நம்பிக்கை வைத்து நபிகளைப் பிணையாக ஏற்றுக் கொண்டு மானை விடுவித்தான்.

**4.1.13 கலைமானின் வேண்டுகோளும், பிணைமானின் நேர்மையும்**

மலைவற வினத்து ளாகி மனத்தினுட் கவலை நீக்கிக்
கலையினுள் வருத்தந் தீர்த்துக் கன்றினை யணைத்து விம்மு
முலையினை யூட்டி மென்மை முதுகுவா லடிநா நீட்டி
யலைதர வளைத்து மோந்து வேட்கையை யகற்றிற் றன்றே.

வேடனிடம் இருந்த மீண்ட மான் வேறு ஒரு காட்டில் தன் மான் கூட்டத்தையும், தனது குட்டியையும் ஆண்மானோடு கண்டு மகிழ்ச்சியுற்றது. பின்பு தன் ஆண் மானின் மனத்துன்பத்தை நீக்கி, குட்டியைப் பாலை உண்ணும்படி செய்து விட்டு, தன் சுற்றத்தாரிடமும் தன் கலைமானிடமும் தான் வேடனிடம் மாட்டிக் கொண்ட சூழலையும், நபிகள் பெருமான் தனக்காகப் பிணையாக இருக்க இசைந்து தன்னை விடுவித்தமையையும் கூறியது. அதனால் நான் மீண்டும் வேடனிடம் செல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்தது. அதைக் கேட்ட கலைமான், "பகைவர் கையில் இருந்து தப்பி வந்த மான் மீண்டும் கொலைப்பட விரும்பி மனிதர்கள் கையில் அகப்படுதல் உண்டோ?" என்று பெண்மானிடம் கூறியது.

பிணையென வுரைத்த மாற்றம் பிணைக்குல மனைத்துங் கேட்டுப்

பணைபடு கானி லுள்ள பதைப்பொடுந் துணுக்கி நிற்பத்
துணையெனுங் கலையி னங்கஞ் சோர்ந்துநெட் டுயிர்ப்பு வீங்கி
யணைதர வடுத்து நோக்கி யாற்றுவான் றொடங்கிற் றன்றே

இவ்வேண்டுகோளைக் கேட்ட பெண்மான், கலைமானை நோக்கி, “என்னைப் பிணைத்துக் கட்டி வைத்த வேடனின் மனத்தை மாற்றி, தன்னைப் பிணையாகக் கொண்டு என்னை விடுவித்தவர் இறைவன் நபி பெருமான். என் உயிரை வேடனின் பசிக்குத் தந்து நபியினது பிணையை மீட்க நான் மனம் ஒப்பவில்லை என்றால், நான் சுவர்க்கத்தை இழந்து தீய நரகில் புகுவது மட்டுமின்றி வேறு கதியும் பெருமையும் இழக்க வேண்டியிருக்கும். நபிகள் நாயகம் சொன்ன சொல்லை மாற்றிவிட்டு மறந்திருந்தால் நான் வரிப்புலியின் வாய்ப்பட்டு இறப்பதே தக்கதாகும். எனவே வாழும் விருப்பததைக் கைவிட வேண்டும். முன்பு ஒருநாள் நதியின் வெள்ளத்தில் மான் பிணையொன்று நடக்க, அதன்பின் நபியும் மற்றவரும் நடந்து சென்றனர். அப்போது அறிவில்லாத ஒருவன் நபிகள் சொல்லைக் கேட்காது மாறி நடந்ததால் நதிக்குள் வீழ்ந்து மடிந்தான். இந்த அதிசயத்தை அறியாதவர் யார்? இவற்றையெல்லாம் அறிந்தும், என்னை இங்கே நிறுத்துதல் நன்மையன்று” என்று கூறிக் கன்றுக்குப் பாலூட்டிவிட்டு வேடனிடம் செல்ல எழுந்தது.

**4.1.14 மானுடன் கன்றும் செல்ல இசைதல்** :

குருளையும் பிணையுங் கூடி வருவது குறித்து நோக்கி
முருகலர் புயத்தார் வள்ளன் முகம்மது மகிழ்ந்தன் பாக
விருளுறு மனத்த னான வேடனை யினிது கூவி
யொருபிணைக் கிரண்டுன் பாலில் வருவதென் றுரைத்திட் டாரால்

தன் கூட்டத்தை விட்டு அகன்று செல்ல மான் முற்பட்டபோது கன்றானது முன் வந்து, “உன்னை நீங்கி நான் உயிர் வாழ மாட்டேன். அது சத்தியம்” என்று கூறி பிணையுடன் தானும் செல்ல முடிவு எடுத்தது. அதைக் கண்ட பெண்மானும் இறக்க மனமுவந்து செல்வதால் முடிவில்லாத இன்பம் நமக்கு வந்து சேரும் என்று எண்ணி தன் கன்றோடு காட்டை நோக்கிச் சென்றது.

**4.1.15 வேடன் நல்லறிவு பெறல்** :

மதிமுக மகிழ்ச்சி கூர முகம்மது கலிமாச் சொல்ல
விதயமுற் றோதி வேட னினிதினி னீமான் கொண்டு
புதியினை வணங்கிச் செய்யுஞ் செய்தொழில் பொருந்த கேட்டு
நிதிமனைக் குரிய னாகி தீனிலை நெறிநின் றானே.

பெண்மானும் அதன் கன்றும் சேர்ந்து வருவதைக் கண்ட நபிகள் நாயகம் வேடனை அழைத்து, “ஒரு பிணைக்கு இரண்டாக உன்னிடம்

வருகின்றன பார்" என்று கூறினார். பெண்மானும் அதன் கன்றும் நபிகள் பாதத்தில் பணிந்து "பாவியாகிய எனக்காக வேடனுக்குத் தங்களையே பிணையாக்கினீர். இப்போது மீட்டருள வேண்டும்" என்றுரைத்தது. இதனைக் கேட்ட முகமது நபி அவற்றின் பண்பினைச் சுட்டிக் காட்டி, "இந்தப் பிணையை விட்டு விட்டு உனது பசியினைச் தீர்த்துக் கொண்டு பெருநகரினை அடைக" என்றார். வேடனும், "நான் வீடு பேறு பெற்றேன். வாழ்ந்தேன்" என்று அவர் பாதத்தில் வீழ்ந்தான். பின்பு, "வேதநாயகரே என்பால் கலிமாவினை ஓதும். நான் வெறும் கானக வேடன். விலங்கை ஒத்தவன். நான் தெளிவடையுமாறு இஸ்லாம் நெறிக்கு உரியவனாக என்னை மாற்றி அருள வேண்டும்" என்று இரு கையாலும் ஏந்தி நின்றி மகிழ்வோடு கூறினான்.

தேனைக்குங் குமங்கள் சிந்தச் செழித்ததிண் புயத்து வள்ளல்
கானக்குவ் விடத்திற் காட்டுங் கமலமென் பதத்தைப் போற்றித்
தானைக்கும் பதிக்கு மியானே தலைவனென் பவர்போல் வேடன்
மானைக்கொண் டுவரப் போயீ மானைக்கொண் டகத்திற் புக்கான்

முகமது நபிகள் மகிழ்வோடு கலிமா சொல்ல, வேடன் அதனை மனங்கொண்டு ஏற்று இறை நம்பிக்கை வைத்து, அதன்படி நடந்து பெருஞ்செல்வனாகித் தீன் வழியல் நிலையாக நின்றான். மேலும், மானை நோக்கி, "உன்னால் மனித வாழ்வில் பெறக்கூடிய உயர்ந்த கதியினைப் பெற்றேன். பிறவி நோயைப் போக்கினேன். நீயும் பயத்தை விட்டுக் கன்றுடன் உன் கலைமானிடம் சென்று நல்லொழுக்கப்படி வாழ்வாயாக" என்று கூறி வாழ்த்தி அனுப்பினான்

# அலகு - 5

## 5. மொழிப் பயிற்சி

### 1. இலக்கணக் குறிப்பு

5.1.1**பண்புத்தொகை** :

பண்புப் பெயர்ச் சொல்லில் உள்ள மை விகுதி கெட்டு, பெயர்ச்சொல்லுடன் சேரும்போது ஆகிய என்னம் பண்புருபு தொக்கி வந்தால் அச் சொல் பண்புத் தொகையாகும். நிறம், வடிவம், அளவு, சுவை முதலியனவாக வரும்.

கருங்குவளை - நிறம் : வட்ட நிலா - வடிவம் : இருகண் - அளவு: தீம்பாரு சுவை

சான்றுகள் :

நன்செய்

புன்செய்

பெண்மணல்

தீஞ்சுவை

**5.1.2 வினைத்தொகை** :

காலம் மறைந்து வரும் பெயரெச்சம் வினைத் தொகை ஆகும்.

சான்று: சுட்ட சோறு

சுடும்சோறு

சுடுகின்ற சோறு

**5.1.3உம்மைத் தொகை**

எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என்னும் நான்கு வகை அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்துத் தொடரும் அளவைப் பெயர்களுள் 'உம்' என்ற உருபு மறைத்து நிற்பவை உம்மைத் தொகை ஆகும்.

சான்று:

கபில பரணர் - எண்ணலளவை உம்மைத்தொகை.

கழஞ்சேகால் - எடுத்தல் அளவை உம்மைத்தொகை.

கலனே துணி - முகத்தல் அளவை உம்மைத்தொகை.

சாண் அரை - நீட்டல் அளவை உம்மைத்தொகை.

சேர,சோழ,பாண்டியன்

புலி,வில், கொண்டை } – பன்மொழித் தொடர் உம்மைத்தொகை

### 5.1.4அன்மொழித் தொகை

வேற்றுமைத் தொகை முதலிய ஐந்து வகைத் தொடர்மொழிகளுக்குப் புறத்தே அவையல்லாத பிற சொற்கள் மறைந்து வருதல் அன்மொழித் தொகையாகும்.

சான்று:

பூங்குழல் வந்தாள் - வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தாழ் குழல் தந்தாள் - வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

கருங்குழல் வந்தாள்- பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

### 5.1.5 இருபெயரொட்டுப் பண்புத்தொகை

சிறப்புப் பெயர் முன்னும், பொதுப் பெயர் பின்னும் வருவது இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

சான்று: தமிழ்மொழி

சாரைப் பாம்பு

சாரை - சிறப்புப் பெயர்

பாம்பு- பொதுப்பெயர்

## 5.2ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

ஒரு பொருளைக் குறிக்க இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து வருவது ஒருபொருட்பன்மொழி எனப்படும்.

எடு: ஒரு தனி, மீமிசை, உயர்ந்தோங்கு

**5.2.1 உரிச்சொல்**:

பெயரும் வினையும் அல்லாமல் பெயர், வினை போல அடிச்சொல் பெற்றுப் பொதுவாகப் பண்புப்பொருள் குறிப்பனவாகவும் பெயர்க்கும் வினைக்கும் அடையாக வருவனவாகவும் உரிச்சொற்கள் அமையும். ஒரு பொருள் குறித்த பல சொல் எனவும் பலபொருள் குறித்த ஒரு சொல் எனவும் இருவகைப்படும். மிகுதி எனும் ஒரு பொருள்

குறித்த பல சொற்கள்: சால, உறு, தவ.நனி, கூர், கழி

எ.டு:

சாலப்பலர்

உறுபுகழ்

தவத்திரு

நனிபேதை

களிகூர்மனம்

கழிபேருவகை

5.2.2**ஒருபொருள் குறித்த பலபெயர்த்திரிசொல்**:

(அ) இதழ், ஏடு, ஓலை, ஈர்க்கு, தண்ணடை, தோடு, பத்திரம், பல்லவம். பாசடை, பாசிலை, பாளை, மடல், முறை - இப்பெயர்த் திரி சொற்கள் யாவும் ‘இலை’ என்னும் ஒரே பொருளைத் தருகின்றன.

(ஆ) அளகம். ஓரி, கூழை, குழல், கொண்டை, கோதை, அரியல், சுருள், பின்னல், பின்னகம், பனிச்சை இப்பெயர்த் திரிசொற்கள் யாவும் ‘கூந்தல்’ என்ற ஒரே பொருளைத் தருகின்றன.

## 5.3 பலபொருள் குறித்த ஒருசொல்

கடி என்னும் ஓர் உரிச்சொல், பல பொருள்களைத் தரும். காவல், கூர்மை. மணம், ஒளி, அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை, ஒலித்தல், விலக்கல்,மங்கலம், கரிப்பு ஆகிய பொருள்களை இவ்வுரிச் சொல் தருகிறது

.

எ.டு:

கடிநகர்

கடிமாலை

கடிகா

கடிசென்றான்

கடிமுரசு

கடிவினை

பெயரைச் சிறப்பிக்கும் உரிச்சொல் பெயர் உரிச்சொல் எனப்படும். வினையைச் சிறப்பிக்கும் உரிச்சொல் வினையுரிச்சொல் எனப்படும்.

உறு புகழ் - பெயர் உரிச்சொல்

சாலப் புகழ்ந்தான் - வினை உரிச்சொல்.

**5.3.1ஒருகுணம் (பொருள்) தழுவிய பல உரிச்சொற்கள்:**

மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, இசை, கூற்று, புகறல், மொழி,கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் என்னும் பதினாறும் சொல்' என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள்.

**5.3.2 ஒரு குணம் (பொருள்) உடைய பல சொற்கள்:**

முழக்கு. இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரக்கு. அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கவ்வை, கம்பலை, அரவம், ஆர்ப்பு ஆகிய இருபத்திரண்டும் இவை போன்ற பிறவும் 'ஓசை' என்னும் ஒரு குணத்தை உணர்த்தி வரும் உரிச்சொற்கள்.

கற்றவர்களுக்கு மட்டும் பொருள் புரியும்படி அமைந்த சொற்கள் திரி சொற்கள் எனப்படும். இத்திரிச்சொற்கள் பெயர், வினை என இரு வகைப்படும். இவை ஒருபொருள் குறித்த பலபெயர்த்திரிசொற்கள். பல பொருள் குறித்த ஒருபெயர்த்திரிசொல் என்றும் ஒரு பொருள் குறித்த பல வினைத்திரிசொற்கள் என்றும் பலபொருள் குறித்த ஒரு வினைத்திரிசொல் என்றும் வகைப்படுத்தப்படும்.

**5.3.3 பலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்:**

(அ ) 'இசை என்ற சொல் ஓசை, ஒலி, புகழ், சொல், பாட்டு, பண்பு, இனிமை, இலாபம் எனப் பல்வேறு பொருள்களைக் குறிக்கும்.

(ஆ ) 'மலை' என்ற சொல் அடுக்கல், ஓங்கல், கல், கோடு, சிலம்பு, பொருப்பு எனப் பல பொருட்களைக் குறித்து வரும்.

**5.3.4 ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல்:**

(அ) அருந்தல், அயிறல், ஆர்தல், உண்டல், தின்றல், துாய்த்தல், நுகர்தல், பருகுதல், மார்தல் - இவ்வினைத் திரிசொற்கள் யாவும் உண்ணல் என்ற ஒரே பொருளைத் தருகின்றன.

(ஆ) முழங்குதல், இரட்டுதல், கலித்தல், இசைத்தல், துவைத்தல், பிளிறல், இரைத்தல், அழுங்குதல், ஆர்த்தல், குரைத்தல், கனைத்தல்- இவ்வினைத் திரிசொற்கள் யாவும் 'ஒலித்தல்' என்ற ஒரே பொருளை உணர்த்துகின்றன.

**5.3.5பலபொருள் குறித்த ஒருவினைத்திரிசொல்:**

''இகுத்தல்' என்ற ஒரு சொல் அழித்தல், அழைத்தல், இரித்தல், எரித்தல், கொல்லல், தாண்டல், தாழ்த்துதல், ஒலித்தல், யாழ் வாசித்தல், அறைதல், தொங்கவிடுதல் எனப் பல பொருள்களைக் குறிக்கும்.

**5.3.6 பலபொருள் குறித்த ஒருசொல்:**

சூரியன் - அலரி, எரி, எல், எல்லை, கதிர், சுடலை

அட்டம் - எட்டு,சாதிக்காய், அண்ணம், மேல்வீடு, குறுக்கு விரோதம்.

அடுதல் - சமைத்தல், துன்புறுத்தல், போரிடுதல், கொல்லுதல், வெல்லுதல், கடைதல், உண்டுபண்ணுதல்.

அதம் - அத்திமரம், சங்கரித்தல், அழித்தல், நாசம் பண்ணல், பாதாளம், தாழ்வு, பள்ளம்

**பயிற்சி - 1**

1. அறுநெஞ்சம்
2. தீஞ்சுவை
3. கண்ணோட்டம்
4. அறத்திகிரி
5. கன்னல் மொழி
6. நவமணிப் பொன்
7. மலர்க்கரம்
8. சூழ்கடல்
9. வெம்பசி

10. வெங்கனல்

11. செய்வேட்கை

12. வேற்கண்

பயிற்சி 2

1. முகில்வண்ணன்
2. ஆலமரம்
3. கடல்மலை
4. உடல் வன்மை
5. எழுகுருதி
6. சுடுசோறு
7. புனைமலர்
8. தொன்னிதி
9. வரிசிலை
10. தேமொழி
11. செந்தீ
12. கல்லெழுத்து

## UNIT - I. DISCUSSION QUESTIONS WITH HINT

1. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியம் ஆகியவற்றின் பங்களிப்பை விவாதிக்கவும்.

Hint:

சங்க இலக்கியத்தின் சமூக-வரலாற்றுப் பிரதிபலிப்பு, திணை முறை, பக்தி இலக்கியத்தின் சமய மாற்றம், நாயன்மார்கள்-ஆழ்வார்கள், மொழி வளர்ச்சி ஆகிய அம்சங்களை ஒப்பிட்டு விவாதிக்கவும்.

2. சிற்றிலக்கியம் தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பெற்றதற்கான காரணங்களை விவாதிக்கவும்.

Hint:

சிற்றிலக்கியத்தின் வரையறை, சங்க காலத்திலிருந்து வளர்ச்சி, பக்தி இலக்கியத்தின் தாக்கம், பொதுமக்கள் வாழ்க்கையுடன் உள்ள தொடர்பு, இலக்கிய வடிவங்களின் பல்வகைத் தன்மை.

## அலகு - II : DISCUSSION QUESTIONS

1. நந்திக் கலம்பகம், முத்சதாள்ளாயிரம் மற்றும் தமிழ்விடுதூது ஆகிய நூல்கள் அக, புற, பக்தி இலக்கிய மரபுகளை ஒருங்கிணைக்கும் விதத்தை விமர்சன ரீதியாக விவாதிக்க.

**Hint:**

- கலம்பகத்தில் அக-புற இணைவு
- முத்சதாள்ளாயிரத்தில் அரசர் புகழ் (புறம்)
- தமிழ்விடுதூதில் பக்தி மற்றும் மொழிப் பெருமை
- மூன்று நூல்களிலும் காணப்படும் இலக்கிய நோக்கம்
- சங்க மரபின் தொடர்ச்சி

2. தமிழ்விடுதூது நூலில் 'தமிழ்' ஒரு உயிருள்ள தெய்வமாக உருவகப்படுத்தப்படுவது, மொழி அடையாளம் மற்றும் பண்பாட்டுப் பாதுகாப்பு குறித்த ஒரு கருத்தியலாக எவ்வாறு விளங்குகிறது? விவாதிக்க.

**Hint:**

- தூது இலக்கிய மரபில் புதிய முயற்சி
- தமிழைத் தூதுவிடும் உவமை
- சிவபெருமான் - மதுரை - தமிழ் தொடர்பு
- மொழி = அடையாளம் என்ற கருத்து
- இன்றைய சமூகச் சூழலுடன் தொடர்பு

## UNIT - V : DISCUSSION QUESTIONS

1. ‘தொகை’ என்ற இலக்கணக் கருத்து தமிழ் மொழியின் கட்டமைப்பு அழகையும் பொருள் செறிவையும் எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

பண்புத் தொகை, வினைத்தொகை, உம்மைத் தொகை ஆகியவற்றின் பங்கை விவாதிக்கவும்.

Hint:

தொகைகள் சொற்களின் எண்ணிக்கையை குறைத்து,

அதிக பொருளை வெளிப்படுத்தும் விதத்தை

உகந்த எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்ந்து எழுதவும்.

2. ஒருச்சொல் பல பொருள்களைத் தரும் தன்மை தமிழ் மொழியின் தனிச்சிறப்பாக எவ்வாறு விளங்குகிறது?

பலபொருள் உரிச்சொற்கள் மற்றும் திரிச்சொற்கள் மொழி பயன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை விவாதிக்கவும்.

**Hint**:

‘கடி’, ‘இசை’, ‘மலை’ போன்ற சொற்களை எடுத்துக்கொண்டு

சூழ்நிலைக்கேற்ப பொருள் மாறும் தன்மையை விவாத முறையில் விளக்கவும்.

**அலகு - II**

1.நந்திக்கலம்பகம் நூலின் ஆசிரியர் யார்.

அ) அறியப்படவில்லை ஆ) உவேசா

இ) பெருஞ்சித்தனார் ஈ) கபிலன்

விடை: அ) அறியப்படவில்லை

2. கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டுள்ளது?

அ) 18 ஆ) 4

இ) 12 ஈ) 9

விடை: அ) 18

3. புறத்திரட்டு என்னும் நூலில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள முத்தொள்ளாயிரச் செய்யுள்களின் எண்ணிக்கை யாவை ?

அ) 108 ஆ) 4

இ) 12 ஈ) 9

விடை: அ) 108

4. முத்தொள்ளாயிரம்________பாவகையைச் சார்ந்தது.

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

விடை: அ) வெண்பா

5 நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைய தலைவன் யார்?

அ) அறியப்படவில்லை ஆ) மூன்றாம் நந்திவர்மன்

இ) பெருஞ்சித்தனார் ஈ) கபிலன்

விடை: ஆ) மூன்றாம் நந்திவர்மன்

6. தமிழ்விடு தூது நூலில் உள்ள கண்ணிகளின் எண்ணிக்கை யாவை?

அ) 268 ஆ) 4

இ) 12 ஈ) 9

விடை: அ) 268

7. அச்சமில்லாத நாடாக முத்தொள்ளாயிரம் எந்த நாட்டைக் கூறுகிறது.

அ) சேர நாடு ஆ) பாண்டிய நாடு

இ) பல்லவ நாடு ஈ) சோழ நாடு

விடை: அ) சேர நாடு

8. எந்த ஆண்டில் தமிழ்விடு தூது பதிப்பிக்கப்பட்டது?

அ) 1930 ஆ) 1904

இ) 1972 ஈ) 1890

விடை: அ) 1930

9. இரண்டு இரண்டு பூக்களை வைத்து தொடுக்கப்படும்______அழைக்கப்படும்.

அ) கண்ணி ஆ) கலம்பகம்

இ) சிந்து ஈ) இசைப் பாடல்

விடை: அ) கண்ணி

10. தமிழ்விடு தூது நூலைப் பதிப்பித்தவர் யார்?

அ) கா. சு. பிள்ளை ஆ) உவேசா

இ) பெருஞ்சித்தனார் ஈ) கபிலன்

விடை: ஆ) உவேசா

**UNIT -III**

1. திருக்குற்றாலக் குறவஞ்சி நூலின் ஆசிரியர் யார்?
   அ) திரிகூடராசப்பக் கவிராயர் ஆ) உ வே சா
   இ) பெருஞ்சித்தனார் ஈ)
   விடை: அ)திரிகூடராசப்பக் கவிராயர்
2. திருக்குற்றாலக் குறவஞ்சி நூலின் பாட்டுடைய தலைவன் யார்?
   அ) அறியப்படவில்லை ஆ) மூன்றாம் நந்திவர்மன்
   இ) பெருஞ்சித்தனார் ஈ) குற்றாலநாதர்
   விடை: ஈ) குற்றாலநாதர்
3. குறவஞ்சி எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?
   அ) சங்க இலக்கியம். ஆ) அற இலக்கியம்
   இ) சிற்றிலக்கியம். ஈ) இக்கால இலக்கியம்

விடை: இ) சிற்றிலக்கியம்.

4. பள்ளு எந்த இலக்கிய வகையைச் சார்ந்தது?
   அ) சங்க இலக்கியம். ஆ) அற இலக்கியம்
   இ) சிற்றிலக்கியம். ஈ) இக்கால இலக்கியம்
   விடை: இ) சிற்றிலக்கியம்.
5. பிள்ளைத்தமிழ் எத்தனை பருவங்களைக் கொண்டுள்ளது?
   அ) 1 ஆ) 3
   இ) 10. ஈ) 7
   விடை: இ) 10
6. பெண்பால் பிள்ளைத்தமிழ் எத்தனை பருவங்களைக் கொண்டுள்ளது?
   அ) 1 ஆ) 3
   இ) 10. ஈ) 7
   விடை: இ) 10
7. ஆண்பால் பிள்ளைத்தமிழ் எத்தனை பருவங்களைக் கொண்டுள்ளது?
   அ) 1 ஆ) 3
   இ) 10. ஈ) 7
   விடை: இ) 10
8. இயேசு பிரான் பிள்ளைத்தமிழ் எத்தனை பருவங்களைக் கொண்டுள்ளது?
   அ)2 ஆ) 3
   இ) 10. ஈ) 7
   விடை: இ) 10
9. பிள்ளைத்தமிழ் நூலின் முதல் பருவத்தின் பெயர் என்ன?
   அ) செங்கீரை ஆ) வருகை
   இ) காப்பு. ஈ) தால்
   விடை: இ) காப்பு.

10. பிள்ளைத்தமிழ் நூலின் இரண்டாம் பருவத்தின் பெயர் என்ன?
அ) செங்கீரை ஆ) வருகை
இ) காப்பு. ஈ) தால்
விடை: அ) செங்கீரை

**அலகு - IV**

1. சீறாப்புராணத்தின் ஆசிரியர் யார்?
அ) ராபர்ட் டீ நொபிலி ஆ) வீரமாமுனிவர்
இ) உமறுப் புலவர் ஈ) எச். எ. கிருஷ்ணபிள்ளை
விடை; இ) உமறுப் புலவர்

2 புராணம் என்பதன் பொருள் என்ன?
அ) இலக்கியம் ஆ) கவிதை
இ) வரலாறு ஈ) இசை
விடை; இ) வரலாறு

2. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களைக் கொண்டுள்ளது.
அ)2 ஆ) 3. இ) 10. ஈ) 7
விடை: ஆ) 3

3. சீறாப்புராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகிறது.
அ) ராபர்ட் டீ நொபிலி ஆ) திருநபிகள் நாயகம்
இ) உமறுப் புலவர் ஈ) எச். எ. கிருஷ்ணபிள்ளை
விடை;ஆ) திருநபிகள் நாயகம்

4. சீறாப்புராணம் எத்தனை படலங்களைக் கொண்டுள்ளது.
அ)2 ஆ) 92 இ) 10. ஈ) 7
விடை: ஆ) 92

5. சீறாப்புராணம் எத்தனை பாடல்களைக் கொண்டுள்ளது

அ)2091 ஆ)1023. இ) 2486. ஈ) 5027
விடை: ஈ) 5027

6. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்?

அ) சீதக்காதி ஆ) திருநபிகள் நாயகம்
இ) கடிகை முத்துப் புலவர் ஈ) எச். எ. கிருஷ்ணபிள்ளை
விடை;அ) சீதக்காதி

7. உமறுப் புலவரின் ஆசிரியர் யார்?

அ) சீதக்காதி ஆ) திருநபிகள் நாயகம்
இ) கடிகை முத்துப் புலவர் ஈ) எச். எ. கிருஷ்ணபிள்ளை
விடை;இ) கடிகை முத்துப் புலவர்

8. சின்னச் சீறா என்னும் நூலின் ஆசிரியர் யார்?

அ) சீதக்காதி ஆ) திருநபிகள் நாயகம்
இ) கடிகை முத்துப் புலவர் ஈ) பனு அகமது

விடை; ஈ) பனு அகமது

9. காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் நூல் எது?

அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தொல்காப்பியம்
இ) நேமி நாதம் ஈ) தண்டியலங்காரம்
விடை; ஈ) தண்டியலங்காரம்

10. .மானுக்குப் பிணைநின்ற படலம் எந்தக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது?

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவக சிந்தாமணி
இ) குண்டலகேசி ஈ) சீறாப்புராணம்
விடை; ஈ) சீறாப்புராணம்

**அலகு – V**

1. கருங்குவளை இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; அ) பண்புத்தொகை
2. காலம் மறைந்து வரும் பெயரெச்சம்________ஆகும்
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; ஆ) வினைத்தொகை
3. கபில பரணர் இலக்கணக் குறிப்பு தருக.
   அ) உம்மைத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; அ) உம்மைத்தொகை
4. சுடுசோறு இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; ஆ) வினைத்தொகை
5. வீசு தென்றல் இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; ஆ) வினைத்தொகை
6. சாரைப்பாம்பு இலக்கணக் குறிப்பு தருக.
   அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
7. அலரி, எல், கதிர் – பல பொருள் குறித்த ஒரு சொல்லைத் தேர்ந்தெடுக்க.
   அ) சூரியன் ஆ) சந்திரன்
   இ) ஆறு ஈ) வேகம் மேகம்
   விடை; அ) சூரியன்
8. உறுப்புகழ் – எந்தச் சொல் வகையைச் சேர்ந்தது.
   அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல்
   இ) பெயர்ச்சொல் ஈ) திரிசொல்
   விடை; அ) உரிச்சொல்
9. ரோஜாப் பூ இலக்கணக் குறிப்பு தருக.
   அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
   விடை; அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
10. பூங்குழல் வந்தாள் இலக்கணக்குறிப்பு தருக.

அ)அன்மொழித்தொகை ஆ) வினைத்தொகை
இ) பெயரெச்சம் ஈ) வினையெச்சம்
விடை; அ) அன்மொழித்தொகை

**UNIT - I.    DISCUSSION QUESTIONS WITH HINT**

1. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் சங்க இலக்கியம் மற்றும் பக்தி இலக்கியம் ஆகியவற்றின் பங்களிப்பை விவாதிக்கவும்.

Hint:

சங்க இலக்கியத்தின் சமூக-வரலாற்றுப் பிரதிபலிப்பு, திணை முறை, பக்தி இலக்கியத்தின் சமய மாற்றம், நாயன்மார்கள்-ஆழ்வார்கள், மொழி வளர்ச்சி ஆகிய அம்சங்களை ஒப்பிட்டு விவாதிக்கவும்.

2. சிற்றிலக்கியம் தமிழ் இலக்கியத்தில் தனி இடம் பெற்றதற்கான காரணங்களை விவாதிக்கவும்.

Hint:

சிற்றிலக்கியத்தின் வரையறை, சங்க காலத்திலிருந்து வளர்ச்சி, பக்தி இலக்கியத்தின் தாக்கம், பொதுமக்கள் வாழ்க்கையுடன் உள்ள தொடர்பு, இலக்கிய வடிவங்களின் பல்வகைத் தன்மை.

## அலகு - II : DISCUSSION QUESTIONS

1. நந்திக் கலம்பகம், முத்சதாள்ளாயிரம் மற்றும் தமிழ்விடுதூது ஆகிய நூல்கள் அக, புற, பக்தி இலக்கிய மரபுகளை ஒருங்கிணைக்கும் விதத்தை விமர்சன ரீதியாக விவாதிக்க.

**Hint:**

- கலம்பகத்தில் அக-புற இணைவு
- முத்சதாள்ளாயிரத்தில் அரசர் புகழ் (புறம்)
- தமிழ்விடுதூதில் பக்தி மற்றும் மொழிப் பெருமை
- மூன்று நூல்களிலும் காணப்படும் இலக்கிய நோக்கம்
- சங்க மரபின் தொடர்ச்சி

2. தமிழ்விடுதூது நூலில் 'தமிழ்' ஒரு உயிருள்ள தெய்வமாக உருவகப்படுத்தப்படுவது, மொழி அடையாளம் மற்றும் பண்பாட்டுப் பாதுகாப்பு குறித்த ஒரு கருத்தியலாக எவ்வாறு விளங்குகிறது? விவாதிக்க.

**Hint:**

- தூது இலக்கிய மரபில் புதிய முயற்சி
- தமிழைத் தூதுவிடும் உவமை
- சிவபெருமான் - மதுரை - தமிழ் தொடர்பு
- மொழி = அடையாளம் என்ற கருத்து
- இன்றைய சமூகச் சூழலுடன் தொடர்பு

## UNIT - V : DISCUSSION QUESTIONS

1. ‘தொகை’ என்ற இலக்கணக் கருத்து தமிழ் மொழியின் கட்டமைப்பு அழகையும் பொருள் செறிவையும் எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

பண்புத் தொகை, வினைத்தொகை, உம்மைத் தொகை ஆகியவற்றின் பங்கை விவாதிக்கவும்.

Hint:

தொகைகள் சொற்களின் எண்ணிக்கையை குறைத்து,

அதிக பொருளை வெளிப்படுத்தும் விதத்தை

உகந்த எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்ந்து எழுதவும்.

2. ஒருச்சொல் பல பொருள்களைத் தரும் தன்மை தமிழ் மொழியின் தனிச்சிறப்பாக எவ்வாறு விளங்குகிறது?

பலபொருள் உரிச்சொற்கள் மற்றும் திரிச்சொற்கள் மொழி பயன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தை விவாதிக்கவும்.

**Hint**:

‘கடி’, ‘இசை’, ‘மலை’ போன்ற சொற்களை எடுத்துக்கொண்டு

சூழ்நிலைக்கேற்ப பொருள் மாறும் தன்மையை விவாத முறையில் விளக்கவும்.

**அலகு - I**

**1. தமிழ் இலக்கியம் என்றால் என்ன? இலக்கியம் சமுதாய வாழ்க்கையை எவ்வாறு பிரதிபலிக்கிறது?**

*Hint:*

இலக்கியத்தின் வரையறை, சமுதாயம்-இலக்கியம் உறவு, நாகரிகம், பண்பாடு, அரசியல், சமயம் ஆகிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதுக.

**2. சங்ககால இலக்கியங்களின் சிறப்புகளை விளக்குக.**

*Hint:*

சங்கம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திணை இலக்கியம், சங்க இலக்கியங்கள் வரலாற்றுப் பெட்டகமாக விளங்கும் தன்மை.

**3. சங்கம் மருவிய கால இலக்கியங்கள் 'நீதி இலக்கியங்கள்' என அழைக்கப்படுவதற்கான காரணங்களை எழுதுக.**

*Hint:*

வெண்பா யாப்பு, அக-புற அறம், சமூக ஒழுக்கம், நாலடி நான்மணி, நானாற்பது போன்ற நூல்கள்.

**4. பக்தி இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்குக.**

*Hint:*

நாயன்மார்கள், ஆழ்வார்கள், சைவ-வைணவ சமயங்கள், தேவாரம், நாலாயிர திவ்ய பிரபந்தம், தமிழ் - பக்தியின் மொழி.

**5. காப்பிய இலக்கியம் என்றால் என்ன? பெருங்காப்பியம் மற்றும் சிறுகாப்பியங்களின் வேறுபாடுகளை எழுதுக.**

*Hint:*

காப்பியத்தின் இலக்கணம், நான்கு உறுதிப்பொருட்கள், ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள்.

**அலகு - II : Assignment Questions**

1. கலம்பகம் என்ற சிற்றிலக்கிய வகையின் வரையறை, அமைப்பு மற்றும் நந்திக் கலம்பகத்தின் இலக்கியச் சிறப்புகளை விளக்குக.

**Hint:**

- கலம்பகம் - சொற்பொருள்
- 18 உறுப்புகள்
- நந்திக் கலம்பகத்தின் தோற்றம்
- தமிழ் சிற்றிலக்கியத்தில் அதன் முக்கியத்துவம்

2. நந்திக் கலம்பகத்தில் பாட்டுடைத் தலைவனாகிய நந்திவர்மனின் வீரச்சிறப்பு, கொடைச்சிறப்பு மற்றும் சிவபக்தி எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன?

**Hint:**

- நந்திவர்மனின் ஆட்சி
- போர் வெற்றிகள்
- சிவபக்தி
- உவமை, உருவகம்

3. நந்திக் கலம்பகத்தில் காணப்படும் 'தலைவி கார்ப்பருவம் கண்டு வருந்துதல்', 'காலம்', 'மேகவிடுதூது', 'கையறு நிலை' ஆகிய பகுதிகளின் இலக்கிய நயங்களை விளக்குக.

**Hint:**

- அகத்திணை மரபு
- கார்கால வருணனை
- தூது இலக்கிய மரபு
- கையறு நிலையின் துயர உணர்ச்சி

4. முத்தொள்ளாயிரம் நூலின் அமைப்பு, மரபு மற்றும் மூவேந்தர்களின் (சேரர், சோழர், பாண்டியர்) புகழ் பாடல்களின் இலக்கியச் சிறப்புகளை விளக்குக.

**Hint:**

- பெயர் காரணம்
- பாடல் எண்ணிக்கை
- அக / புறப் பாடல்கள்
- அரசர் புகழ் வருணனை

5. தமிழ்விடுதூது நூலின் பாடப்பொருள், மரபு மற்றும் தமிழின் பெருமையை எடுத்துரைக்கும் விதத்தை விளக்குக.

**Hint:**

- தூது இலக்கிய மரபு
- தமிழைத் தூதுவிடும் புதுமை
- சிவபெருமான் - மதுரை தொடர்பு
- தமிழின் தெய்வீகத் தன்மை
- மொழிப் பெருமை கருத்து

## அலகு - V : Assignment Questions

1. பண்புத் தொகை (பண்புத்தொகை) என்றால் என்ன?

அதன் இலக்கண வரையறை, அமைப்பு மற்றும் எடுத்துக்காட்டுகளை விரிவாக விளக்குக.

**Hint:**
பெயர்ச்சொல்லுடன் சேரும் போது பண்புருபு தொக்கி வருதல், நிறம், வடிவம், அளவு, சுவை போன்ற பண்புகளை நினைவில் கொள்ளவும்.
(எ.கா: தீஞ்சுவை, கருங்குழல்)

2. வினைத்தொகை மற்றும் உம்மைத் தொகை ஆகியவற்றை விளக்குக.

இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

**Hint:**
வினைத்தொகையில் கால மாற்றம் முக்கியம்.
உம்மைத் தொகையில் 'உம்' உருபு மறைந்து வருவது கவனிக்கவும்.

3. அன்பொழித் தொகை என்றால் என்ன?அதன் வகைகளையும், எடுத்துக்காட்டுகளையும் விளக்குக.

**Hint:**
பெயர், வினை, பண்புத் தொகைகளுக்கு வெளியே சில சொற்கள் மறைந்து வருவது
அன்பொழித் தொகையாகும் என்பதை நினைவில் கொள்ளவும்.

4. ஒருபொருள் குறித்த பல சொற்கள் என்ற கருத்தை விளக்குக.

உரிச்சொல் மற்றும் பெயர்த் திரிச்சொல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கவும்.

**Hint:**
ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் தொடர்ச்சியாக வருவது, ‘இலை’, ‘கூந்தல்’ போன்ற எடுத்துக்காட்டுகளை பயன்படுத்தவும்.

5. பலபொருள் குறித்த ஒருச்சொல் பற்றி எழுதுக.

‘கடி’ அல்லது ‘இசை’ என்ற சொல்லை மையமாகக் கொண்டு விளக்குக.

**Hint:**
ஒரே சொல் வெவ்வேறு சூழல்களில் பல பொருள்களைத் தருவதை எடுத்துக்காட்டுகளுடன் எழுதவும்.

TIME: 3 Hours பகுதி அ Maximum: 100 Marks

கீழ்க்கண்ட வினாக்களில் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும் (10X2=20)

1. இலக்கியம் என்றால் என்ன
2. சிற்றிலக்கியம் எத்தனை வகைப்படும்?
3. சிற்றிலக்கிய இலக்கணம் கூறும் நூல்கள்?
4. தமிழில் முதலில் தோன்றிய கலம்பக நூல் எது?
5. நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
6. முத்தொள்ளாயிரம் நூலின் பாடல் எண்ணிக்கை?
7. முத்தொள்ளாயிரம் நூலில் பாடப்படும் மன்னர்களின் மரபு பெயர்?
8. தமிழ்விடு தூது கண்ணிகளின் எண்ணிக்கை?
9. திருக்குற்றால குறவஞ்சி நூலின் ஆசிரியர் யார்?
10. குறவஞ்சி- குறிப்பு வரைக
11. முக்கூடற்பள்ளு - குறிப்பு வரைக
12. செங்கதிர் – இலக்கண குறிப்பு தருக?

கீழ்க்கண்ட வினாக்களில் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும் (6*5=30)

13. சிற்றிலக்கிய தோற்றமும் வளர்ச்சியும் குறிப்பு வரைக?
14. நந்திக்கலம்பகம் கூறும் நந்திவர்மனின் கொடை சிறப்பினை விவரி?
15. திருக்குற்றாலக் குறவஞ்சி கூறும் மலை வளத்தினை விவரி?
16. முக்கூடற்பள்ளு கூறும் நாட்டு வளத்தை விவரி
17. இலக்கண குறிப்பு தருக : செங்கதிர், பைந்தமிழ்,அவளும் அவளும்,தாமரைக்கண், சாரைப்பாம்பு
18. குறிப்பு வரைக : 1.பண்புத்தொகை. 2.வினைத்தொகை 3. இருபெயரொட்டு பண்புத்தொகை
19. சீறாப்புராணம் கூறும் இயற்கை காட்சிகள் விவரி?

கீழ்க்கண்ட வினாக்களில் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும் (3*15=45)

20. தமிழ்விடு தூது நூல் கூறும் செய்திகளை தொகுத்துரைக்க?
21. சீறாப்புராணத்தில் மானுக்கு பிணைநின்ற படலம் கூறும் செய்திகளை விவரி?
22. இயேசு பிரான் பிள்ளைத் தமிழில் கூறும் சிறப்பு கருத்துகளை விவரித்து கட்டுரை வரைக?
23. முத்தொள்ளாயிரம் கூறும் சேர மன்னனின் வீரம்,கொடை சிறப்புகளை விவரித்து எழுதுக?

TIME: 3 Hours                    பகுதி அ

Maximum: 100 Marks

கீழ்க்கண்ட வினாக்களில் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும் (10X2=20)

1. இலக்கியம் - குறிப்பு வரைக?
2. கலம்பகம் குறித்து எழுதுக?
3. சிற்றிலக்கியம் 96 வகைப்படும் என முதலில் கூறிய நூல் எது ?
4. தமிழில் முதலில் தோன்றிய கலம்பக நூல் குறித்து குறிப்பு வரைக?
5. தமிழ்விடு தூது நூல் கூறும் இரண்டு கருத்துகளை எழுதுக ?
6. முத்தொள்ளாயிரம் நூல் கூறும் பாண்டிய மன்னனின் வீரத்தினை எழுதுக?
7. முத்தொள்ளாயிரம் நூல் கூறும் சேர மன்னனின் சிறப்பினை விவரி?
8. தமிழ்விடு தூது நூலின் சிறப்பினை எழுதுக ?
9. திருக்குற்றால குறவஞ்சி -குறிப்பு வரைக?
10. குறவஞ்சி- குறிப்பு வரைக
11. தமிழில் முதல் தோன்றிய பள்ளு இலக்கியம் எது?
12. முக்கூடற்பள்ளு - குறிப்பு வரைக?

கீழ்க்கண்ட வினாக்களில் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும் (6*5=30)

13. சிற்றிலக்கிய தோற்றமும் வளர்ச்சியும் குறிப்பு வரைக?
14. நந்திக்கலம்பகம் கூறும் நந்திவர்மனின் கொடை சிறப்பினை விவரி?
15. திருக்குற்றாலக் குறவஞ்சி கூறும் மலை வளத்தினை விவரி?
16. இயேசு பிரான் பிள்ளைத் தமிழில் கூறும் சிறப்பு கருத்துகளை விவரித்து கட்டுரை வரைகரி?
17. இலக்கண குறிப்பு தருக : தாமரைப்பூ, செந்தமிழ், சுடுசோறு,கயல்விழி,நன்செய்
18. குறிப்பு வரைக : 1.பண்புத்தொகை. 2.வினைத்தொகை 3. இருபெயரொட்டு பண்புத்தொகை

19. சீறாப்புராணம் கூறும் இயற்கை காட்சிகள் விவரி?

கீழ்க்கண்ட வினாக்களில் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும்
(3*15=45)

20. தமிழ்விடு தூது நூல் கூறும் செய்திகளை தொகுத்துரைக்க?

21. சீறாப்புராணத்தில் மானுக்கு பிணைநின்ற படலம் கூறும் செய்திகளை விவரி?

22. முக்கூடற்பள்ளு கூறும் பள்ளியர் ஏசல் பற்றி விவரி?

23. முத்தொள்ளாயிரம் கூறும் சேர மன்னனின் வீரம்,கொடை சிறப்புகளை விவரித்து எழுதுக?